# தென்னாட்டுப் புதுவாசகம்—II

39

39/3-50.



OFFICE OF THE REGISTRAR ...
JUL 1950
MADRAS

...வாஹலன் கம்பெனி
...லாப்பூர், மதராஸ்

TB
031(7)
N50
13234.

# தென்னாட்டுப் புதுவாசகம்

## இரண்டாம் புத்தகம்

[இரண்டாம் பாரத்துக்கு]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1950
MADRAS

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது

எஸ். வாஸன் கம்பெனி,
மயிலாப்பூர் : : மதராஸ்

பதிப்புரிமை] 1950 [விலை அணா 14

மூன்றாம் பதிப்பு—1950

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
133234.
சென்னை-600 008.

*Approved by the Text-Book Committee
for class use—Vide Fort St. George Gazette
Part I-B, Page 108, dated 23-5-50.*

TB
031(7)
N50

Sadhu Press, Royapettah, Madras - 14

# முன்னுரை

சென்னைராசாங்கத்தார் 1949-ல் வெளியிட்டுள்ள புதிய பாடப்பட்டியை யொட்டித் தென்னாட்டுப் புது வாசகம் என்னும் இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் உரைநடையில் கற்பனையிலக்கியம், சிறு கதை, உழவு, கைத்தொழில், சுகாதாரம், கூட்டுறவுச்சங்கம் முதலிய-வற்றைப்பற்றிய அறிவு, புதிய நாடுகளைக் கண்டறிந்த செய்தி, பெருமக்களின் வாழ்க்கை வரலாறு, சரித்திர நிகழ்ச்சி, சிற்பம் முதலிய கலை, உரையாடல் (சம்பாஷணை), நகைச்சுவைப்பகுதி, மொழி, இலக்கியம், புலவர் அவரை ஆதரித்தவர் இவர்களின் வரலாறுகள் முதலியவற்றைப் பற்றிய பாடங்கள் வந்துள்ளன; அவற்றிற்குரிய படங்களும் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட் பகுதியில் வரலாறு, கதை, தோத்திரம், இயற்கைவருணனை, நீதி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றைப்பற்றிய பாட்டுக்களும் தனிப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் ஒவ்வொரு பாடத்தின்கீழ் அருஞ்சொற்பொருளும், முக்கிய வினாக்களும், மாதிரிப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யுட்களுக்குக் குறிப்புரை எழுதப்பட்டுளது.

என் வேண்டுகோளுக் கிணங்கித் தங்கள் பாட்டுக்களை இதில் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த திரு. தேசிக விநாயகம் பிள்ளையவர்கட்கும், இப் புத்தகத்தை எழுதுதற்கு உதவிபுரிந்த நண்பர்களுக்கும் நன்றியறிதலுடையேன்.

என் புத்தகங்களை ஆதரித்து ஊக்கம் அளித்துவரும் அன்பரனைவருக்கும் நன்றி செலுத்துங் கடப்பாடுடை-யேன்.

வே. வேங்கடராஜுலு

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்மொழி | 1 |
| 2. | ஆலங்கானத்துப் போர் | 8 |
| 3. | மகாபலிபுரச் சிற்பம் | 15 |
| 4. | ஐந்து சிட்டர்கள் | 20 |
| 5. | பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு | 27 |
| 6. | அணுவுயிர்களால் உண்டாகும் நோய்கள் | 34 |
| 7. | பாண்டித்துரை | 41 |
| 8. | முயற்சி திருவினை ஆக்கும் | 49 |
| 9. | கோழிப்பண்ணை | 53 |
| 10. | குகனும் இராமரும் | 63 |
| 11. | கூட்டுறவுச் சங்கம் | 71 |
| 12. | தீமைக்கு நன்மை | 77 |
| 13. | சுப்பிரமணிய பாரதியார் | 84 |
| 14. | நட்பாளுந் திறன் | 91 |
| 15. | ஜேம்ஸ் குக் | 98 |
| 16. | சொற்பொழிவு ஆற்றும் முறை | 104 |
| 17. | ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய் | 107 |
| 1. | கடவுள் வாழ்த்து | 113 |
| 2. | நீதிப்பகுதி<br>ஆசாரக்கோவை முதலியன | 115 |
| 3. | வரலாற்றுப் பகுதி<br>காந்தி அம்மானை | 112 |
| 4. | கதைப் பகுதி<br>மைனாவும் முயலும் மோசம்போன கதை | 123 |
| 5. | இயற்கை வருணனை<br>கிளி<br>ஆறு | 127 |
| 6. | தனிப்பாடல் | 128 |
| 7. | பாரதியார்பாட்டு | 129 |
| 8. | முக்கூடற்பள்ளு, அழகர் குறவஞ்சி | 130 |
| | குறிப்புரை | 131 |





# தென்னாட்டுப் புதுவாசகம்

## இரண்டாம் புத்தகம்

### 1. தமிழ்மொழி

நாம் பேசுவது தமிழ்மொழி. தமிழ்மொழி மிக்க தொன்மையானது. அது எந்தக் காலத்தில் உண்டாயிற்று என்று அறிய இயலாது. தமிழ்மொழியைச் சிவபெருமான் படைத்தார் என்று சிலர் கூறுவர். ஆயின், சிவபெருமானும் புலவருட னமர்ந்து அதனை ஆராய்ச்சிசெய்தார் என்று கூறுவாரும் உண்டு.

மொழி ஒருவரால் உண்டாக்கப்படுவதன்று. அது ஓரேநாளில் அமைவதும் அன்று. ஆதியில், மிருகங்கள் பறவைகள் இவற்றைப்போலவே, மனிதர்களும் தங்கள் உணர்ச்சியை ஒவ்வொரு விதக் குரலால் பிறர்க்கு அறிவித்திருப்பர். குழந்தைகள் தம் உணர்ச்சியைப் பலவித ஒலியால் தெரிவித்தலைக் காண்கின்றோமன்றோ! மனிதர் குரலால்மட்டுமன்றிச் சைகைகளாலும் தெரிவித்திருப்பர். இன்றும் நாம் பேசும்பொழுது சைகை செய்கின்றோமன்றோ?

மனிதரைத் தவிர மற்றைய உயிரினங்களெல்லாம் தம் கருத்தினைத் தெரிவிப்பதில் பழைய நிலையிலேயே இன்றும் இருக்கின்றன. மனிதர்மட்டும் நாளடைவில் அவசியமான சொற்களை அமைத்துக்கொண்டனர். பின்னர், வரவரச் சொற்கள் பெருகின. அதன்பின், அவர் தம் கருத்தினை வேறுஇடங்களில் இருப்பவரும் பிற்காலத்தவரும் அறிந்துகொள்ளுதற்கு உரிய வழியை நாடினர் ; அதற்காகப் பலவகைப்பட்ட எழுத்துமுறைகளைக் கையாண்டனர். கடைசியில், ஓர்ஒலிக்கு ஓர் அடையாளத்தை அமைக்கலாயினர். அதனால், மொழி செம்மைப்பட்டது. மாந்தர் தங் கருத்தினை ஓலை முதலியவற்றில் எழுதிவைத்தனர். அவர்களின் அறிவு பிற்காலத்தவருக்குப் பெரிய நிதிபோல் பயனளித்தது. இவ்வாறு மனிதர் மொழி என்னும் அரிய பொருளை அடைந்தனர்.

நமது தமிழ்மொழியிலும் ஆதியில் பலவகை எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்று நாம் வழங்கும் முறையில் அமைந்துள்ள எழுத்துக்கள் சில ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே அமைந்தனவாகும். நமது தேசத்தில் வழங்கும் பிறமொழிகளில் இல்லாத ழ, ற, ன முதலிய ஒலிகள் தமிழில் உள்ளன. அவற்றிற்குத் தனிவடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றால் தமிழெழுத்துக்களின் தனிச்சிறப்பு அறியலாகும்.

தமிழ்மொழி ஒருகாலத்தில் இமயமலைவரையும் பரவியிருந்தது என்று கருதுதற்கு இடமுண்டு. இமயமலைப் பக்கங்களில் வழங்கும் மொழியில் தமிழ்ச்சொற்கள் சில வழங்குகின்றனவாம். அஃது எவ்வாறாயினும், தென்னிந்தியா முழுவதிலும் பழைய தமிழ்மொழி வழங்கப்பட்டுவந்தது என்று துணியலாம். அவ்வாறு வழங்கிவந்ததொரு பழைய மொழியே இன்று செந்தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய பல்வேறு மொழிகளாய்ப் பிரிந்து வழங்குகின்றது.

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர், பாண்டிய அரசர் பெரும்புலவரைக்கொண்டு தமிழ்ச்சங்கம் ஒன்று அமைத்துத் தமிழ்மொழியைச் செம்மைப்படுத்தினர். அதனால், அதற்குச் 'செந்தமிழ்' என்னுஞ் சிறப்புப்பெயர் வழங்கலாயிற்று. பாண்டியநாடு 'செந்தமிழ்நாடு' என்று புகழ்ந்து கூறப்பட்டது.

நமது தமிழ்மொழிக்கு முதன்முதல் இலக்கணம் எழுதியவர் அகத்தியர் என்பர். இப்போது தமிழ்மொழியில் உள்ள நூல்களுள் மிகப் பழையது தொல்காப்பியம் என்னும் இலக்கணமே. அதற்கு முற்பட்ட செய்யுட்களும் இலக்கணங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியம் தனது ஒப்பற்ற சிறப்பினால் இன்றளவும் அழியாது நிலவிவருகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின் உண்டான இலக்கணங்கள் பல அழிந்துபோயின. ஆயின், நன்னூல் முதலிய சில நூல்கள் இன்றும் வழங்-

எம்மொழிக்கும் இழிந்த தன்று" என்று G. U. போப் என்பவரும் நம்மொழியை வியந்து கூறியுள்ளார்கள். இத்தகைய சிறந்தமொழி நமக்குத் தாய்மொழியாக வாய்த்திருப்பது நாம் பெருமை பாராட்டுதற்கு உரியதே.

தமிழ்மொழியில் சிறந்த இலக்கியங்கள் பல உள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலியன சிறந்தவை. வேறு எந்த மொழியிலும் இல்லாத தனிச்சிறப்புடைய நூலாகிய திருக்குறள் தமிழ்மொழிக்கு உலகம் போற்றும் புகழினை அளிக்கின்றது. தெய்வபக்தியை உண்டாக்கத்தக்க செய்யுட்கள் நம்மொழியில் மிகப்பல உள்ளன. அவற்றுள் தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் இவை சிறப்புடையன. நமது மொழியில் பல்வகைச் சுவைகள் நிறைந்த சிறுநூல்கள் எண்ணிறந்தவை உள்ளன. இவையெல்லாம் நாம் படித்து இன்புறற்கு உரியன.

மிகப் பழையகாலந்தொட்டே இலக்கண இலக்கிய வளம் படைத்துள்ள நமது தமிழ்மொழியினை நாம் கற்று, அதன் நயங்களை அறிந்து உணர்ந்து இன்புறுவோமாக.

## அருஞ்சொற் பொருள்

தொன்மை-பழமை.
நாடினர்-ஆராய்ந்தனர்.
வதிந்தனர்-வசித்தனர்.
விரவி-கலந்து.
உரைநடை-வசனம்.
எண்ணிறந்தவை-கணக்கில்லாதவை.
இன்புறற்கு-இன்பமடைதற்கு.

## வினாக்கள்

1. மக்கள் மொழியை அடைந்தது யாங்ஙனம்?

2. தமிழெழுத்துக்களின் தனிச்சிறப்பும், தமிழ்மொழியின் சிறப்பும் யாவை?

3. பாண்டியநாடு 'செந்தமிழ்நாடு' என்று புகழப்படுதற்குக் காரணம் என்ன?

4. முத்தமிழ், மணிப்பிரவாளம், தொல்காப்பியம், திருக்குறள்—சிறு குறிப்பு எழுது.

5. இன்று தமிழில் எவ்வெம்மொழிச்சொற்கள் கலந்துள்ளன? ஏன்?

## பயிற்சி 1

இச் செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியமாக மாற்றி யமைக்க.

1. மொழி ஒருவரால் உண்டாக்கப்படுவதன்று.

2. தமிழிலும் ஆதியில் பலவகையெழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

3. நன்னூலே மாணாக்கராலும் பயிலப்பட்டு வருகின்றது.

4. 'மணிப்பிரவாளம்' சமயக்கருத்துக்களை உணர்த்தவே அமைக்கப்பட்டது.

5. தென்னிந்தியா முழுவதும் பழைய தமிழ்மொழி வழங்கப்பட்டுவந்தது.

## 2. ஆலங்கானத்துப் போர்

சங்ககாலத்தில் செந்தமிழ்நாட்டை ஆண்ட பாண்டியர்களுள், இறுதியில் தலைசிறந்தவன் நெடுஞ்செழியன் என்பவன். அவன், தன் முன்னோரைப்போன்று தமிழில் பெரும்புலமையும் செய்யுளியற்றுந் திறமையும் படைத்திருந்தான்.

நெடுஞ்செழியன் இளமையிலேயே தந்தையை இழந்தானாகலின், அப் பருவத்திலேயே நாட்டைப் புரக்கும் பொறுப்பு அவனைச் சார்ந்தது. அவன் மதிநுட்பமுள்ள அமைச்சரையும் பொதுநலன் நாடும் புலவரையும் உறுதுணையாகக் கொண்டு, அரசியலைத் திறம்பட ஆற்றிவந்தான். 'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' அன்றோ!

செழியன் குடபுலவியனார் என்னும் புலவர் உரைத்த பொன்மொழிகளை உளங்கொண்டு, தன் நாட்டில் ஆறுகட்குக் கரை எடுத்தும், கால்வாய்களை அமைத்தும், குளங்கள் கிணறுகள் முதலிய நீர்நிலைகளைத் தோண்டியும் உணவுப்பொருள்களைப் பெருக்கிக் குடிகளைப் புரந்துவந்தான். அதனால் அவன்புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவிற்று. ஆகலின், அக்காலத்தில் சேரநாட்டையாண்ட மாந்தரன்சேரல் என்பவன் நம் செழியனிடம் அழுக்காறு கொண்டான்.

“ இச் செழியன் இளம்பருவத்திலேயே இத்துணை அறிவும் திறனும் உடையனாய் ஆட்சிசெய்கின்றான். இவன் பெரியனாயின் நமது நிலைமை என்னாமோ! முள்மரம் இளைதாயிருக்கும்போதே அதனைக் களைந் தெறிய வேண்டும். அது வளர்ந்து வயிரங்கொண்டால் அதனை வெட்டுங் கோடரியின் வாயும் மழுங்கும். ஆதலின், இவனை இப்பொழுதே ஒழித்துவிடல் வேண்டும்” என்று சேரன் எண்ணினான். உடனே அவன் தன் கருத்தினைச் சோழனுக்கும் சிற்றரசர் ஐவருக்கும் தெரிவித்தான். அவர்களும் உடன்பட்டனர். பின்னர், எழுவரும் தம் படைகளோடு மதுரைநோக்கிச் சென்றனர்.

பகைவர் போர்புரிய வருதலை அறிந்த செழியன் அமைச்சரையும் படைத்தலைவரையும் வருவித்து, அவர்க் குத் தன் கருத்தினைத் தெரிவிக்கலானான். “ அறிஞர்களே, இன்று சேரன், சோழன் முதலியோர் என்னை இளையன் என்று இகழ்ந்து கூறி, தமது படைவலியைப் பெரிதாகக் கருதிப் போருக்கு வருகின்றனர். என்னைச் சிறு சொற்- கூறிய அவ் வறிவிலிகளை உங்கள் துணையினால் போரில் அகப்படுத்துவேன். அவ்வாறு கைக்கொள்ளேனாயின், என் குடிகள் என்னைக் கொடுங்கோலன் என்று பழி தூற்றுவாராக. மாங்குடி மருதன் முதலிய பெரும் புலவர் என் நாட்டைப் பாடாமல் நீங்குவாராக. என் சுற்றத்தார் துன்புறுவாராக. இரப்போர்க்கு ஈய இயலாத வறுமையை யான் அடைவேனாக” என்று நெடுமொழி கூறினான்.

செழியன் கூறியவற்றைக் கேட்ட அவையோர் அவன்வீரத்தை வியந்து புகழ்ந்து போருக் குடன்பட்டனர். மதுரையைச் சூழ்ந்த பகைவர்படைகளைப் பாண்டியன்படைகள் வீரத்தோடு தாக்கின. அதனால் பகைவர் பின்வாங்கினர். செழியன்படைகள் அவற்றைப் பின்தொடர்ந்து சென்றன. இரு திறத்தவரும் ஆலங்கானம் என்னுமிடத்தில் பெரும்போர் புரிந்தனர். செழியன் முருகனேபோன்று சினங்கொண்டு பகைவர் எழுவரோடு பொருதான்.

அப் போரைக் கண்ட இடைக்குன்றூர்கிழார் என்னும் புலவர், 'ஒருவனோடு ஒருவன் பொருது கொல்லுதலும் தோற்றலும் தொன்றுதொட்டுவரும் இயற்கை. அந்தோ! இளையன்ஒருவனோடு எழுவர் பொருகின்றனரே! இஃது என்ன நீதி! இவ் விளைஞன் நேற்றுவரை காலில் சதங்கையையும் கையில் சிறு வளைகளையும் மார்பில் ஐம்படைத் தாலியையும் அணிந்திருந்தான் : பாலையே பருகி வந்தான் : இன்று சோற்றை உண்டு, காலில் வீரக்கழலைச் செறித்து, கையில் வேலைப்பிடித்து, தலையில் வேப்பமாலையும் உழிஞைமாலையும் சூடி, தேரில் பொலிவு பெற்று நிற்கின்றான்! இவன் தன்மேல் வெகுண்டு முறைமுறையாக வரும் புதிய வீரரை மதிக்கவும் இல்லை ; அவமதிக்கவும் இல்லை. அவர்களை இறுகப் பற்றி மண்ணில் மோதி விண்ணுக்கு அனுப்புகின்றான். இவன் 'இத்தனை வீரரைக் கொன்றேமே' என்று செருக்குக் கொள்கின்றானுமல்லன் ; மகிழ்கின்றானு

மல்லன். இவன் வீரமே வீரம்!" என்று உவந்து புகழ்ந்தார்.

செழியனோடு பொருதவருள் பலர் பட்டனர்; அரசர் சிலர் முரசும் குடையும் கொடியும் போர்க்களத்தே போட்டுவிட்டுப் புறங்காட்டி ஓடலாயினர். அவருள் சேரனைச் செழியன் சிறைப்படுத்தினான்; மற்றையோரைத் தொடர்ந்து பற்றி மாய்த்தான்.

"பகையரசர், 'யாம் படைகளால் பெரியேம்; யாம் பெறுங் கொள்ளை மிகப்பெரிது. எம்மோடு பொருபவனோ இளையன்' என்று இகழ்ந்தனர். செழியன் முழையில் உறங்கிக்கிடந்த புலி எழுந்து மூரிநிமிர்ந்து தான் விரும்பிய இரைமேற் செல்வது போலப் பகைவர்மேற் சென்று பொருதான்; பகைவரைத் தன் நகருக்கு அருகிலேயே அழிக்க விரும்பாமல், அவர்தம் மனைவிமார் நாணி இறந்துபடுமாறு அவர்கள்நாட்டுக்குத் துரத்திச் சென்று அங்கு அவர்களைக் கொன்றான். இதுவன்றோ வீரம்!" என்று புலவர் பாராட்டினர்.

செழியன் இளம்பருவத்தில் தான் ஒருவனாய் நின்று பகைவர் எழுவரைப் பொருது வென்ற அரிய வெற்றியை நாட்டவரனைவரும் பாராட்டிப் புகழ்ந்தனர். அவ்வெற்றியின் அருமை தோன்ற நம் செழியனைத் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்" என்று வழங்கினர். செழியன் பிற்காலத்தில் அரசர் பலரை வென்றும் தமிழை வளர்த்தும் தன் புகழை நிலைநாட்டினான்.

## அருஞ்சொற் பொருள்

தலைசிறந்தவன்-முதன்மையானவன்.
புரக்கும்-காக்கும்.
பாகம்படும்-பாதி உண்டாகும்.
பொன்மொழி-சிறந்த அறிவுரை.
வயிரம்-உறுதி.
சிறுசொல்கூறிய-இகழ்ந்த.
ஐம்படைத்தாலி-மார்பில் அணியும் பஞ்சாயுதம் என்னும் அணி.
செறித்து-கட்டி.
மூரிநிமிர்ந்து-சோம்பல் முறித்து.

## வினாக்கள்

1. நெடுஞ்செழியன்புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவக் காரணம் என்ன ?
2. மாந்தரன்சேரல் ஏன் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்தான் ?
3. செழியன்கூறிய வீரவுரைகளைக் கூறுக.
4. 'இதுவன்றோ வீரம் !'—எது ?

## பயிற்சி 2

இச் செய்வினைவாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றியமைக்க.

1. மாந்தர் தம் கருத்தினை ஓலையில் எழுதிவைத்தனர்.
2. செழியன் புலவர்பொன்மொழிகளை உளங்கொண்டான்.
3. முள்மரம் இளையதாயிருக்கும்போதே அதனைக் களைந் தெறிய வேண்டும்.
4. சேரன்முதலியோர் செழியனை இளையன் என்று இகழ்ந்து கூறினர்.
5. அவ் வறிவிலிகளைப் போரில் அகப்படுத்துவேன்.





# 3. மகாபலிபுரச் சிற்பம்

நம் தமிழ்நாட்டில் சிற்பக்கலையினை வளர்த்த மன்னவர்களுள் சிறந்தவர் பல்லவர். பல்லவ மன்னர் காஞ்சிநகரைத் தலைநகராகக் கொண்டு தென்னிந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டுவந்தனர். அவர்களுள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட மகேந்திர வர்மனும் அவன்மகன் நரசிங்கவர்மனும் பெரும்புகழ் பெற்று விளங்கிய வெற்றிவேந்தராவர். அவ் விருவரும் அவர்கள்மரபினரும் தமிழகத்தின் பலவிடங்களில் கோயில்கள் பல கட்டுவித்தனர் ; சிற்பங்கள் பல செதுக்குவித்தனர். இத்தகைய சிற்பப்பணிகள் சிறப்புற்று விளங்கும் பதிகளுள் மகாபலிபுரமும் ஒன்று.

தென்னாட்டில் முதன்முதலில் கற்கோயில்களைக் கட்டியவன் மகேந்திரவர்மனே யாவான். அவன்காலத்தில் தமிழ்நாட்டில் குடியேறிய தச்சர்கள் குன்றுகளைச் செதுக்கி, தூண்களும் சுவர்களும் அமைப்பதற்கு வேண்டிய பாகங்களை விடுத்து மற்றைப் பகுதிகளைக் குடைந்தெடுத்து, முன்மண்டபம், கருப்பக்கிருகம் முதலியவற்றை வகுத்து, கற்கோயில்களை அமைத்தனர். அக் கோயில்கள் ‘குகைக் கோயில்கள்’

எனப்படும். ஒரே மலைப்பாறையைக் கோயிலுருவத்தில் அமைப்பதும் உண்டு. அத்தகைய கோயில் 'ஒற்றைக்கற்-கோயில்' என்று வழங்கும்.

நரசிங்கவர்மனுடைய விருதுப் பெயர்களுள் ' மாமல்லன் ' என்பது ஒன்று. அவன்பெயரால் 'மாமல்ல புரம்' என்று வழங்கிய பட்டினமே பின்னர் மகாபலிபுரம் என்று வழங்கலாயிற்று.

மகாபலிபுரம் ஒரு துறைமுகப்பட்டினமாய் இருந்தது. அது ஆயிரத்திருநூறு ஆண்டுகட்குமுன் பெரிய நகரமாய் விளங்கிற்று. அங்கிருந்து நம் முன்னோர் சிங்களம், சாவகம், கடாரம் முதலிய வெளிநாடுகளுக்குக் கப்பலிற்சென்று, கடல்வாணிகம் செய்துவந்தனர். 'கலங்கள் இயங்குங் கடல்மல்லை ' என்னும் ஆழ்வார்பாடல் இதற்குத் தக்க சான்றாகும். ஆயின், அது இன்று ஒரு சிற்றூராய் உளது. பிற்காலத்தில் இப் பட்டினத்தின் பெரும்பகுதியைக் கடல் கொண்டுவிட்டது.

மகாபலிபுரம் செங்கற்பட்டுநகருக்குக் கிழக்கே இருபது கல் தூரத்தில் இருக்கின்றது. அங்குச் செல்வோர் செங்கற்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் என்னுந் தலத்தின் வழியாகச் சென்று, பக்கிங்ஹாம்கால்வாயைக் கடந்து ஊருக்குள் செல்லவேண்டும். அக் கால்வாய்க்குச் சில ஆண்டுகளுக்கு முன் பாலமொன்று கட்டுவித்தனர். அது ' ராஜாஜி பாலம் ' என்னும் பெயரால் விளங்குகின்றது. அப் பாலம் அமைப்பதற்குமுன், மக்கள் படகின் மூலமாக அக் கால்வாயைக் கடந்து சென்றனர்.

மகாபலிபுரத்தில், புதிதாகக் கட்டப்பட்ட கலங்கரைவிளக்கம் ஒன்று உயர்ந்த கற்பாறையின்மீது காணப்படும். அதற்கு அருகில் தென்மேற்குப் பக்கத்தில் குகைக்கோயில் ஒன்று உளது. அது மகிஷாசுரமர்த்தனியின் கோயில். அது 'எமபுரி மண்டபம்' என்று அவ்வூராரால் வழங்கப்படுகின்றது. துர்க்காதேவி மஹிஷாசுரன்என்னும் அசுரனை அழித்த வரலாறு சுவர்ச்சிற்பமாக அங்கு அழகுடன் விளங்குகின்றது. அக் குகைக்கோயிலின் உட்பாகமுழுவதும் கற்பாறையைக் குடைந்து அமைத்த ஒரு கூடமாகக் காட்சி அளிக்கின்றது.

அக் கூடத்து நடுச்சுவரின் நடுவில் உமைபங்கராய்ச் சிவபிரான் வீற்றிருக்குந் திருக்கோலத்தைக் காணலாம். உமாதேவியின் மடியில் குழந்தை முருகன் காட்சியளிக்கின்றான். தென்சுவரில் துர்க்கை சிங்கத்தின்மீ திருந்து மகிஷாசுரனோடு பொருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியா யுளது. அத் தேவியின் எட்டுக்கைகளிலும் பலவகைப் படைகள் உள. கண்களில் தீப்பொறி பறக்கின்றது. தேவி ஒரு கையில் வில்லைப்பிடித்து வாளியைத் தெறித்து விடுக்கும் நிலையில் சிற்பம் அமைந்துளது. அசுரன்கண்களில் நடுக்கக்குறிகள் நன்கு தோன்றுகின்றன. பாம்பணையில் பள்ளிகொண்டிருக்குந் திருமாலின் திருக்கோலத்தையும் அக் கோயிற்சுவரில் காணலாம். ஆதிசேஷன் என்னும் அப் பாம்பின் ஆயிரந்தலைகளுள் ஒன்று நிலவுலகத்தைச் சுமக்கின்றதாயுளது.

அக் கோயிலின்மேல் ஒரு பாறையில் அகல் ஒன்று தொட்டிபோல அமைந்துளது. அத் தலத்தைத் தரிசிக்க வரும் அடியவர் ஒவ்வொருவரும் அத்தொட்டியில் உழக்கெண்ணெயை ஊற்றவேண்டுமாம். அங்குக் கோயில்கொண்டிருக்கும் இறைவன் திருநாமம் 'உலகண்ணல்' என்பது.

கலங்கரை விளக்கத்துக்கு நேர்தெற்கில் ஐந்து விமானங்கள் உள. அவை ஒற்றைக்கற் கோயில்களே. இவ் வுண்மையை அறியாதார் அவற்றைப் 'பஞ்சபாண்டவரின் இரதங்கள்' என்பர். அவற்றுள் மிகப் பெரியதாயிருப்பது 'தருமராஜ ரதம்' என்று வழங்குகின்றது. அதில் மிக நுட்பமான சித்திர வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. அதன் இரண்டாம் அடுக்கின் நடுவில், மாடப்புரை போன்ற 'கருப்பக்கிருஹம்' என்னுஞ் சிறிய அறை மிக்க அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றது. அவ் வறையில் சோமஸ்கந்த விக்கிரஹம் உறுப்பிலக்கணனைத்தும் அமைந்து விளங்குகின்றது. 'பீமசேன ரதத்'தின் முன்னும் பின்னும் மண்டபங்கள் உள. 'அர்ஜுனரதம்', 'திரௌபதிரதம்' ஆகிய இரண்டையும் முன்மண்டபம் ஒன்று இணைக்கின்றது. அவற்றின் எதிரே ஒரேகல்லில் பொறிக்கப்பட்டுள்ள யானையும் சிங்கமும் கண்டு களிக்கத் தக்கவை. திரௌபதிரதத்தின் மூலத்தானத்தில்

துர்க்காதேவியின் சிலை உளது. அதன் எதிரில் தன் தலையைத் தானே துணித்துக் காளிக்குப் பலியிடும் வீரனது சிலையொன்று விளங்குகின்றது. 'நகுல சகாதேவ ரதங்கள்' முற்றுப்பெறாத ஒற்றைக்கற் கோயில்கள்.

தீபஸ்தம்பத்திற்கு வடகிழக்கில் முற்றுப்பெறாத குகைக்கோயில் ஒன்று காணப்படும். அதனைச் சார்ந்த பெரிய பாறையின் முற்பாகத்தில் பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒற்றைக்கல்லில் நின்று தவஞ்செய்யும் உருவம் ஒன்றைக் காணலாம். அது அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறச் சிவபெருமானைக்குறித்துத் தவஞ் செய்வதைக் குறிக்கும் என்று முன்னோர் கூறினர். பகீரதன் தவத்தைக் குறிக்கும் என்று இப்பொழுது ஆராய்ச்சியாளர் துணிகின்றனர். அவ் வுருவம் இடக்காற் பெருவிரலை மட்டும் ஊன்றி நிற்கின்றது. அதன் வலக்கால் தூக்கியிருக்கின்றது; கரங்க ளிரண்டும் சிரத்தின்மேல் குவிந்துள்ளன. அதனைச் சுற்றிலும் மக்களுருவங்களும் பலவகை விலங்குகளின் உருவங்களும் உள. அவ்விடத்திற்கு வடக்கில் அடிப்பக்கத்தில் பூனையொன்று பகீரதனைப்போல் தவஞ்செய்வதாகச் செதுக்கப் பட்டுளது!

'பகீரதன் தவத்'திற்கு வடமேற்கில் பெரிய வட்டப்பாறை ஒன்று உளது. அதன் அடிப்பகுதி ஒருசிறிதே பூமியில் ஒட்டி நிற்கின்றது. அதனைக்

'கண்ணனின் வெண்ணெய்த்திரள்' என்று வழங்குவர். அதற்கு மேற்கில் வராகக்கடவுளின் குகைக்கோயில் இருக்கின்றது. வராகசுவாமியின் ஒரு கால் ஆதிசேஷனின் தலையில் பொருந்தியிருக்கின்றது. பூமிதேவி அக் கடவுளின் வலத்தொடையில் அமர்ந்துள்ளாள். கடலில் ஆழ்ந்த பூமிதேவியைத் திருமால் பன்றியின் உருக் கொண்டு மீட்டுவந்த வரலாறே அங்குப் பொறிக்கப் பட்டுளது.

அக் குகைக்கோயிலிலேயே, திருமால் பேருரு வெடுத்து மாவலியின் முடியில் தன் திருவடியை வைத்த திரிவிக்கிரமாவதாரமும் சிறப்புறச் செதுக்கப்-பட்டுளது.

அங்கிருந்து நேர்கிழக்கில் கடற்கரைக்குச் சென்றால், அங்குச் சிதைந்த கற்களையும் அவற்றின் நடுவில் சிறு கோயிலொன்றையும் காணலாம். அது 'தலசயனம்' என்னும் திருக்கோயில். அங்கிருந்தவற்றைக் கடல் கொண்டதனால் அவ்விடத்துக்கு மேற்கில் இப்பொழு-துள்ள இடத்தில் ஆலயம் ஒன்றைப் புதிதாகக் கட்டியுள்ளனர்.

மகாபலிபுரத்தில் அழிந்தவை போக எஞ்சியுள்ள சிற்பங்களே முற்காலத்துச் சிற்பிகளின் பேராற்றலை ஓரளவு உணர்த்துவதனால், அவற்றைக் கண்டு நம் நாட்டின் சிற்பத்திறனை உணர்ந்து நாம் பெருமிதங் கொள்ளுதல் கூடும்.

## அருஞ்சொற் பொருள்

மாபினர்-வமிசத்தவர்.

கருப்பக்ருஹம், மூலத் தானம்-கோயிலில் சுவாமி எழுந்தருளியிருக்கும் இடம்.

விருதுப்பெயர்-வெற்றிப் பெயர்.

சிங்களம்-இலங்கை.

சாவகம்-ஜாவா.

கடாரம்-பர்மா.

உமை பங்கர் - பார்வதியை இடப்பக்கத்தில் உடையவர்; அர்த்த நாரீசுவரர்.

கலம்கரை விளக்கம்-கப்பலைக் (கரைக்கு) அழைக்கும் விளக்கு; 'லைட் ஹௌஸ்'.

மாடப்புரை-மாடம்.

சோமஸ்கந்தர் - உமை, சிவன், கந்தன் என்னும் மூவர்

துணி - வெட்டு, ஆராய்ந்து முடிவு கூறு.

பாசுபதாஸ்திரம்-பசுபதியின், (சிவனின்) அஸ்திரம்.

பெருமிதம்-களிப்பு, தருக்கு.

## வினாக்கள்

1. குகைக்கோயில், கற்கோயில்: இவற்றுக்கு உள்ள வேற்றுமை யாது?

2. மகாபலிபுரத்தின் பழஞ்சிறப்பைக் கூறுக.

3. துர்க்கை, தருமராஜ ரதம், பகீரதன்தவம், வராகக்கடவுள்—இவற்றைப்பற்றி எழுதுக.

## பயிற்சி

கீழ்க் காணுஞ் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க.

தலைநகர், விருதுப்பெயர், கடல்வாணிகம், மாடப்புரை, எஞ்சியவை, வீற்றிரு, தெறி, இணை, துணி.

# 4. ஐந்து சீடர்கள்

ஒருகாலத்தில் பரமார்த்தர் என்னுங் குரு ஒருவர் இருந்தார். அவருக்கு ஐவர் சீடர் இருந்தனர். அவர்கள் எப்பொழுதும் குருவின் அருகில் இருந்து அவருக்குத் தொண்டுசெய்துவந்தனர். ஒருநாள் குரு மற்றைய ஊர்களில் இருக்கும் தம் சீடர்களைக் கண்டுவருதற் பொருட்டுத் தம்முடன் இருக்குஞ் சீடரோடு புறப்பட்டார். அவர்கள் எல்லாரும் கால்-நடையாகச் சென்றனர்.

செல்லும்வழியில் எதிரே குதிரையின்மேல் வந்த-வனைக் கண்டு, "ஆஹா! நம் குருவுக்கும் இம்மாதிரி குதிரையொன்று இருப்பின் அவர் நடந்து வருந்தாமல் பிரயாணம் செய்யலாமே!" என்று சீடர்கள் எண்ணினர்; அதனைக் குருவிற்குத் தெரிவித்தனர். அவர் "குதிரை வாங்குதற்கு நம்மிடத்தில் பணம் ஏது? போய்வந்தபின் அதைப்பற்றி யோசிப்போம்" என்று கூறிவிட்டார். ஆயினும், சீடர்கள்மனத்தில் குதிரையைப்பற்றிய எண்-ணம் நீங்காதிருந்தது.

வழியில் அவர்கள் ஒருசோலையில் தங்கினர். அச் சோலையை அடுத்திருந்த ஓர் ஏரியின் கரையில்

ஐயனார்கோயில் ஒன்று இருந்தது. அக் கோயி-லின் எதிரில், மண்ணினால் செய்யப்பட்ட அழகான பெரிய குதிரை யொன்று அமைக்கப்பட்டிருந்தது. அவ் வேரிக்குச் சென்ற சீடன் ஒருவன் தண்ணீரில் அக் குதிரையின் நிழலைக் கண்டு, குதிரை யொன்று தண்ணீர்க்குள் நிற்கின்றது என்று எண்ணினான்; உடனே விரைந்து சென்று தன் தோழர்களை நோக்கி, “இந்த ஏரிக்குள் ஒரு பெரிய குதிரை நிற்கிறது. அது நம் குருவிற்குச் சரியான வாகனமாக உதவும். அதனை விரைவில் பிடித்துக்கொண்டு வருவோம்” என்று அவர்-களை அழைத்துச் சென்று, நீர்க்குள் தோன்றிய குதிரை-யைக் காட்டினான். அவர்களும் அதனைக் கண்டு உண்-மைக்குதிரை என்றே கொண்டு, அதனைப் பிடிப்பதற்கு உரிய உபாயத்தை ஆராய்ந்தனர்.

அவர்களுள் ஒருவன், “கொள்ளைக் கண்டால் குதிரை வாய்திறக்கும் அல்லவா? இப்பொழுது கொள்ளை வேவித்துக் கொண்டு வந்து வைத்தால், அதன் வாசனையை அறிந்து அதைத் தின்னுதற்காகக் குதிரை மேலே வரும். வரும்பொழுது அதைப் பிடித்துக்கொள்ள லாம்” என்றான்.

மற்றொருவன், “கொள்ளு இந்த வழியில் எங்கே கிடைக்கும்? கிடைப்பினும், அதை வேக வைத்துக் கொண்டு வருவதற்கு நேரமாகுமே! பசுமையாயிருக்கும் புல்லைக் கண்டால், அதைத் தின்பதற்குக் குதிரை

தாவி வரும். அப்பொழுது அதைப் பற்றிக் கொள்ளலாம்" என்று கூறினான்.

வேறொருவன், "ஒரு குதிரை கனைப்பது போல் கனைத்தால், அதைக் கேட்டு அக் குதிரை கரைக்கு வரும். அப்பொழுது அதைக் கைப்பற்றிக் கொள்ளலாம்" என்று தன் கருத்தைத் தெரிவித்தான்.

இன்னொருவன், "ஓர் எருமைக்கடாவை ஓட்டிக் கொண்டு வந்து தண்ணீரில் விட்டால், அது ஓடியாடிப் பலவிடத்தும் திரியும். அந்தத் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமல், குதிரை கரைக்கு வந்து விடும்" என்று சொன்னான்.

ஐந்தாமவன், "இவையெல்லாம் நல்ல உபாயங்கள் அல்ல. என் கருத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். தூண்டில் போட்டு மீனைப் பிடிப்பதுபோல, இதையும் தூண்டிலால் பிடித்து இழுத்துக்கொள்ளலாம்" என்று புகன்றான். எல்லாரும் அவன் கூறிய உபாயத்தை ஏற்றுக்கொண்டனர்.

அவர்களுள் ஒருவன் வைத்திருந்த அரிவாளைத் தூண்டில் முள்ளாகவும், உண்ணுதற்கு வைத்திருந்த கட்டுச்சோற்றைத் தூண்டிலின் இரையாகவும் ஒரு துணியைத் தூண்டிற் கயிறாகவும், கையில் வைத்திருந்த கோலைத் தூண்டிற் கோலாகவும் அமைத்துக் கொண்டனர் ; துணியைக் கோலின் ஒரு முனையில் கட்டி, அத் துணியின் மற்றொரு முனையில் அரிவாளைப்



பிணித்து, அரிவாளின் முனையில் கட்டுச்சோற்று மூட்டையைக் கோத்துக்கொண்டனர். பிறகு, ஒருவன் அத் தூண்டிலைத் தண்ணீர்க்குள் குதிரை தோன்றிய இடத்தில் எறிந்தான்; அது 'தொப்' என்று விழுந்ததனால், தண்ணீரில் அலைகள் எழும்பின. அதனால் குதிரை நெளிந்து துள்ளிக் குதித்து எழுந்ததுபோல் தோன்றிற்று. அதனைக் கண்டு அருகில் நின்ற நால்வரும் அஞ்சி ஓடிவிட்டனர்.

தூண்டிற்கோலைப் பிடித்திருந்தவன்மட்டும் அதை விட்டுவிடாமல் அங்கேயே நின்று நோக்கினான். தண்ணீரில் அலை நின்றபின். அங்கிருந்த பெரிய மீன்கள் மெல்ல மெல்ல அணுகி, அச்சோற்றுமூட்டையை இழுத்தன. அதைக் கண்டு தூண்டிற்காரன் மற்றவர்களைச் சைகை செய்து அழைத்து, "குதிரை இப்பொழுதுதான் இரையைப் பற்றுகிறது" என்று காட்டினான். அவர்கள் நால்வரும் வந்து அச் செயலைக் கூர்ந்து நோக்கினர்.

சிறிது நேரத்தின்பின் தூண்டிற்காரன் கோலை விசைத்து மேலே தூக்கி இழுத்தான். சோற்று மூட்டையை மீன்கள் கவர்ந்துவிட்டதனால், அரிவாள் ஏரிக்குள்ளிருந்த கோரையில் சிக்கிக்கொண்டது. அவன் தூண்டில் குதிரையின் வாயில் மாட்டிக்கொண்டதாக நினைத்து, "குதிரை அகப்பட்டுவிட்டது! குதிரை அகப்பட்டுவிட்டது!!" என்று உரக்கக் கூவினான்.

உடனே மற்ற நால்வரும் வந்து அவனோடு சேர்ந்து, அக் கோலை இழுத்தனர். துணி மிகப்பழையதாகையால்

அற்றுப்போயிற்று. அனைவரும் மல்லாந்து கீழே வீழ்ந்தனர்.

அச்சமயத்தில், அவ்வழியில் வந்தவர் ஒருவர் அவர்களை நோக்கி, "இங்கு என்ன விசேஷம்!" என்று கேட்டார். அவர்கள் எல்லாவற்றையும் அறிவித்தனர். அவற்றைக் கேட்ட அவர் அவர்களின் அறியாமையை உணர்ந்து மண்குதிரையைத் தம் ஆடையினால் மறைத்தார். நீருள் தோன்றிய குதிரையும் அப்பொழுது மறைந்துவிட்டது. அதனால் மண்குதிரையின் நிழலே நீருள் தோன்றிய குதிரை என்பதை அவர்கள் நன்கு அறிந்தனர்; பின்னர், தங்கள் குருவின் முதுமையையும் தளர்ந்த நடையையும் கூறி, ஒரு குதிரை இருந்தால் நன்மையாய் இருக்கும் என்று தம் கருத்தைத் தெரிவித்தனர். அவர் மனமிரங்கி அவர்களை நோக்கி, "என்னிடம் ஒரு குதிரை இருக்கிறது. அதற்குக் கால் சிறிது ஊனம். ஆயினும் பிரயாணத்துக்கு உதவும். அதைத் தருகின்றேன்" என்று சொல்லி, அவர்களை அழைத்துப்போய் அக்குதிரையை நல்கினார். அவர்களும் அவருக்கு நன்றி செலுத்தி, குதிரையை உடன்கொண்டு சென்று, தம் குருவினிடம் எல்லாவற்றையும் தெரிவித்தனர். குரு அம் மனிதனின் நற்குணத்தைப் பாராட்டினார்; சீடர்களால் தமக்குக் குதிரை கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார்.

பின்னர், குரு அக் குதிரைமேல் இவர்ந்து சென்றார். சீடர்கள் அவரைத் தொடர்ந்து நடந்து சென்றனர். அவ்வாறு அவர்கள் பல இடங்கட்குச் சென்று, சில நாட்களின் பின் மடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

## அருஞ்சொற் பொருள்

தொண்டு-வேலை.
உபாயம்-தந்திரம், வழி.
வேவித்து-வேகவைத்து.
கூர்ந்து-கவனமாய்.
விசைத்து-வேகமாய்.
அற்று-அறுந்து.
முதுமை-கிழப்பருவம்.
ஊனம்-குறைவு; நொண்டி.
நல்கு-கொடு.
இவர்ந்து-ஏறி.

## வினாக்கள்

1. நீரில் இருந்த குதிரையைப் பிடிக்கச் சீடர் ஐவரும் கூறிய உபாயங்கள் என்ன ?

2. அவர்கள் தூண்டிலை எவ்வாறு அமைத்தனர் ?

3. "குதிரை அகப்பட்டுவிட்டது" — சந்தர்ப்பம் கூறுக.

4. நீரில் தெரிந்தது குதிரையின் நிழலே என்பது எவ்வாறு சீடர்கட்கு விளக்கப்பட்டது ?

## பயிற்சி 4

கீழ்க் காணுஞ் சொற்களின் வேற்றுமை விளங்குமாறு வாக்கியம் அமைக்க.

அரிந்து, அறிந்து ; ஏரி, ஏறி ; இரங்கு, இறங்கு; இரை, இறை ; தெரி, தெறி ; கொல், கொள் ; கோல், கோள் ; அலை, அளை ; மனம், மணம் ; கனை, கணை.

# 5. பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாளில் நமது தேசம் விடுதலை பெற்றதைக்குறித்து விழாக் கொண்டாடியது உங்கட்கு நினைவிருக்கலாம். சுதந்திர இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்று முதலமைச்சராயிருந்து பரிபாலித்து வருகின்றவர் பண்டித ஜவஹர்லால் நேஹ்ரு என்பதும் நீங்கள் அறிவீர்களன்றோ? அவர் சிறந்த அரசியல் நிபுணர் என்று எல்லாநாட்டினராலும் புகழப்படும் பேரறிஞர்; அவர் முதலமைச்சராக வாய்த்தது இந்தியா செய்த நல்வினைப்பயனே யாகும்.

“பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு பளிங்கு போலப் பரிசுத்தமான மனம் உள்ளவர்; ஐயுறுதற்கு இடம் இல்லாத உண்மையாளர்; குற்றம் குறை கூறமுடியாத வீரர். தைரியத்தில் அவரை யாரும் வெல்லமுடியாது; தேசாபிமானத்தில் யாரும் அவரை மீற முடியாது. அவர் ஒரு போர்வீரனின் துணிவையும் சிறந்த ராஜதந்திரியின் அறிவையும் பெற்றிருக்கின்றார்” என்று மஹாத்மா காந்தி உரைத்திருக்கின்றார்.

ஜவஹர்லால் நெஹ்ரு காஷ்மீரத்துப் பண்டிதர்மரபினைச் சேர்ந்தவர். அவர் தந்தையார் மோதிலால் நெஹ்ரு என்பவர்; தாயார் சொரூபராணி. மோதிலால் நெஹ்ரு அலாஹாபாத்து உயர்தர நீதி மன்றத்தில்

வக்கீலாயிருந்து புகழ்பெற்றவர்; செல்வத்தில் குபேரனைப் போன்று விளங்கியவர்.

ஜவஹர் 1889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதியில் அலாஹாபாத்தில் உள்ள 'மீர்கஞ்சு' என்னுமிடத்தில் பிறந்தார். அவருக்கு வளர்ப்புத்தாய்மாராய் இருந்தவர்கள் ஐரோப்பியத் தாதிமார்களே. 'ப்ரூக்ஸ்' என்னுஞ் சிறந்த அயர்லாந்து அறிஞர் அவருக்கு ஆசிரியராய் அமர்ந்து, ஆங்கிலமொழியைக் கற்பித்ததனோடு, கீதையையும் போதித்தார்; தேசாபிமானத்தை ஊட்டினார்; நம் நாட்டின் பெருமைகளை எடுத்துரைத்து மனத்தில் பதியவைத்தார்.

ஜவஹருக்கு விஞ்ஞானத்தில் விருப்பம் அதிகம். அதனால் அவர் தந்தையார் விஞ்ஞானக்கருவிகள் நிறைந்த தனியறை யொன்றை அமைத்துக் கொடுத்தார்; ஜவஹர் குதிரையேற்றத்தையும் சிறுவயதிலேயே பயின்றிருந்தார். அவர் தம் மாளிகையைச் சேர்ந்த செய்குளத்தில் நெடுநேரம் நீந்தி விளையாடுவார்.

ஜவஹர்லால் பதினைந்தாம் வயசில் உயர்தரப் படிப்பிற்காக இங்கிலாந்துக்குச் சென்று, அரசகுமாரரும் பிரபுக்களின் புத்திரரும் கற்கும் 'ஹாரோ' பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கற்றார்; பரீக்ஷைகளில் முதல்வராய்த் தேர்ந்து பல பரிசுகளைப் பெற்றார்; பின்னர் 1907-இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'ட்ரினிடி' கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றார்.



அதன்பின் ஜவஹர் சட்டக்கல்வி பயின்று 1912-இல் 'பாரிஸ்ட'ராகப் பதிவு செய்துகொண்டு இந்தியாவிற்குத் திரும்பிவந்து, தந்தையாரின் கீழ் அத்தொழிலைச் சிறப்பாக நடத்திவந்தார்.

1916-இல், டில்லியில் வாழ்ந்து வந்த பெருஞ்-செல்வர்ஒருவருடைய புதல்வியாகிய கமலா என்னும் செல்வியை ஜவஹர்லாலுக்கு மணம் புரிவித்தனர். அத் திருமணம் டில்லியில், அரசகுடும்பத்தில் நடப்பது போல், மிக்க சிறப்பாக நிகழ்ந்தது.

1920 - இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ்-கூட்டத்தில் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்கக் கூடாது என்னுந் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்பின், வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்த-பொழுது, அவரை வரவேற்கலாகாது என்று காங்கிரஸ் முடிவுசெய்தது. அக் கொள்கைகளை ஜவஹரும் அவர்தந்தையும் மேற்கொண்டனர். அதனால் அவரிரு-வரும் சிறைப்பட்டனர். இதுதான் அவர்கட்கு முதன்முதல் நேர்ந்த சிறைவாசம். அவர்கள் சில-மாதங்களில் விடுதலை அடைந்தனராயினும், ஜவஹர் வெளிநாட்டுத்துணி வாங்குதலை மறியல் செய்ததனால் மீண்டும் சிறைபுகுந்தார்.

ஒன்றேமுக்கால் ஆண்டிற்குப் பின்னர் ஜவஹர் விடுதலை அடைந்தார். அவர் 1923-ஆம் ஆண்டில் அலாஹாபாத் நகரபரிபாலன சபைத்-

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந் நகருக்குச் சிறந்த தொண்டு ஆற்றினார்; நூல்நூற்றல், சாரணரியக்கம், ஆரம்பப்பாடசாலைகளில் ஆங்கிலத்துக்கு ஈடாக ஹிந்துஸ்தானியைக் கற்பித்தல் முதலியவற்றை ஏற்படுத்தினார். அவரது திறமையைக் கமிஷனர் பலரும் பாராட்டியிருக்கின்றனர். ஜவஹர்லால் 1924, 25-ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் மஹாசபையின் காரியதரிசியாயிருந்து பெருந்தொண்டு புரிந்தார்.

ஆங்கில அரசாங்கத்தார் இந்தியாவிற்கு எத்தகைய ஆட்சியுரிமை நல்கலாம் என்பதை ஆராய்தற்காக ஸர். ஜான் ஸைமன் தலைமையில் ஒரு குழுவினை 1928-இல் இந்தியாவிற்கு அனுப்பினர். அப்பொழுது நம் நெஹ்ரு காங்கிரஸ் செயலாளரா யிருந்தார். ஸைமன்குழுவைப் புறக்கணிக்கவேண்டும் என்று காங்கிரஸ்மஹாசபை தீர்மானித்தது. அதனைத் தவிர்க்க அரசாங்கம் கடும் அடக்குமுறையை மேற்கொண்டது. அதற்கு அஞ்சாத நம் ஜவஹர் தொண்டர்களை அணிவகுத்து ஊர்வலஞ்-சென்றார். குதிரைப்படைவீரர் தொண்டரைத் தடியால் தாக்கிக் கலைத்தனர். அந்தோ! குபேரபுத்திரர்—இந்தி-யாவின் தவப்புதல்வர்—ஜவஹர்லால்—தடியடி பட்டார்! ஆயினும் அவர் இருந்தவிடத்தைவிட்டு அசையவே-யில்லை. அவர்வீரந்தான் என்னே!

பின் 1929-இல் நம் நெஹ்ரு காங்கிரஸ்தலைவர் ஆயினர். அவ் வாண்டில் மஹாத்மா காந்தி உப்புச்-சட்டத்தை மீறியபோது மோதிலால் நெஹ்ரு முதலாக

அவர்குடும்பத்தினர் அனைவரும் அதில் ஈடுபட்டனர். அதனால் மோதிலாலும் ஜவஹரும் சிறைப்பட்டனர். அப்பொழுது மோதிலால் நெஹ்ரு தமது 'ஆனந்த பவனம்' என்னும் மாளிகைக்குச் 'சுயராஜ்ய பவனம்' என்று பெயரிட்டு, அதனை நாட்டுக்கு நல்கினார். ஜவஹர் விடுதலை அடைந்தபின், 'வரிகொடா இயக்க'த்தில் பேசியதற்காக மீண்டும் சிறைப்பட்டார். அதன்பின் கமலா அம்மையாருஞ் சிறை புகுந்தார்.

1931 - ஜனவரி 26-இல் காங்கிரஸ்தலைவர் அனைவரையும் அரசாங்கத்தார் விடுதலை செய்தனர். ஆயின், அடுத்த திங்களில் மோதிலால் நெஹ்ரு உலகவாழ்வினை நீத்தார். நாடு முழுவதும் அத்துக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

1934-ஆம் வருடத்தில் நேர்ந்த பீஹார்பூகம்பத்தில் ஜவஹர்லால் மண்வெட்டியும் கூடையும் சுமந்து வேலையாட்களோடு உழைத்தார். தொண்டர் பலர் அவரைப் பின்பற்றி வேலை செய்தனர். பின்னர், கல்கத்தாவில் ராஜத்துவேஷமாகப் பேசினார் என்று அவருக்கு அரசாங்கத்தார் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை விதித்தனர். அவர் சிறையில் இருக்கையில், ஐரோப்பாவில் இருந்த அவர்மனைவிக்கு அசௌக்கியம் மிகுந்தது. அதனால் அவரைக் காண்பதற்காக அரசாங்கத்தார் ஜவஹரை விடுதலை செய்தனர்.

ஜவஹர் மனைவியைப் பார்ப்பதற்காக ஐரோப்பாவிற்குச் சென்றார். அங்கு அவ் வம்மையார் மேலுலகம் அடைந்தார். இந்தியாதேசம் முழுவதும் அந்தத் துக்கத்-

தால் வருந்தியது. ஜவஹர் அந்தத் துன்பத்தில் மூழ்கினார்; ஆயினும், இந்தியாவிற்கு வந்து மாந்தரின் விருப்பத்திற்கு இணங்கி, இரண்டாம் முறை காங்கிரஸ் தலைவராய் அமர்ந்தார்.

1942-இல் காங்கிரஸ்தலைவர்கள் கூடி, "ஆங்கில ஆட்சி இந்தியாவை விட்டு அகலவேண்டும்" என்று தீர்மானஞ்செய்தனர். அதனால், மறுநாளே மஹாத்மா-காந்தி, ஜவஹர் முதலியோர் சிறைப்பட்டனர். நாட்டு-மக்கள் செய்த பெருங்கிளர்ச்சி கொடிய அடக்கு-முறையால் நின்றது.

பின்னர் 1945 ஜூன் மாதம் ஜவஹர்லால் விடுதலை அடைந்தார். எண்ணிறந்த மக்கள் அவரை வரவேற்றுப் பாராட்டினர். அவர் மீண்டும் காங்கிரஸ் தலைவ ரானார்.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஆங்கிலேயர் நம் தேசத்துக்குச் சுதந்திரம் அளிக்க எண்ணினர். ஆயின், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்படவில்லை. அதனால் இந்தியாவில் ஸிந்துமாகாணம் முதலிய சில பகுதிகள் 'பாகிஸ்தான்' என்று தனிராஜ்யம் ஆயின. மற்றைய மாகாணங்கள் முன்புபோல் இந்தியா என்று வழங்கப்படுகின்றன. இந்தியாவிற்கு நம் பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு முதலமைச்சர் ஆயினார்.

பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு நான்கு முறை காங்-கிரஸ் மகாசபைத் தலைவர்பதவியைப் பெற்றிருக்கின்றார்.

நாட்டின் விடுதலைக்காக அவர் 17-ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருந்திருக்கின்றார். இத்தகையை அரிய தலைவரின் அறிவுரைகளின்படி பணிசெய்து நாம் நாட்டை வாழ்விப்போமாக.

வாழ்க ஜவஹர்லால் நெஹ்ரு! வாழ்க இந்தியா !!

## அருஞ்சொற் பொருள்

பரிபாலித்து-ரக்ஷித்து. விஞ்ஞானம்-'ஸைன்ஸ்'

## வினக்கள்

1. ஜவஹர்லாலுக்கு இளமையில் கற்பித்த ஆசிரியர் யார்? அவர் கற்பித்தவை என்ன?

2. ஸைமனைத் தலைவராகக் கொண்ட குழு இந்தியாவிற்கு வந்தது ஏன்?

3. நெஹ்ரு குடும்பத்தினர் எல்லாரும் தேசத் தொண்டில் ஈடுபட்டது எப்பொழுது?

## பயிற்சி 5

1. திருமணம் டில்லியில் மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. திருமணம் செயப்படுபொருளாகும்படி வாக்கியம் அமைக்க.

2. குதிரைப்படைவீரர் தொண்டரைத் தடியால் தாக்கிக் கலைத்தனர்.
'தொண்டர்' என்பது எழுவாயாக வாக்கியம் எழுதுக.

3. மறியல், அடக்குமுறை, துக்கத்தால், துக்கத்தில். இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

# 6. அணுவுயிர்களால் உண்டாகும் நோய்கள்

அணுவுயிர்களினுல் நோய்கள் உண்டாகும் விதத்தையும், அவை வாராமல் தடுக்கும் முறைகளை-யும், வந்தால் நீக்கும் வழிகளையும்பற்றி இங்குச் சிறிது கவனிப்போம்.

அணுவுயிர்கள் நம்மைச் சுற்றி நாற்புறமும் வசிக்கின்றன. அவை எவ்வாறு நம் உடலினுட் புகுகின்றன. உட்புகுந்து எவ்வாறு நோயை உண்டு-பண்ணுகின்றன? அவை நாம் உட்கொள்ளும் வாயு. நீர் முதலியவற்றோடு சேர்ந்து உட்புகுகின்றன. அதுவன்றி, உடம்பில் எங்கேனும் காயம் ஏற்படின் அதன் வழியாயும் அவை உள்ளே சென்றுவிடும். அணுக்கள் உடம்பினுட் புகுந்து இரதத்தில் கலந்தாவது, வேறுவிதமாயாவது நோயை உண்டுபண்ணும்; சில அணுக்கள் பல நாட்களின் பின்னர், நோயைத் தோன்றுவிக்கும்.

ஜீவஅணுக்கள் ஒருவரிடத்தினின்று மற்றொரு-வரிடம் செல்லுந் தன்மை யுடையன. அதுபற்றி அவற்றால் உண்டாகும் நோய்களைத் தொற்று நோய்கள் என்கின்றோம். தொற்றுநோய்களுள் எங்கும் காணப்-படுபவை வைசூரி, விஷபேதி, குளிர்காய்ச்சல் முதலான-

வைகளாம். க்ஷயம், குஷ்டம் என்பவற்றையுற் இவ் வகையிற் சேர்க்கலாம். தொற்றுநோய் நடைபெறுங்-காலத்தில் நாம் சில முக்கியமான முறைகளைக் கைக்-கொண்டால் பெரும்பாலும் அவற்றிற்குத் தப்பிக்-கொள்ளலாம்.

முதலில் நாம் குடியிருக்கும் வீடுகளையும் வீட்டுப் பக்கங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். வீட்டின் பக்கத்தில் தண்ணீர் தேங்கியிருக்க விடலாகாது. நோயாளியின் உடைகள், மலஜலங்கள் இவற்றின் மூல-மாகத் தொற்றுநோய்கள் பரவுகின்றனவாதலால், அந் நோய் கண்டிருப்பவர்களைத் தனியான வேறிடத்தில் வைத்திருப்பது உத்தமம். இனி, மேலே கூறிய நோய்-களுள் ஒவ்வொன்றைப்பற்றியும் சிறிது கூறுவோம்.

வைசூரி:—இந் நோய் ஒருவகை அணுக்களால் உண்டாகின்றது. இவ் வணுக்கள் ஒரு மைல் தூரம்-வரையிலும் சென்று நோயை உண்டுபண்ணக்கூடியவை. இவை மனிதர்உடம்பினுட் புகுந்தபின், இவற்றினின்று ஒருவகை விஷம் உண்டாகின்றது. அதனல் மரணம் நேர்கின்றது. ஆனல், இவற்றல் உண்டாகும் விஷம் சிறிதளவாயிருந்தால், மனிதர்களுக்குத் தீங்கு நேர்வ-தில்லை ; அப்பொழுது இவ் வணுக்களே இறந்துபோகும்.

அம்மை குத்திக்கொண்டால், வைசூரியை உண்டுபண்ணும் அணுக்களின் விஷம் சிறிதளவு நம் உடம்பினுட் பரவியிருக்கும். அது குறைவாயிருப்பதனல் நமக்குத் தீங்கு விளைவதில்லை. அவ் விஷத்தினல்,

பின்னர் நம் சரீரத்தினுட் புகும் அணுக்கள் மாண்டு-போகின்றன. ஒருவேளை அவ்வணுக்கள் பிரவேசித்-தாலும் அதிகமாகப் பரவுவதில்லை. இதனாலேயே அம்மை குத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அம்மை குத்துவதனால் உண்டாகின்ற விஷம் ஏழாண்டுகள்வரையிலுமே நம் உடம்பினுள்ளிருந்து நோயைத் தடுக்கும். ஆதலின், ஏழு வருஷங்களுக்கு ஒருமுறை அம்மைகுத்திக்கொள்வது அவசியம்.

விஷபேதி:—இதுவும் ஜீவஅணுக்களால் உண்டா-வதுவே. இவ்வணுக்கள் நீரிலும் ஈரமுள்ள மண்ணிலும் உண்டாகின்றன. இந்நோய் பருகும்நீரின் மூலமாக முதலில் உண்டாகின்றது; பின் நோயாளியின் மலத்-தின் வழியாகப் பரவுகின்றது. நோயாளிகளின் உடை-களைச் சுத்த ஜலமுள்ள குளங்களில் துவைப்பதனால், இவ்வணுக்கள் அக் குளத்துநீரிற் பரவுகின்றன. சிலருக்-குப் பயத்தினாலும் சில வேளைகளில் இந்நோய் உண்டாக-லாம். ஆயினும், அப்பொழுதும் அணுக்களே காரண-மாகும். வைசூரியைப்போல் விஷபேதி காற்றின் மூலமாகப் பரவுவதன்றாகலின், நோய்கண்டவரின் அருகில் அஞ்சாது செல்லலாம். ஆனால், அவருடைய மலம் முதலியவை நம்மேற்படாதபடி காத்துக்கொள்ள வேண்டும்; கைகால்களிற் பட்டுவிட்டால் கார்பாலிக்-மருந்து சேர்ந்த நீரினால் நன்றாகக் கழுவிக்கொள்ள-

வேண்டும். விஷபேதி அசுத்தமான இடங்களில் முதலில் பரவி, பின்னர், பிரயாணிகள்மூலமாகப் பலவிடங்களுக்கும் செல்கின்றது. திருவிழாநடக்குமிடங்களிலும், பெரிய சந்தை கூடுமிடங்களிலும் இந்நோய் பெரும்பாலும் நீடித்திருக்கின்றது.

விஷபேதி காணுங் காலங்களில், வீடும் வீட்டின் பக்கங்களும் சுத்தமாயிருக்கவேண்டும் ; தண்ணீரை மிக்க ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும். அதனை நன்ருகக் கொதிக்கக் காய்ச்சி வடிகட்டியே உட்கொள்ளவேண்டும். காய், அளிந்தபழம் முதலியவைகளை உண்ணுதல் ஆகாது.

விஷபேதி கண்டவர்களின் மலம் முதலியவற்றைத் திராவக மருந்து சேர்த்து அப்புறப்படுத்த வேண்டும். மரத்தூளுடன் கலந்து எரித்துவிடுவது நலம். நோயாளியின் அறையில் உணவுப்பொருள்களை வைத்திருக்கலாகாது. ஏனெனின், இந்நோயின் அணுக்கள் அவற்றுட் புகுந்துவிடும். அவை பாலில் எளிதில் கலக்குந் தன்மையுடையன.

**குளிர்காய்ச்சல்:**—ஜீவ அணுக்களால் உண்டாகும் நோய்களுளெல்லாம் இதுவே பலமனிதர்களை வருத்தி அழிக்கின்றது. நமது தேசத்தில் ஓர்யாண்டில் ஏறக்குறைய ஐம்பதுநூருயிரம் மனிதர் இந்நோயால் மாய்கின்றனர். ஆனுல், ஜனங்கள் மகமாரி, வைசூரி முதலிய

நோய்களுக்கு அஞ்சுவதுபோல இதற்கு அஞ்சுவதில்லை. அதற்குக் காரணம் இந்நோய் நெடுங்காலமாகப் பழகிவிட்டதுவேயாகும்.

குளிர்காய்ச்சல் அசுத்தவாயுவினாலும் அழுக்குநீரினாலும் உண்டாகின்றது என்பர். ஆயினும், ஒருவகையணுக்கள் இரத்தத்தில் கலப்பதனால் இந்நோய் உண்டாகின்றது. அவ் வணுக்கள் மனிதர்உடம்பினுட் புகுந்து பலநாள் வாழ்ந்து பல்குகின்றன. மனிதர் தமக்கு வசமாகாத சமயத்தில் அவ்வணுக்கள் மாய்ந்துபோகும். பெரும்பாலும் அவை கொதுகுகளைச் சேர்ந்திருக்கும். அக் கொதுகுகள் மனிதரைக் கடிக்கையில், அவை அவருடலுட் புகுந்து இரத்தத்தில் கலக்கின்றன. கொதுகுகளில் பலவகை உண்டு. அவற்றுள் ஒருவகைக் கொதுகைப் பற்றும் அணுக்களே குளிர்காய்ச்சலை உண்டுபண்ணுகின்றன. அவ்வகை அணுக்கள் அரைமைல் தூரம்வரையில் பரவிச்செல்லும்.

குளிர்காய்ச்சலைத் தடுப்பதற்கு, முதலில் கொதுகுகள் உண்டாகுங் குளங் குட்டைகளைத் தூர்க்கவேண்டும். தண்ணீர் தேங்கிக்கிடக்க விடலாகாது. பொருளுடையவர்கள் இரவுமுழுவதும் கொதுகுவலையை உபயோகப்படுத்துதல் நலம். கொதுகுகள் உண்டாகு மிடங்களில் வசிப்பவர் க்வினின் என்னும் மருந்தை முதலிலேயே உட்கொண்டுவர வேண்டும்.

க்ஷயரோகம் :—இதுவும் ஒருவகை அணுக்களாலேயே உண்டாகின்றது. இந் நோயினால் சுமார் நூற்றுக்-

குப் பதினுன்குபேர் மரணமடைகின்றனர். அழுகிக் கெட்டுப்போன பொருள்களிலிருக்கும் அணுக்கள், மனிதர்கள் கண்டவிடங்களிலெல்லாம் எச்சில் உமிழ்வதனுல் மேலே எழுந்து காற்ருேடு கலக்கின்றன. நிலம் ஈரமாயிருக்கும் பொழுதும், காற்று நன்ருக வீசியடிக்காத காலத்தும் இந்நோய் பரவும். மனிதர்கள் அசுத்தவாயு வீசும் இடத்தில் நின்று நெடுங்காலம் வேலே செய்தலினுலும் இஃது உண்டாதல் கூடும். இஃது உடல்வலிமையில்லாதவர்களேப் பற்றுகின்றது. இதனுல், நாளடைவில் சுவாசாசயம் கெட்டுப்போகின்றது. இந்நோயினுல் விரைவில் மரணம் நேராவிடினும், நோயாளிகள் படுந்துயரம் அளவிறந்ததாகும். இது பரம்பரையாகத் தொடர்ந்துவருதலும் உண்டு. இவற்ருல் இது மிகக் கொடிய நோயே என்பதில் ஐயமில்லேயன்ருே ?

நோயாளிகளேச் சுத்தவாயு வீசுமிடத்தில் வசிக்கச் செய்யவேண்டும் ; நல்ல வெளிச்சமும் அவசியமாகும். அவர் உமிழுங் கோழையினுல் நோய் பரவுமாதலின், அதைத் திராவகத்துடன் கலந்து எரித்துவிடுதல் நலம்.

அணுவுயிர்களால் உண்டாகும் நோய்கள் இன்னும் சில உள. ஆதலால், நாம் இயன்றவரையிலும் சுத்தமாயிருக்க முயலவேண்டும் ? முக்கியமாகத் தண்ணீர், காற்று இவைகளில் கவனம் வைக்கவேண்டும்.

## அருஞ்சொற் பொருள்

பல்கி-பலவாகி.
கொதுகு-கொசுகு.
அளவு இறந்தது-அளவு கடந்தது.

## வினாக்கள்

1. அணுவுயிர்கள் நம் உடம்பினுள் எவ்வாறு புகுகின்றன?

2. விஷபேதிக்குக் காரணம் என்ன? அவ்வணுக்கள் எங்கு உண்டாகின்றன? எவ்வாறு பரவுகின்றன?

3. 'இது மிகக் கொடிய நோயே'—எது? எதனால்?

4. அம்மை குத்தும்படி ஏற்பாடு செய்வதன் காரணம் என்ன?

5. குளிர்காய்ச்சல் எவைகளினால் உண்டாகிறது?

## பயிற்சி 6

1. ஏற்படின், அதுபற்றி, மூலமாக, அதிகமாக, எளிதில்.

இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. சிறிதும் ஈரமில்லாத பொருள்களின்மேல் அணுக்கள் அணுகி அவற்றைக் கெடுப்பதில்லை.

கெடுவதில்லை என்பது பயனிலையாகும்படி வாக்கியம் எழுதுக.

3. சில அணுக்கள் பலநாட்களின் பின்னர் நோயைத் தோன்றுவிக்கும்.

செயப்படுபொருளை எழுவாயாக வைத்து வாக்கியம் எழுதுக.

4. ஒருவகை அணுக்கள் இரத்தத்தில் கலப்பதனால் இந் நோய் உண்டாகின்றது.

நோய் செயப்படுபொருளாகும்படி வாக்கியம் அமைக்க.

# 7. பாண்டித்துரை

செந்தமிழ்நாடு என்று எல்லாராலும் புகழ்ந்து கூறப்படுவது பாண்டியநாடு. முற்காலத்தில் பாண்டியர்கள் புலவர் பலரைக் கூட்டிச் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர். அவ்வாறு மூன்றுமுறை சங்கம் தோன்றி நடைபெற்றுவந்தது. அம்மூன்றனுள் கடைசியில் தோன்றிய சங்கம் ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன்னரே நின்றுவிட்டது. பிற்காலத்தில் அந்நாட்டை ஆண்ட அரசர்கள் யாருமே தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்தவில்லை. இன்றைக்கு 49 ஆண்டுகளுக்குமுன் (கி. பி. 1901-ல்) மதுரைமாநகரில் பழையபடி தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. அதை நிறுவியவர் பாண்டித்துரை என்னுந் தமிழ்வள்ளல். அவருடைய வரலாற்றைத் தமிழ்மக்களாகிய நாம் அறிவது மிக்க அவசியமாகும்.

நமது தேசத்தில் எல்லாராலும் புகழப்படுகின்ற சேது என்னும் ஸ்தலம் பாண்டியநாட்டின் கீழைக்கடலோரத்தை அடுத் துளது. அச் சேதுநாட்டை ஆண்ட பெருவள்ளல் பாஸ்கர சேதுபதிக்குப் பெரியதந்தையார் பொன்னுச்சாமித் தேவர். அவருக்கு மனைவியர் மூவர். அவருள் மூத்தமனைவியாருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவ்விருவருள் இளையவரே நாம் மேற்கூறிய

பாண்டித்துரை. அவருக்குத் தந்தையார் இட்டபெயர் 'உக்கிர பாண்டியன்' என்பது. ஆயினும், 'பாண்டித்-துரை' என்னும் பெயரே வழங்கிவந்தது.

நம் பாண்டித்துரை 1867-ஆம்ஆண்டு மார்ச்சுமீ 22-ஆம் நாள் தோன்றினர். அவருக்கு மூன்றும் வயது நடைபெறுகையில், தந்தையார் மேலுலகை யடைந்த-தனல் சேஷாத்திரி அய்யங்கார் என்பவருடைய கண் காணிப்பில் வளர்ந்துவந்தார்; இளம்பருவத்தில் அழகர் ராஜு என்னும் புலவரிடம் தமிழ்கற்றார்; பின்னர், இராமநாதபுரத்திலுள்ள ஆங்கிலக்கலாசாலையில் கற்று வந்தார்.

பாண்டித்துரை பதினெட்டாம் வயதில் தம்-முடைய ஜமீன் பூமி முதலியவற்றின் நிர்வாகங்களைச் சேஷாத்திரி ஐயங்காரிடமிருந்து ஏற்றார். அதன் பின்பும் அவர் கல்வியில் ஊக்கமுடையவராய், அப்போது ஸம்ஸ்-தான வித்துவானாய் விளங்கிய சதாவதானம் முத்துஸாமி ஐயங்காரிடம் கம்பராமாயணம் முதலிய சிறந்த நூல்-களைக் கற்றுவந்தார்; சைவப்புராணங்களையும், சைவ சமயசாஸ்திரங்களையும், இசையையும் வேறு நல்லாசிரி-யர்களிடம் கற்றறிந்தார்; இவ்வாறு அவர் பலதுறை-களிலும் அறிவு நிரம்பினவரா யிருந்ததனல் அவரிடம் தமிழ்ப்புலவர்களும் இசைப்புலவர்களும் நாள்தோறும் வருவர். அவர், புலவர்கள் சொல்லும் பொருள்நுட்-

1. இவர் மயிலாப்பூரில் புகழ்பெற்ற வக்கீல் S. ஸ்ரீநிவாச ஐயங்காருக்குத் தந்தையார்.

பங்களைக் கேட்டும், தமிழ்நூலாராய்ச்சி செய்தும் இன்பமாகக் காலங்கழித்தார்.

பாண்டித்துரை கேட்போர் மகிழும்வண்ணம் பிரசங்கஞ் செய்யும் ஆற்றல் மிக்கவர்; கூட்டங்களில் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்துவதில் வல்லவர். தஞ்சை, பாளையங்கோட்டை முதலிய நகரங்களில் அவர் செய்த பிரசங்கங்களின் சிறப்பு தமிழ்நாடெங்கும் பரவியது.

ஒருகாலத்தில் பாண்டித்துரை சிலநாள் மதுரையில் தங்கியிருந்தார். அப்பொழுது அவருடைய சொற்பொழிவைக் கேட்கப் பலர் விரும்பினர். அதற்காகக் கம்பராமாயணம், திருக்குறள் இவை போன்ற நூல்கள் வேண்டியிருந்தன. அவற்றைப் பெற விரும்பி நண்பர் சிலரிடம் ஆள்விடுத்தார்; அவை யாரிடத்திலும் கிடைக்காததனால், அவர் அவற்றைப் புத்தகக்கடையில் விலைக்கு வாங்கினார். அப்பொழுது, 'தமிழ் நிலைபெற்ற இந் நகரத்தில் தமிழ்நிலை இவ்வாறுயிற்றே!' என்று வருந்தினார்; அதனால், அந்நகரில், தமிழ்மொழி வளர்ந்தோங்கச் செய்யவேண்டும் என்று உறுதிகொண்டார். அதனை நிறைவேற்றுதற்கு மதுரை வழக்கறிஞர் திரு. டி. சி. சீனிவாஸய்யங்கார் உதவியா யிருந்தார்.

சில நாட்களின்பின் சென்னை மாகாண அரசியல் மகாநாடு மதுரையில் கூடிற்று. நம் தேவர் வரவேற்புக் குழுவின் தலைவராயிருந்து கூட்டத்தில் பிரதிநிதிகளை

வரவேற்று ஓர் இனிய சொற்பொழிவு ஆற்றினார். அக்கூட்டத்தில் முடிவில் அவர் மதுரையில் தமிழ் வளர்ந்தோங்கிய பழைய வரலாற்றையும் தம் காலத்தில் இருக்குந் தாழ்நிலையையும் எடுத்துக்கூறி, பண்டுபோலத் தமிழை வளர்த்தற்காகத் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவத் தாம் எண்ணியிருப்பதைத் தெரிவித்தார். அனைவரும் உவகையுடன் அவர்கருத்தினை ஏற்றுக்கொண்டனர். மறுநாள், தமிழ்ச்சங்கம் நிலைநாட்டுவதை ஆராயப் பாண்டித்துரை ஒரு கூட்டம் கூட்டினார்; அக்கூட்டத்தில், மொழித்திறத்தில் தமிழ்மக்கள் செய்யவேண்டிய கடமையைப்பற்றி ஓர் அரிய உபந்யாஸம் செய்தார். அதனைக் கேட்ட அறிஞர் அனைவரும் அவரது தமிழ்த்தொண்டினைப் பாராட்டியதனோடு தம்மால் ஆவனவற்றைச் செய்வதாக உறுதி கூறினர்.

1901-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14-ஆந் தேதியன்று மதுரையில் சேதுபதி ஹைஸ்கூலினுள் தனிக்கட்டடத்தில் நான்காந் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது. அவ்விழா மூன்றுநாள் நடைபெற்றது. அதற்குத் திரு. உ. வே. சாமிநாதய்யர், திரு. சண்முகம் பிள்ளை முதலிய தமிழ்ப்புலவர்களும் பிற அறிஞர்களும் வந்திருந்தனர். பாஸ்கரஸேதுபதி தம் பரிவாரங்களோடு வந்து அக் கூட்டத்தைச் சிறப்பித்தார். புலவர் பலர் அரிய பொருள்பற்றிப் பேசினர்.



தமிழ்ச்சங்கத்தின் சார்பில் செந்தமிழ்க்கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச்சாலை இவைகள் ஏற்படுத்தப்பட்டன. செந்தமிழ்க்கலாசாலையின் தலைமையாசிரியராகத் திரு. நாராயணையங்காரை நியமித்தனர். சேதுவரசர் தம் ஸம்ஸ்தானப் பெரும்புலவராகிய ரா. இராகவையங்காரை ஆராய்ச்சித்துறைத் தலைவராக அமர்வித்தார். புத்தகசாலைக்குச் சேதுபதியும் பாண்டித்துரையும் மிகப்பல நூல்களை அளித்தனர். அரிய ஏட்டுச்சுவடிகளை அறிஞர் பலர் உதவினர். சிலகாலத்தின் பின்னர், பாண்டித்துரை மதுரையிலிருந்த தம் பெரிய மாளிகையைத் தமிழ்ச்சங்கத்துக்காக நல்கினர்.

பாண்டித்துரை கண்ணுங் கருத்துமா யிருந்து தமிழ்ச்சங்கத்தை வளர்த்துவந்தார் ; கலாசாலையில் மாணுக்கர் பலருக்கு உணவும் உறையுளும் அளித்துக் கல்வி பயில்வித்தார். அக் கலாசாலையில் முறையே கற்றுப் பண்டித பட்டம் பெற்றவர் பலர். அக்காலத்தில் வித்வான் பரீக்ஷை இல்லாததனுல், நாட்டின் பல பகுதிகளில் இருந்தவர்களும் ஆங்காங்குத் தமிழைக் கற்று, அச் சங்கப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றுப் பெருமையுற்றனர்.

1903-ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கத்திலிருந்து ‘செந்தமிழ்’ என்னும் மாதப்பத்திரிகை வெளியாயிற்று. திரு. ரா. இராகவையங்கார் பத்திராதிபராயிருந்து சிறப்புற நடத்திவந்தார்; பழைய நூல்கள் பலவற்றை ஆராய்ந்து அப் பத்திரிகையில் வெளியிட்டார். அறிஞர்

பலர் அரிய கட்டுரைகளை எழுதிச் சிறப்பித்தனர். இவற்றால் 'செந்தமிழ்' அறிவுச்சுடராய் விளங்கிற்று.

பாண்டித்துரை இவ்வாறு தமிழ்ச்சங்க மூலமாகத் தமிழை வளர்த்ததன்றி, அறிஞர்களுக்குப் பொருளுதவி-செய்து தமிழ்நூல்களை வெளியிடுவித்தார். அவருதவி-யால் வெளிவந்த நூல்கள் பல. அன்றியும், அவர், தாம் கற்ற பலப்பல நூல்களிலிருந்து சிறந்த செய்யுட்களைத் தொகுத்து, பல பகுதிகளாக வகுத்து, 'பன்னூற்றிரட்டு' என்னும் பெயரால் ஒரு நூலை வெளியிட்டார். அது சொற்பொழிவாற்றுபவருக்கும் கட்டுரையெழுதுபவருக்-கும் பேருதவியா யிருக்கின்றது. தேவர், தோத்திரப்-பாக்கள் பலவற்றையும், 'காவடிச்சிந்து' என்னும் இசை நூலையும் இயற்றியுள்ளார்; பல ஆராய்ச்சிக் கட்டுரை-களைச் 'செந்தமி'ழில் எழுதியிருக்கின்றார். இவற்றால், நூல்களைக் கசடறக் கற்றல், ஆராய்ச்சி செய்தல், நூல் இயற்றுதல், பிரசங்கஞ்செய்தல் இவை யெல்லாவற்றி-லும் தேவர் மிக்க திறமை படைத்திருந்தார் என்பது அறியலாகும்.

ஒருகாலத்தில் மதுரையில் வக்கீலாயிருந்த 'ஸ்காட்' என்னும் ஆங்கிலோ இந்தியர் திருக்குறளில் பல செய்யுட்-களைத் தம் மனம்போலத் திருத்தி ஒரு பதிப்பு வெளி-யிட்டார். அதனை அறிந்த பாண்டித்துரை அவரிடம் இருந்த 300 புத்தகங்களையும் விலைக்கு வாங்கி, தீயில் இடுவித்தார். தவறில்லா முறையில் தமிழ்ப்புத்தகங்களை வெளியிட வேண்டும் என்பது தேவர்கருத்து.

நம் தேவர் நாட்டுப்பற்றும் மிக்கவர். தூற்றுக்குடியில் இருந்த திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை 'சுதேசக்கப்பற் கம்பெனி' யொன்றை அமைக்க முயற்சி செய்த போது, நம் பாண்டித்துரை இலட்சம் ரூபாய்வரை கொடுத்து அக் கம்பெனியில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்; தம் நண்பர்களையும் அதில் ஈடுபடும்படி தூண்டினர்.

இவ்வாறு தமிழ்ப்பற்றும் நாட்டுப்பற்றும் மிக்குப் பெருந்தொண்டாற்றிவந்த பாண்டித்துரை தமது 44-ஆம் வயதில் 1911-ஆம் வருடம் டிசம்பர் மாதம் இரண்டாந்தேதி உலகவாழ்வினை நீத்தார். செந்தமிழ் வளர்த்த செல்வப்பாண்டியனை இழந்ததனல் தமிழ்நாடு முழுவதும் கலக்க மடைந்தது. அவரால் பரிபாலிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கண்ணீர்விட்டுக் கதறின.

முற்காலத்துப் பாண்டியரைப்போன்று தமிழ்ச் சங்கம் அமைத்து, இக்காலநிலைக்கு ஏற்பக் கலாசாலை, பத்திரிகை முதலியன நடத்திப் பலவழிகளில் தமிழ்மொழியை வளர்த்த தமிழரசர் நம் பாண்டித்துரையே. அவரைப்போன்ற வள்ளலும் தமிழ்ப்பற்று மிக்கவரும் ஆகிய பெருஞ்செல்வர் ஒருவர் தோன்றித் தமிழ்மொழியைப் பண்டுபோல் நல்ல முறையில் வளர்க்க அருள் புரியுமாறு இறைவனை வேண்டுவோமாக.

அருஞ்சொற் பொருள்

நிறுவுதல்-நிலைநிறுத்துதல். குழு-கூட்டம், சபை.
கண்காணிப்பு-மேற்பார்வை. உறையுள்-இருப்பிடம்.

## வினாக்கள்

1. சேஷாத்திரி ஐயங்கார், முத்துசாமி ஐயங்கார், ரா. இராகவையங்கார்: இவர்களைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

2. தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வேறு எவை நிறுவப்பட்டன?

3. பாண்டித்துரை நாட்டுப்பற்றும் உள்ளவர் என்பது எதனால் அறியப்படும்?

## பயிற்சி 7

1. மூத்த மனைவியாருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர்.

அவ் விருவருள் இளையவரே பாண்டித்துரை.

இவ் விரண்டு வாக்கியங்களை ஒரு வாக்கியம் ஆக்குக.

2. இவ்வாறு அவர் பலதுறைகளிலும் அறிவு நிரம்பினவரா யிருந்ததனால், அவரிடம் தமிழ்ப்புலவர்களும் இசைப்புலவர்களும் நாள்தோறும் வருவர்.

இவ்வாக்கியத்தை இரண்டு வாக்கியம் ஆக்குக.

3. அனைவரும் உவகையுடன் ஏற்றுக்கொண்டனர்.

எல்லாவற்றிலும் தேவர் மிக்க திறமை படைத்திருந்தார்.

பொருள் மாறாதபடி இவ்வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்க ளாக்குக.

---

# 8. முயற்சி திருவினை ஆக்கும்

[குசேலருக்கும் அவர்மனைவி சுசீலைக்கும் நடந்த சம்பாஷணை]

குசேலர் :—சுசீலை, நீ ஏதோ சொல்லுதற்கு வந்திருப்பதுபோல் தோன்றுகின்றதே, என்ன செய்தி?

சுசீலை :—வேறொன்றும் இல்லை. குழந்தைகளைப் பற்றித் தங்களிடஞ் சொல்லவேண்டும் என்று நெடுநாளாக விருப்பம் உளது.

குசே :—அப்படியா! அது என்ன?

சுசீ :—குழந்தைகட்கு ஒருநாளாவது வயிறுர நான் உணவு இடவில்லை. அன்றியும், உரிய வேளைகளில் உணவு கிடைக்காமல் பசியினால் அவர்கள் படுந் துன்பத்தைப் பார்க்க என் மனம் பொறுக்கவில்லை. மக்கட்குத் தக்க உணவு அளித்து அவர்களை வளர்த்துக் காப்பது தாய்தந்தையர்கடமை அல்லவா? நமது வறுமை தீர யாதாவது ஒரு வழி தேடவேண்டும்.

குசே:—இதற்கு நான் என்ன செய்ய முடியும்? முன்பிறப்பில் நன்மை செய்யாதவர்கள் இப்பிறப்பில் வறுமையால் வருந்துவார்கள். வெறும்பானை பொங்குமோ!

சுசீ:—தாங்கள் கூறுவது உண்மையே. ஆயின், குழந்தைகளைக் காப்பாற்றுவது நமது கடமை அல்லவா?

குசே:—அது நம்முடைய கடமையா? எல்லாவுயிர்களையுங் காப்பது இறைவன்கடமை. முட்டைக்குள் இருக்கும் உயிருக்கு உணவு கொடுப்பவர் யார்? நீயா, நானா?

சுசீ:—முட்டைக்குள் இருக்கும் உயிருக்கு உணவு கொடுப்பவன் இறைவனே. ஆயின், முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சுக்கு இரை கொடுப்பது எது? தாய்ப்பறவையல்லவோ? காக்கை முதலிய பறவைகள் இரை தேடிக்கொண்டு வந்து குஞ்சுகளின் வாயில் இடுவதை நாம் பார்க்கவில்லையா? இறைவன் இரை கொடுப்பான் என்று அவை சும்மா இருக்கவில்லையே! புலி முதலிய கொடிய விலங்குகளும் தம் இளங்குருளைகட்கு உரிய இரை தேடிக் கொணர்ந்து கொடுக்குமாமே!

குசே:—சரி. வெளியே செல்ல இயலாத குஞ்சுக்குத் தாய்ப்பறவை இரை கொண்டுவந்து கொடுக்கின்றது; எப்போதும் அப்படிக் கொடுப்பதில்லையே.

சுசீ:—அப்படியே, நாமும் தொழில் செய்து பொருள்தேட இயலாத குழந்தைகளைக் காக்கவேண்டுமன்றோ! அன்றியும், மக்கட்கும் விலங்கு முதலியவற்றிற்கும் வேறுபாடு இல்லையா? மனிதர் தம் புதல்வர்களைக் கல்வியறிவு உடையவ ராக்க வேண்டும்; யாதேனும் ஒரு தொழிலில் பயில்விக்க வேண்டும். இவை தந்தையின் கடமை அன்றோ?

**குசே** :—அறிஞர்கள் எல்லாக் கடமைகளும் இறைவனுடையனவே என்று விட்டுவிடுவார்கள். அவர்கள் ஒன்றையும் ஏற்றுக்கொள்வதில்லை. இதை நீ அறியாய்போலும்!

**சுசீ** :—சுவாமி, அடியாளுக்கு என்ன தெரியும். தாங்கள் ஒவ்வொருகால் சொன்னதைத்தான் சொல்கிறேன். வினை செய்வது மக்கள்கடமை. அதற்குப் பயனை அளிப்பவன் இறைவன் என்று ஒருமுறை தாங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். மாந்தர் முயற்சி செய்யாதிருப்பது பழியாகும். "ஆள்வினை யின்மை பழி" என்பது ஆன்றோர்வாக்கன்றோ?

**குசே** :—முயற்சியும் நல்வினைப்பயன் இருந்தால்தான் பலன் தரும். நல்வினைப்பயன் இருப்பின் எல்லா நன்மையும் தானே உண்டாகுமே.

**சுசீ** :—நல்வினைப்பயன் இருப்பின், முயற்சியினால் பெரும்பயன் உண்டாகும். அது இல்லாதபோது முயற்சிக்குத் தக்க கூலியாவது கிடைக்கு மன்றோ? "தெய்வத்தா லாகா தெனினும் முயற்சி தன், மெய் வருத்தக் கூலி தரும்" என்பது தாங்கள் அறிந்ததுதானே. நல்வினைப்பயன் இருப்பின் முயற்சி செய்ய வேண்டுவ தில்லையா? நல்வினைப்பயனால் உணவு கிடைப்பின், அதை எடுத்து வாயில் வைத்து உண்ணும் முயற்சியும் செய்ய வேண்டாவோ? எல்லாம் விதியின் பயன் என்று வாளா இருத்தல் தகுமோ? தளர்வின்றி முயற்சி செய்பவர் விதியையும் வென்றுவிடுவர் என்பது பொய்யோ?

குசே :—என்ன! பெரிய பிரசங்கஞ் செய்துவிட்டாயே! நான் செய்யவேண்டுவதைச் சொல்லு.

சுசீ :—தாங்கள் போய், தங்களோடு கற்ற கண்ணபிரானைக் காணவேண்டும். தாங்கள் செய்யவேண்டும் வினை இவ்வளவே. அதற்குக் கண்ணபிரான் தப்பாமற்பலன் அளிப்பார். முயற்சி திருவினை ஆக்கும் அன்றோ ?

## அருஞ்சொற் பொருள்

திரு - செல்வம்
ஆர - நிறைய
வறுமை - ஏழ்மை
வெறும் பானை - ஒன்றும் இல்லாத பானை
குருளை - குட்டி
வினை - காரியம்
ஆள்வினை - முயற்சி
இன்மை - இல்லாமை
ஆன்றோர் - பெரியோர்
தெய்வத்தால் - விதியினால்

## பயிற்சி 8

முயற்சியால் உயர்ந்தவர் ஒருவர்வாலாற்றை எழுதுக.

---

## 9. கோழிப்பண்ணை

கிராமங்கள் வளப்பத்தை அடைந்தாற்றான் நமது நாடு வளம் பெறும். கிராமங்களில் பயிர்த் தொழில் செய்யுங் குடிகளுக்கு உழவுத்தொழிலால் கிடைக்கும் ஊதியம் போதுமானதாக இல்லை. எவ்வளவு பாடு-பட்டாலும் அவர்களுக்கு மிக்க பயன் கிடைப்பதில்லை. இதனால் உழவர்கள் பயிர்த்தொழிலோடு ஏதாவது ஒரு குடிசைக்கைத்தொழிலை நாடவேண்டுவது அவசியமா-கின்றது. அப்படிப்பட்ட பலவகைக் குடிசைத்தொழில்-களுள் ஒன்று கோழிவளர்த்தலாகும். ஊதியம் பெறுவதற்காகக் கோழியை வளர்க்குந் தொழிலைக் கோழிப்-பண்ணை என்பர். கோழிப்பண்ணை லாபந் தருந் தொழில் என்பதில் ஐயமில்லை.

கோழிவளர்ப்புக்குத் தாயகம் இந்தியாவே. கோழி நமது நாட்டில் பண்டைக்காலத்திலிருந்தே அழியாது வரும் ஓர் உயிரினம். முருகப்பெருமான்கொடி சேவற்-கொடி என்று தமிழ்நூல்கள் கூறுவதை யாவரும் அறிவர். நமது பழைய இலக்கியங்களிலும் கோழிகள் கூறப்பட்டுள்ளன. மக்கள் கோழிச்சண்டையைக் கண்டு களிப்பார்கள். ஆனால், கோழிகளை நன்றாக வளர்க்கும் முறை எதுவும் நம் நூல்களில் சொல்லப் படவில்லை.

கோழிகளை வளர்த்து அவற்றால் ஊதியம்பெற-வேண்டுமானால் அவற்றை நன்முறையில் காப்பது மிக்க அவசியம். அப்பொழுதுதான் மிக்க பயனை அடைய முடியும். பயிர்த்தொழில் செய்வோர் ஓய்வுநேரத்தைக் கோழிப்பண்ணையில் செலவிடலாம். அவ்வாறு கவ-னித்தால் கோழிகள் நன்றாய் வளர்ந்து முட்டைகளை யிட்டுப் பயனளிக்கும். கோழிமுட்டைகளுக்கும் கோழி-



உயர்ந்த இனக் கோழிகள்

களுக்கும் நாட்டில் இக்காலத்தில் மிக்க தேவை யிருப்ப-தனால் இத்தொழில் பயனுள்ள தொழிலே யாகும். இக்காலத்தில், படித்தவர்களும் கோழிப்பண்ணையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இதை இழிந்த தொழி-லாகக் கருதுவது கூடாது. இத்தொழிலுக்குப் போதிய அறிவும் முயற்சியும் பயிற்சியும் அவசியம்.

கோழியை முட்டையினம் என்றும், இறைச்சி-யினம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். முட்டை-யிடுவதற்குப் பயன்படுவதை முட்டையினம் என்றும் இறைச்சியாகத் தின்பதற்குப் பயன்படும் இனத்தை இறைச்சியினம் என்றும் கூறுவர். இறைச்சியினக் கோழிகள் நன்கு வளர்ந்து கொழுத்தபின் உணவுப்-பொருளாக விற்கப்படுகின்றன. முட்டையினத்துள் நாட்டுக்கோழிகளைப்பார்க்கிலும் ஜாதிக்கோழிகளே பய-னளிக்கும். நாட்டுக்கோழி மிகக் குறைவாக முட்டை-யிடும். லெக்ஹார்ன் என்னும் கோழி தொடர்ச்சியாக 263 முட்டைகளை யிடுமாம்!

கோழிப்பண்ணைக்குப் போதுமான இடவசதி வேண்டும். கோழிகளைத் தோட்டங்களில் மேயவிடுவது-போல் விட்டால் அவை நன்கு வளரா. கோழிகளுக்-குக் காற்றேட்டமுள்ள இடங்களில் வசதியான கூடுகள் அமைப்பது அவசியம். அவற்றின் சுகாதாரத்தைக் கவனிப்பதும் முக்கியம்.

கோழிகளை நம் மேற்பார்வையில் வைப்பதற்கும், அவற்றின் இனங்கள் கலந்துவிடாமல் தனித்தனி யின-மாக வளர்ப்பதற்கும், முட்டைகளைச் சேகரிப்பதற்கும், அவற்றிற்குக் குறிப்பிட்ட நேரங்களில் இரைபோடுவதற்-கும், அவற்றிற்கு நோய்வந்தால் அந்நோயை மற்றக் கோழியினங்களுக்குப் பரவவொட்டாமல் தடுப்பதற்கும் கூடுகள் அவசியம். கூடுகள் அமைக்கும் இடம் ஈரமும்

நேர்காற்றும் இல்லாத உலர்ந்த இடமாய் இருக்க வேண்டும்; பேன், உண்ணி முதலிய பூச்சிகளும், பாம்பு முதலிய விஷஜந்துக்களும் இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்; நல்ல காற்றும் வெளிச்சமும் சுகாதாரமும் அமைந்திருக்க வேண்டும். கூடுகளுக்குப் பக்கத்தில் புதர்கள், குப்பைப்பள்ளங்கள், கற்குவியல்கள் இவை இருந்தால் பூச்சிகளும் பாம்புகளும் அங்குச் சேர்ந்து-விடும்.

கோழிக்கூடுகளை நிரந்தரமானவைகளாகவும் நகர்த்-திச்செல்லக் கூடியனவாகவும் அமைக்கலாம். நிரந்தர-மான கூடுகளை மழைத்தண்ணீர் நிற்காமல் ஓடக்கூடிய இடத்தில் மரச்சட்டங்களைக்கொண்டு அமைக்கலாம். சுற்றி இரும்புக்கம்பி வலைகளை அடிக்கவேண்டும். மேலே வெயில் படாதவாறு தார் பூசிய பாயினாலோ மரப்பலகையாலோ கூரை அமைக்கவேண்டும். கோழி ஒன்றுக்கு 3 சதுர அடி இடம் போதும். சாதாரணமாக 10 கோழிகளுக்கு 6 அடி நீளம், 5 அடி அகலம், 5 அடி உயரம் உள்ள கூடு போதும். இருபது கோழிகளுக்கு 12 அடி நீளமும் 5 அடி அகலமும் 5 அடி உயரமும் உள்ள கூடு வேண்டும். தரையைச் சுண்ணாம்பினால் அமைத்தல் நல்லது. ஏனென்றால், சுத்தப்படுத்துவதற்கும் உலரவைப்பதற்கும் அடிக்கடி பழுதுநேராமலிருப்பதற்கும் வசதி யுண்டு. நகர்த்திச்செல்லக்கூடிய கோழிக் கூடுகள் 7 அடி நீளம், 5 அடி அகலம், 4 அடி உயரம்

உள்ளவையாகக் கள்ளிப்பலகையால் செய்யலாம். பலகை கெடாதவாறு கீலெண்ணெயோ வர்ணமோ பூசப்படவேண்டும்; சுற்றி வலைக்கம்பி அடிக்கவேண்டும். கூரை மரப்பலகையாக இருக்கலாம். அதிகச் சூடான இடங்களில் புல்லால் கூரை போடுவது நல்லது.

கோழிக்கூடுகளுள், கோழிகள் உட்காருதற்குச் சட்டங்களும் முட்டையிடச் சிறுபெட்டிகளும் தண்ணீர்ப்பாத்திரமும் தீனித்தொட்டிகளும் இருக்கவேண்டும். அவை சுத்தமா யிருக்கவேண்டும். சட்டங்களை 2 அங்குலம் கனமுள்ளனவாகத் தரையிலிருந்து $1\frac{1}{2}$ அடி உயரத்தில் அமைக்கவேண்டும். ஒவ்வொரு கோழிக்கும் 8 அல்லது 10 அங்குலம்வரையிலும் உட்காருமிடம் வேண்டும்.

கூடுகளில் மலங்களை ஏற்றுக்கொள்ளப் பலகைகளை அமைக்கவேண்டும். கோழிகள் உட்காருஞ் சட்டங்களுக்கு 9 அங்குலங்களுக்குக் கீழே இச் சட்டங்கள் இருக்கவேண்டும். பலகையின்மேல் பாதி மண்ணும் பாதி மணலும் சேர்த்துப் பரப்பியிருந்தால் எளிதாகச் சுத்தஞ் செய்யலாம்.

கூடுகளுள் முட்டை வைப்பதற்கு ஏற்ற பெட்டி ஒன்று 15 அங்குல நீளமும் 12 அங்குல அகலமும்

16 அங்குல உயரமும் உடையதா யிருக்கவேண்டும். ஒரு பெட்டியில் மூன்று கோழிகள் இருந்து முட்டை-யிடலாம். நாள்தோறும் அப்பெட்டியைச் சுத்தஞ்-செய்து, அவற்றில் வைக்கோல் அல்லது உலர்ந்த புல் போட்டுவைக்கவேண்டும். அப்படிச் செய்தால் முட்டை உடையாமலிருக்கும். வேறு வகையாக முட்டையிடும் பொறி அமைக்கலாம். அப் பொறி-யைப் படத்தில் காண்க. இது ஒருவகைக் கூடுபோல



முட்டை இடுதற்கு ஏற்ற பொறி

இருக்கும். இப் பொறியின் வாயிலில் ஒரு பலகை முன்னே தொங்கவிடப்பட்டிருக்கும். கோழி முட்டை-யிடும்போது உள்ளே போகும். அது வெளியே

வாராதவாறு முன்பலகை தடுக்கும். கோழி முட்டை-யிட்டதும் கொக்கரிக்கும். நாம் உடனே அம் முட்-டையை எடுத்துக்கொண்டு கோழியை வெளியே விடலாம். முட்டை யிட்டதை உடனே அறிவிப்பதற்கு இப் பொறி வசதி அளிக்கிறது.

கூடுகளுள் இருக்குங் குடிநீர்ச்சட்டியில் ஒரு-நாளுக்கு மூன்று முறையாவது நீரை மாற்றவேண்டும்.



கலப்பு உணவு தயாரித்தல்

கோழிகளுக்குத் தக்க தீனியை நாள்தோறும் மூன்று-முறை கொடுக்கவேண்டும். தானியங்கள் தக்க தீனி-யாகும். தானியத்தில் தவிடு, மிகச் சிறிய அளவு கிளிஞ்சல்தூள் முதலியவை கலந்து வைப்பது நன்று.

முள்ளங்கித்தழையைச் சிறிது உயரத்தில் கட்டிவைத்தால் கோழிகள் மகிழ்ச்சியுடன் அதைத் தின்னும். முக்கியமாக, முட்டை யிடும்போது பெட்டைகளை நன்றாகப் பேணவேண்டும். முட்டையோடுகளைத் தூளாக்கித் தீனியுடன் கலந்து பெட்டைகளுக்குக் கொடுத்தால் அவை இடும் முட்டையின் ஓடுகள் மென்மையா யிராமல் கடினமா யிருக்கும். கோழிகளுக்குக் கலப்புத்தீனி தயாரிப்பதைப் படத்தில் பாருங்கள்.

கோழிகளின் சுகாதாரத்தைக் கவனிப்பது அவசியம். கோழிக்குரிய தீனிகளைப் பொட்டாஷியம் பெர்மாங்கனெட் கலந்த நீரில் கழுவிக் கொடுக்கவேண்டும். கோழிக்கூட்டிற்குள் எவரையும் நுழைய விடக்கூடாது. சிலர் கால்களால் நோய்க்கிருமிகள் கூடுகளுள் போய்ச் சேரலாம். கூட்டிற்குள் போகவேண்டுமானால் கால்களைப் பொட்டாஷியம் பெர்மாங்கனெட் நீரால் கழுவிக்கொண்டு உட்புகுதல் வேண்டும். சாதாரணமாகக் கோழிகளுக்கு, கழிச்சல், அம்மைநோய் இவை வருதல் உண்டு. முதலில் நோயுள்ளவற்றைப் பிரித்துவிட வேண்டும். பின் அவற்றிற்கு மருந்து கொடுக்க வேண்டும்.

கோழிக்குஞ்சுகளைப் பாதுகாப்பதிலும் மிக்க கவனம் செலுத்த வேண்டும். கோழிப்பண்ணையில் ஏராளமாகக் குஞ்சுகள் உற்பத்தி யாகலாம். அத்-

தனைக் குஞ்சுகளுக்கும் தாய்ப்பறவையால் சூடு அளிக்க முடியாது. ஆதலின் இப்படத்தில் காணு-மாறு செயற்கைமுறையில் சூடளிப்ப துண்டு. ஐம்பது குஞ்சுகளுக்கு ஏற்றவாறு ஒரு பெட்டி



குஞ்சுகளுக்குச் சூடு அளிக்கும் முறை

செய்து அதற்கு மேற்பலகையில் ஓர் அடிநீளமும் மூன்றங்குலம் அகலமுமாகக் கம்பளித்துண்டுகளை வெட்டிப் பொருத்தவேண்டும். அப் பலகையை மேற்-கூரையாக அமைக்கவேண்டும். இப்படிச் செய்தால் வேண்டிய சூடு கிடைக்கும்.

பெட்டியின் முன்பக்கத்தில் குழிந்த பெரிய மூங்கிற் பிளவு ஒன்றைக் கட்டி அதில் நொய்யைப் போட்டுவைத்-தால் குஞ்சுகள் அதைப் பொறுக்கித் தின்னும். ஒரு குப்பி

யில் மோரை ஊற்றி, படத்தில் காட்டியவாறு, சட்டியில் அதன் வாய் பொருந்தத் தலைகீழாக வைக்கவேண்டும். அப்படி வைத்தால் மோர் அழுக்கடையாமல், சுத்தமாய், வேண்டிய அளவு சட்டியில் வந்து விழும். கோழிக் குஞ்சுகள் அம் மோரைக் குடித்து நன்றாக வளரும்.

இவ்வாறு கண்ணுங்கருத்துமாயிருந்து கோழிகளைக் கவனித்துவந்தால் அவை யிடும் முட்டைகளை விற்றும் கோழிகளையும் குஞ்சுகளையும் விற்றும் லாபம் பெறலாம். இம்முறையில் நடத்தப்படுங் கோழிப்பண்ணை போதுமான ஊதியத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

## அருஞ்சொற் பொருள்

பண்ணை-கூட்டம்
ஊதியம்-வரும்படி
தாயகம்-பிறப்பிடம்
நிரந்தரமானவை-நிலையாயிருப்பவை, இடம்விட்டுப் பெயர்க்காதவை
பொறி-யந்திரம்

## வினாக்கள்

1. கோழிகளைக் கூட்டில் வளர்க்க வேண்டிய காரணம் என்ன ?
2. கோழிக்கூட்டை எப்படி அமைக்கவேண்டும் ?
3. குஞ்சுகளைப் பாதுகாக்கும் முறையைக் கூறுக.

## பயிற்சி 9

நீ அறிந்த குடிசைத்தொழி லொன்றனைப்பற்றி ஒரு பக்கம் கட்டுரை எழுது.

# 10. குகனும் இராமரும்

ஸ்ரீராமர் தம் தந்தையாரின் கட்டளைக் கிணங்கிக் காட்டுக்குப் புறப்பட்டார். அதனை யறிந்து, அவர் தேவி-யாகிய சீதாபிராட்டியும், துணைவனுகிய இலக்குவனும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர் மூவரும் நாடுங் காடுங் கடந்து கங்கைக்கரையைக் குறுகினர்; கடல்போற் பரந்த கங்கையாற்றையும், அதன் கரையைச் சார்ந்த பொழில்களையும், கரும்பும் நெல்லும் வளர்ந்து கவின் செய்த கழனிகளையும் கண்ணுரக் கண்டு களித்தனர். ஆண்டுத் தவம்புரிந்திருந்த இருடிகள் அவர்களைத் தங்கள் பர்ணசாலைக்கு அழைத்துப் போயினர். அங்கு இராமர் முதலாயினேர் நீராடிப் பூசனை செய்து, அவ்விருடிகள் அருளிய உணவை உண்டு அமர்ந்திருந்தனர்.

கங்கைக்கரையில் சிருங்கிபேரம் என்னும் ஊரில் வேடுவர் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலை-வனுகிய குகன் தன் படைஞராகிய வேடுவர்களுடன் கங்கைக்கரையில் தங்கியிருந்தான்; அப்பொழுது இராமர் முதலாயினேர் அங்கு வந்திருப்பதை யறிந்து, அவர்களைக் காண விரும்பிக் கையுறை கொண்டு, இராமபிரான் தங்கியிருந்த பர்ணசாலையின் வாயிலை யடைந்தான். அங்கு இருந்த இலக்குவன் குகனை உள்ளே விடுத்தான். குகன் பரிவு கூர்ந்து, விரைவிற் சேர்ந்து

ஸ்ரீராமரைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தான்; பின்னர், எழுந்து தலைவணங்கி வாய்புதைத்து நின்றான்.

ஸ்ரீராமர் இன்மொழி கூறி, குகனை இருக்கும்படி பணித்தார். பின்னர், குகனை நோக்கி, "அன்பனே, யாம் இற்றையிரவை இங்கே கழித்து, நாளை விடியலில் இங்குநின்று ஏகுவோம். ஆதலின், நீ இருப்பிடம் எய்தி, புலரும்பொழுதில் நாவாயுடன் இங்கு வருதி" என்று இசைத்தார்.

இராமர் கூறிய இன்மொழிகளைக் கேட்ட குகன், "ஐயனே, தேவரீர் திருமேனியில் பொற்கலை புனைதலை நீக்கி வற்கலை புனைந்திருத்தலையும், தலையில் முடிதரித்தலை நீக்கிச் சடை தரித்திருத்தலையும் கண்ட பாவியேன் உம்மை எவ்வாறு பிரிந்து செல்வேன்; அடியேன் தேவரீருக்குக் குற்றேவல் புரிந்து உடனுறைவேன்; இதைத் திருவுளங் கொள்ளவேண்டும்" என்று இறைஞ்சி வேண்டினான்.

குகன்மனவுறுதியை யறிந்த இராமர் தேவியையும் இளவலையும் நோக்கி, அவனது அன்பின் மிகுதியை அறியுமாறு கடைக்கணித்தார்; பின்னர், ஆண்டுநின்றும் அகலாதே யிருந்த குகனை நோக்கி, "அன்பனே, நீ எம்மோடு இங்கேயே இரு" என்று அருள்புரிந்தார். அப்பொழுது குகன் "மனுகுலத்தில் அவதரித்த வள்ளலே, தாம் நாட்டைத் துறந்து காட்டை யடைந்ததன்

காரணம் யாது ? முதியவர் கானகம் அடைந்து தவம்புரிவது முறை. தேவரீர் இவ் விளம்பருவத்தில் இத் துறவொழுக்கம் மேற்கொண்டது அறமன்றே ?" என்று வினவினன். இலக்குவன் மந்தரையின் சூழ்ச்சியும், கைகேசியின் கைதவமும், தசரதர் அவளுக்கு அருளிய வரங்களின் வரலாறும் முற்றும் அறிவித்தான். அவ் வரலாற்றைக் கேட்ட குகன் மனம் நொந்து, "கோசலநாடு குறைதவம் செய்தது போலும்! நல்லற வடிவினராகிய இவர்க்கு இத் தீயூழ் நேர்வது தகுமோ ! அந்தோ, உலகியல் என்னே !" என்று கண்ணீர் சோரக் கரைந்துநின்றான். அப்பொழுது அருக்கன் அத்தகிரியையடைந்தான்.

இரவில் இலக்குவன் விதியை நொந்து வில்லைத் தரையில் ஊன்றிக்கொண்டு, இமைத்த கண்ணை மூடாமல் காத்துக்கொண்டிருந்தான். குகனும் வில்லில் அம்பினைத் தொடுத்தபடியே துளங்காது காத்திருந்தான். இவ்வாறு இரவு கழிந்ததும், இராமர் வைகறையில் எழுந்து முனிவருடன் கங்கைத் துறையைச் சார்ந்தார் ; அங்குக் காத்திருந்த குகனை நோக்கி, "அன்பனே, நாவாயை விரைவிற் கொணர்க" என்று வேண்டினர்.

அதனைக் கேட்ட குகன் கண்ணீர் வார்த்துக் கீழே வீழ்ந்து வணங்கி விண்ணப்பஞ் செய்வான் : "அண்ணலே, அடியேன்விண்ணப்பத்தைத் திருவுளங்கொள்ளவேண்டும். தேவரீர் இங்கேயே எழுந்-

தருளியிருக்கலாம். அடியேன் இவ்விடத்தில்தான் வசிக்கின்றேன். இங்கே வீரர் பல்லாயிரவர் உளர். அவர்கள் தேவரீருக்கு வேண்டும் பொருள் எங்கிருப்பினும் நொடியளவில் கொடுதர வல்லவர்கள். யாம் தங்கட்குப் பணிவிடை செய்வதில் தவறுதல் செய்யோம். இங்கே தங்கட்கு வேண்டுவனஎல்லாம் இயல்பாயே அமைந்துள்ளன. வதிவதற்குப் பர்ணசாலைபோன்ற புரை யுண்டு; படுப்பதற்குத் தாங்குமஞ்சம் போன்ற பரண்கள் இருக்கின்றன. உடுப்பதற்குத் துகில்போன்ற தோல்கள் அகப்படும்.

"தேன் உள; தினைஉண்டால்; தேவரும் நுகர்தற்காம்
ஊன் உள; துணைநாயேம் உயிருள; விளையாடக்
கான் உள; புனல்ஆடக் கங்கையும் உளதன்றே ?
நான் உள தனையும்நீ இனிதிரு நடஎம்பால்."

தாங்கள் யாதொரு குறைவுமின்றி இவ்விடத்திலேயே இன்புற்றிருக்கலாம். தேவரீர் எங்கள்குடிலில் ஒருநாள் எழுந்தருளியிருப்பின், அதுவே யாங்கள் உய்வதற்கு வழியாகும்" என்று வேண்டினன்.

குகன் கூறிய அன்புரைகளைக் கேட்ட இராமர் அருள் கூர்ந்து புன்னகை புரிந்து, அவனை நோக்கி, "அன்பனே, யான் கானகங்களில் மாமுனிவரைக் கண்டு வணங்கிப் புண்ணியதீர்த்தங்களில் நீராடி, இனிது வாழ எண்ணியுள்ளேன் ; ஈரேழாண்டு கானில் வதிந்து நகருக்கு மீண்டு செல்கையில் இங்கே தங்குவல்; நீ எங்களை இக்கரையில்-

நின்று அக்கரை சேர்ப்பாயானால் பெரிதும் நலமாகும்" என்று வேண்டினார். குகன் இராமரின் திருவுள்ளத்தை யறிந்து, அவ்வாறே ஓர் அம்பி கொணர்ந்தான். இராமர்



முனிவர்களை வணங்கி, தேவியுடனும் இளவலுடனும் நாவாயி லேறி யமர்ந்தார். குகன் அம்பியை விரைவிற் செலுத்தி அவர்களைக் கங்கையின் தென்கரையிற் சேர்த்-தான்.

கங்கையைக் கடந்த பின்னர், இராமர் குகனை நோக்கி, "அன்பனே, சித்திரகூடத்துக்குச் செல்லும்

வழியை எங்களுக்குத் தெரிவித்து, நீ நின் இருப்பிடஞ் செல்; யாம் அங்கே போய் வாழ்ந்திருப்பேம்" என்றார். அவ்வுரை கேட்ட குகன் இராமர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "அடியேன் தேவரீரை ஒருகணமும் பிரிந்துறைய மாட்டேன்; யான் இக்காட்டின் அருநெறிகளை நன்கு அறிவேன்; இருட்காலத்தும் வழியறிந்து செல்வேன்; வதிதற்கு உரிய வனங்களை ஆராய்ந்து கண்டறிந்து, அங்கே தேவரீரை அழைத்துச் செல்வேன்; தாங்கள் தங்குதற்குச் சிறந்த சாலை அமைத்துத் தருவேன்; உண்ணுதற்கு இனிய கனிகளைக் கொணர்ந்து உதவுவேன்; மலைகளிலுள்ள கந்தமூலங்களையும் கல்லி எடுத்துக் கொணர்வேன்: எவ்வளவு தூரஞ் சென்றேனும் நன்னீர் நாடித் தருவேன்; யான் எவர்க்கும் அஞ்சுவேனல்லேன்; ஆகலின், தாம் ஏவியவற்றைத் தவறாது முடிப்பேன்; வலிய பகைவர் வரினும் அவரோடு பொருது வெல்வேன்; இன்றேல் உமக்குமுன் மாய்வேன், இஃது உண்மை. தேவரீர் திருவுளஞ்செய்தால், அடியேன் என் படைகளையும் என்னுடன் கொணர்வேன். இதைத் திருவுளம்பற்றியருளல் வேண்டும்" என்று வேண்டினன்.

இராகவர் குகனை நோக்கி, "என் ஆருயிரனைய நண்பனே, நமக்குள் வேறுபாடில்லை. என் தம்பியாகிய இவன் நின் பின்னோன்: இவள் நின் கொழுந்தி. எங்கள் நாடெல்லாம் நின்னுடையனவே. அன்பனே, இதுகாறும் யாம் நால்வர் உடன்பிறந்தவராயிருந்தேம். இன்றுமுதல் நாம் ஐவர் ஆயினும்.

அதனால், என்கிளையோர் யாவரும் உன்கிளையோரே ; உன் சுற்றத்தார் அனைவரும் என் சுற்றத்தாரே ; இதில் ஐயமில்லை. அயோத்தியி லிருக்கும் உறவினர்களை உன் தம்பி பரதன் காக்கின்றான். நீ என்னோடு வந்துவிட்டால், இங்கே யிருக்குங் கிளைஞரைக் காப்பவர் யாவர் ? என் சுற்றத்தார் இடருற யான் எங்ஙனம் ஆற்றுவேன் ? ஆதலால், நீ இவர்களின் காப்பிற்காக இங்கேயே இருக்க-வேண்டும். நமக்குட் பிரிவு நேர்ந்தை எண்ணி நீ வருந்தாதை. துன்பம் உற்றவர்க்கல்லால் இன்பம் இல்லை. ஆதலால், நீ மனங் கவலாது ஆற்றியிரு. யான் சின்னாட்களில் இங்குற்று உன்னைக் காண்பேன்" என்று தேறுதல் கூறினார்.

இவ்வாறு இராமர் கூறிய இன்மொழிகளை மனங் கொண்ட குகன் மறுத்துரைக்க வொண்ணமல், துன்பக் கடலில் மூழ்கினவனாய் விடைகொண்டான். ஸ்ரீராமரும் சீதையும் இலக்குவனும் சித்திரகூடம் நாடிச் செல்வா-ராயினர்.

## அருஞ்சொற் பொருள்

குறுகினர்-சமீபித்தனர்.
பொழில்-சோலை.
கவின்-அழகு.
சாஷ்டாங்கநமஸ்காரம்-எட்டு உறுப்புக்களோடு கூடிய வணக்கம்; எட்டு அங்கமாவன-நெற்றி, மார்பு, தோள்கள், கைகள், கால்கள்.
இற்றைஇரவு = இன்று + இரவு.
வற்கலை-மரவுரி.

பொற்கலை-பீதாம்பாம், பொன் ஆடை.
கையுறை-காணிக்கை.
தீயூழ்-கெட்ட விதி.
துளங்காது-அசையாமல்.
கந்தமூலம்-கிழங்குகள், கட்டிகள்.
உளதனையும்-உள்ள அளவும்.
பர்ணசாலை - இலைவீடு ; ஓலை வீடு.
புரை-சிறு வீடு.
நுகர்தற்கு-சாப்பிட.
அம்பி-ஓடம்.
கைதவம்-வஞ்சகம்.
கொழுந்தி-தம்பியின் மனைவி.
நாவாய்-படகு.

## வினாக்கள்

1. குகன் என்பவன் யாவன் ? அவன் இராமருக்குச் செய்த உதவி யாது ?

2. குகன் இராமரைத் தன் ஊரில் இருக்கும்படி வேண்டியதற்கு இராமர் கூறிய பதில் யாது ?

4. 'இன்று முதல் நாம் ஐவராயினும்' சந்தர்பத்துடன் விளக்குக.

5. இராமர் குகனுக்குக் கடைசியாகச் சொல்லியவை எவை ?

## பயிற்சி 11

1. 'இதுகாறும் யாம் நால்வர் உடன்பிறந்தவராயிருந்தேம். இன்று முதல் நாம் ஐவர் ஆயினும்.

யாம், நாம் இவற்றின் வேறுபாடு என்ன ?

3. 'வதிவதற்குப் பர்ணசாலைபோன்ற புரை உண்டு. படுப்பதற்குத் தூங்குமஞ்சம் போன்ற பரண்கள் இருக்கின்றன. உடுப்பதற்குத் துகில்போன்ற தோல்கள் அகப்படும்.'

இவற்றை ஒரு வாக்கியம் ஆக்குக.

2. 'தாங்கள் தங்குதற்குச் சிறந்த சாலை அமைத்துத் தருவேன்.'

தாங்கள் என்னுஞ் சொல்லை நீக்கிவிட்டு வேறு சொல்லை அமைக்க.

# 11. கூட்டுறவுச் சங்கம்

நமது நாட்டில் முக்கியமான தொழில் உழவுத்-தொழில். உழவுத்தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்கிருர்கள். அவர்களுட் பெரும்-பாலோர் ஏழைகளாயிருக்கின்றனர். ஆதலின், அவர்கள் வியவசாயம் செய்வதற்குக் கையில் பொருளின்றிக் கடன் வாங்குகின்றனர். குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் கொடுப்பவர் இலர். கடன் கொடுப்பவர்களுட் பலர் அன்பு, இரக்கம், நியாயம் ஒன்றும் இல்லாத கல்நெஞ்சராய் இருக்கிருர்கள். அவர்களிடம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கி, ஏழைகள் வியவசாயம் செய்கின்றனர். வியவசாயத்தில் வருஞ் சிறிய வருமானத்தைக் கடனுக்-குக் கொடுத்துவிட்டு, பின்னுங் கஷ்டப்படுகின்றனர். இதனல், சிலர் உழவுத்தொழிலே விட்டுவிட்டுப் பிறநாடு-களில் பிழைக்கச் செல்கின்றனர்.

வியவசாயிகளின் பணக்கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக, அரசாங்கத்தார் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, உதவி செய்கின்றனர். ஒரு கிராமத்தில் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமானுல், பதின்-மராவது அதில் சேர்பவரா யிருத்தல் வேண்டும். அவ-ரனைவரும் ஒரே ஊரில் குடியிருப்பவரா யிருத்தல்

வேண்டும்; அருகில் உள்ள ஊரில் இருப்பவராயும் இருக்கலாம்.

வியவசாயிகளையேயன்றி, செல்வரையும் கற்றவரையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்வது நல்லது. சங்கத்தில் சேருவோர் ஒவ்வொருவரும் ஏற்பட்ட தொகையை முதலில் செலுத்தி, பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சங்கத்தில் சேர்ந்திருக்கும் அங்கத்தினர் எல்லாரும் கூடி, சங்கத்தை நடத்திவருவதற்காகச் சிலரை ஒரு சபையாக ஏற்படுத்துவார்கள். அந்தச் சபையார் தங்களுக்குள் ஒருவரைக் காரியதரிசி (செக்ரட்டெரி) யாக ஏற்படுத்திக்கொள்வார்கள். கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் முதலியவை சபையாரின் வேலை. அங்கத்தினர் கொடுத்த பங்குத்தொகையையும், அரசாங்கத்தார் கொடுக்குந் தொகையையுங் கொண்டு கடன் கொடுப்பார்கள். செல்வர்கள் தங்கள் பணத்தை இந்தச் சங்கத்தில் வட்டிக்குக் கொடுத்துவைப்பார்கள். அதற்கு வட்டி குறைவாயிருக்கும்.

பழைய கடனைத் தீர்ப்பதற்கும், உழவுத்தொழில் வியாபாரம் முதலியன செய்வதற்கும், சங்கத்திலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம். வாங்கும் பணத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பல தடவைகளில் கொடுக்கலாம்; வட்டியும் குறைவானதே. இவ்வாறிருக்கவும், சிலர் குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்துவதில்லை.

சங்கத்தின் ஓர் அங்கத்தினர் வாங்கின கடனைக் கொடுக்க இயலாவிடின் அதனைச் சங்கத்தின் அங்கத்தினர் எல்லாரும் சேர்ந்து கொடுக்க நேரும். ஆதலால், சங்கத்தார் கடன் கொடுக்கும்போது, கடன் வாங்குபவரின் செல்வநிலைமையை நன்கு கவனிக்க-வேண்டும். சில சங்கங்கள் அவ்வாறு கவனிக்காமல் கடன் கொடுத்துவிடுகின்றன. அதனால் பின்பு, அங்கத்-தினர் பலர் கஷ்டப்படுகின்றனர். அதுகருதி, சிலர் கூட்டுறவுச் சங்கங்களே வேண்டாம் என்கின்றனர்; சிலர் அதில் அங்கத்தினராகச் சேர்தற்கு அஞ்சுகின்றனர். ஆதலால், சங்கத்தின் முக்கிய அதிகாரிகள் கடன்வாங்கு-பவரைப்பற்றி, நன்றாக விசாரித்து அறியவேண்டும்; அவர்கள்நிலைமையை அடிக்கடி கவனித்து வரல் வேண்டும்.

நாம் நமக்கு வேண்டும் உணவுப்பொருள்களைக் கடைகளில் வாங்குகின்றோம். அவற்றால் வரும் லாபத்-தைக் கடைக்காரர் அடைகின்றனர். நாம் எவ்வளவு விலை கொடுத்தாலும், சில சாமான்கள் நல்லவையாயும் கலப்பில்லாதவையாயும் கிடைத்தல் இல்லை. வெண்-ணெய், நெய், எண்ணெய் இவை சுத்தமானவையாகக் கிடைப்பது அருமை. ஊரிலிருப்பவர் எல்லாரும் ஒரு சங்கமாகச் சேர்ந்து, ஒரு பங்குக்கு ஐந்து ரூபாய் வீதம் மூலதனம் சேர்த்து, வியாபாரம் நடத்தலாம். அப்-பொழுது நல்ல சாமான்கள் கிடைக்கும். அவற்றால் வரும் லாபமும் தங்களுக்குச் சேரும். இத்தகைய சங்கம்

சென்னப்பட்டணம் முதலிய நகரங்களில் நடைபெறுகின்றது.

வியவசாயத்திற்கு வேண்டுஞ் சாமான்களை வாங்குவதற்கும் கூட்டுறவுச்சங்கம் அமைத்துக்கொள்ளலாம். உழவுக்கருவிகள், எரு, வித்து முதலியவற்றைச் சங்கத்தின் மூலம் தருவிக்கலாம். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றைத் தனித்தனியே கொள்வதனினும் பலர் ஒருங்கு கூடித் தங்கட்கு அவசியமானவற்றைத் தருவித்தால் குறைந்த விலைக்குக் கிடைக்கும்; நல்ல சாமான்களாயும் இருக்கும். இத்தகைய சங்கங்கள் பிறநாடுகளில் சிறந்த செயல்களை ஆற்றிவருகின்றன.

வியவசாயிகள் தங்கள் சாமான்களை விற்பனை செய்வதற்கும் கூட்டுறவுச்சங்கங்களை அமைத்துக்கொள்ளுதல் நலம். அப்படிப்பட்ட முறை இல்லாததனால், விளைபொருள்களை வாங்கும் பெரிய வியாபாரிக்கும் வியவசாயிக்கும் இடையே ஊதியம் அடைவோர் பலர் இருக்கின்றனர். பெரிய வர்த்தகர்கள் உள்ளூர்ச் சிறுவியாபாரிகட்குப் பணங்கொடுக்கிறார்கள். வியவசாயிகள் வரிக்கும் செலவுக்கும் உள்ள பணமுடையினால் அவர்களிடம் தலைவிலைக்கும் குறைவாகப் பேசி முன்பணம் வாங்குகிறார்கள். பேசினபடியே குறைந்தவிலைக்குக் கொடுத்துவிட வேண்டியதா யிருத்தலின், ஏறிய விலைக்கு விற்க முடிகிறதில்லை. வியவசாயிகள்

விளைபொருள்களை விற்பனைச்சங்கத்தின் மூலம் விற்பார்களாயின், அதிக லாபத்தை அடையலாம். 'கொண்டு-கட்டி' கள் பெரிய வியாபாரிகள் முதலியோர் அடையும் லாபம் வியவசாயிகளே அடையவேண்டும்.

இனி, மக்களுக்குப் பயன் தரும் பசு, எருமை இவைகளை நன்கு வளர்த்து, பால் நெய் முதலியவற்றையும் சங்கங்களின்மூலம் விற்பனை செய்யலாம். இவ்வாறு இப்போது சிலவிடங்களில் 'பால்பண்ணை' வைத்து நடத்திவருகின்றனர். எந்தப்பொருளாயினும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விற்றலும் வாங்குதலும் லாபமேயாகும்.

நமது தென்னாட்டில் இத்தகைய சங்கங்களை ஏற்படுத்துவதற்காக முதன்முதல் உழைத்தவர் திரு, ஆதிநாராயண செட்டியார் என்னும் உத்தமர். அவருடைய பெருமுயற்சியின் பயனாகச் சில இடங்களில் 'விளை-பொருள் விற்பனைச் சங்கங்கள்' ஏற்பட்டு லாபகரமாக நடைபெறுகின்றன. இத்தகைய சங்கங்களைப் பல ஊர்களிலும் அமைக்கவேண்டும்.

தொழிலாளிகள் பலரும் இவ்வாறு சங்கம் ஏற்படுத்தி நடத்திவரலாம். மாணாக்கரும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, தங்கட்கு வேண்டும் புஸ்தகம் முதலியவற்றைச் சங்கத்தின் மூலமாக வாங்கலாம். அதனால் வரும் லாபத்தை ஏழை மாணாக்கருக்குக் கொடுத்து உதவலாம்.

இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவோர் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்; சுயநலங் கருதுதல் கூடாது. நாம் ஒருவரை ஒருவர் நம்புதல் வேண்டும். நம்பினவர்களுக்கு விசுவாசம் உண்டாகும்படி நடக்கவும் வேண்டும். அப்படியிருந்தால், நம் நாட்டில், ஜனங்கள் பலர் ஒருங்கு சேர்ந்து தொழில் நடத்த முன்வருவர். நடத்துந் தொழில்களும் விருத்தியாகும்.

இங்கிலாந்து முதலிய தேசங்களில், பலர் ஒருங்குகூடி, மூலதனம் வைத்துப் பெரிய தொழிற்சாலைகளையும் வியாபாரங்களையும் நடத்துகின்றனர். அவற்றால் அவர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கின்றது. நமது நாட்டிலுள்ள இருப்புப் பாதைகளுள் பெரும்பாலன பல சங்கத்தார்களால் நடைபெற்றன. மேல்நாட்டார் வியாபாரங்களில் நம்பிக்கையும் உண்மையும் உடையவராய் இருக்கின்றனர். அவர்கள் பொய் சொல்வது மிக்க இழிவான செயல் என்று கருதுகிறார்கள். நம் நாட்டவரும் அவர்களைப்போல உண்மையும் நம்பிக்கையும் உடையவர்களாகி, கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி நடத்துவார்களானால், மிக்க ஊதியத்தை அடையலாம்; நமது நாடும் செல்வம் மிக்கது ஆகும்.

### அருஞ்சொற் பொருள்

சுயநலம்-தம்நலம்.
முடை-முட்டுப்பாடு.
பதின்மர்-பத்து மனிதர்.
ஊதியம்-லாபம்.

### கேள்விகள்

1. வியவசாயக் கூட்டுறவுச் சங்கம் நடைபெறுவது எப்படி ?

2. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மை என்ன ?

3. சங்கத்தின் முக்கிய அதிகாரிகள் கவனிக்க வேண்டியது யாது ?

### பயிற்சி 10

பாடத்தில் சொல்லப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றி ஒவ்வொரு பத்தி (Para Graph) எழுது.

---

## 12. தீமைக்கு நன்மை

" தாயே, நீ அறியாதது ஒன்றும் இல்லை. ஆயினும், என் குறையை விண்ணப்பிக்கிறேன். ஒரு தவறும் செய்யாத என்னை அக் கொடியோன் தன் செல்வச் செருக்கினால் அவமானப்படுத்திவிட்டான். அவனைத் தண்டிப்பது உன் கடமையே. மகனுக்கு வந்த அவமானம் தாய்க்கு இல்லையா ?" என்று, கண்ணன் வரும் வழியில் காளிகோயிலில் முறையிட்டான்.

அக்கோயிலின் ஒரு பக்கத்தில் பெரியார் ஒருவர் சிலரோடு உரையாடிக்கொண்டிருந்தார். அவர், " நாம் அனைவரும் ஒருதாயின் மக்களே. நாம் ஒற்றுமையாய் ஒருவர்க்கொருவர் உதவி செய்து வாழ்வோமானால், நம் அன்னை

மகிழ்வாள். நாம் மதத்தாலும் சாதியாலும் வேறுபட்-டிருப்பினும், நாம் அனைவரும் சகோதரரே என்னும் எண்ணத்தை மறந்துவிடக்கூடாது. நம் சகோதரர்களுள் ஒருவர் அறியாமையினுல் நமக்குத் தீங்கு இழைத்தால், அத் தீங்கை மறந்து, ‘அவருக்கு நல்லறிவு உண்டாக வேண்டும்’ என்று நாம் அன்னையைப் பிரார்த்திக்க வேண்டும். ‘இன்னு செய்தார்க்கும் இனியவே செய்-யாக்கால், என்ன பயத்ததோ சால்பு’ ” என்று, இவ்வாறு அறிவுரை கூறிக்கொண்டிருந்தார்.

பெரியவர் கூறிய அறிவுரைகள் கண்ணன்காதில் விழுந்தன. அவன் அச் சொற்கள் அன்னை காளியின் அருள்மொழிகளே என்று எண்ணினுன். அவனுள்ளம் தூய்மை உற்றது.

* * * *

காளியூர் என்னும் ஊரில் கண்ணன், முருகன் என்-பவர் இருவரும் ஒரே பள்ளியில் படித்துவந்தனர். நாளடைவில் அவர்கள் சிறந்த நண்பராயினர். கண்ணன்-தகப்பனுர் வக்கீல்தொழில் பார்த்துவந்தார். அவர் நற்-குணம் வாய்ந்தவர். பாவம்! அவர்மனைவி நெடுநாள் நோய்வாய்ப்பட்டிருந்தாள். வக்கீல் மிக்க பொருட் செலவு செய்து கவனித்தும் நன்மை உண்டாகவில்லை. மனைவி இறந்த வருத்தத்தால், அவரும் சில நாட்களில் உயிர் துறந்தார். அதனுல், கண்ணன் தன் படிப்பை

நிறுத்தவேண்டியதாயிற்று. தகப்பனுர் தேடிய பொருளில் மிகச் சிறுபகுதியே எஞ்சியிருந்தது. அதைக்கொண்டு கண்ணன் சிலமாதங்கள் கௌரவமாகக் காலங் கழித்து வந்தான். பின்னர், வீட்டில் இருந்த சில பொருள்களை விற்றுச் செலவு செய்தான். "இனிக் கௌரவமாக எப்படிக் காலங்கழிப்பது !" என்னுங் கவலையே அவனை வருத்திற்று.

முருகன் தந்தையார் ஒரு 'டாக்டர்'. அவர் தம் மகனையும் அத்துறையிலே பயில்வித்துப் பட்டம் பெறச் செய்தார். அவன் சிலநாள் தந்தையோடு அத் தொழிலை நடத்திவந்தான். அவனுக்கு நல்ல பெயர் கிடைத்தது. ஆதலால், தந்தை இறந்தபின்பும் அவன் அத்தொழிலில் நல்ல ஊதியம் பெற்றுவந்தான். ஆனுல், அவன் மது-பானஞ் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டிருந்ததனுல், சில சமயங்களில் அறிவை இழந்துவிடுவான். அப்பொழுது அருமைமனைவியையும் செல்வக்குழந்தையையுங்கூடக் கவனிக்க மாட்டான். அந்நேரத்தில் யார் வந்தாலும் சீறி விழுவான் ; கையில் கிடைத்த பொருள்களை அவர்கள்-மேல் வீசி யெறிந்துவிடுவான்.

ஒரு சமயத்தில் கண்ணன் உணவுக்கு வழியின்றி மிக்க வாட்டமுற்ருன். அதனுல், தன்மதிப்பையும் கருதா-மல், தன்நண்பனிடம் உதவிபெறப் போனுன். கண்ணன்

போன நேரத்தில் முருகன் குடியினால் அறிவை இழந்திருந்தான். அதனால் அவன் கண்ணனை வரவேற்கவில்லை. கண்ணன் தானாகவே ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். அவனுக்கு முருகனுடைய நிலைமை தெரியுமா!

கண்ணன் தன் நிலைமையைத் தெரிவித்து, சிறிது பொருளுதவி வேண்டினான். உடனே முருகன் சத்தமிட்டுக்கொண்டு எழுந்தான்; "எப்போதும் இப்படித் தான் வந்து கெஞ்சுகிறாய். ஓடிப்போ. இங்கிருந்தால் உதைபடுவாய்" என்று பிதற்றிக்கொண்டே ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை அவன்மேல் வீசியெறிந்தான். அவன் செய்கை கண்ணனுக்கு வியப்பையும் அச்சத்தையும் விளைத்தன. உடனே அவன் விரைந்து திரும்பி விட்டான்.

* * * *

வீட்டில் வைத்திருந்த சில மருந்துகள் காரணமாக முருகன்வீடு தீப்பற்றிக்கொண்டது. சிறிதுநேரத்திற்குள் அது பரவிவிட்டது. முருகனும் அவன்மனைவியும் வெளியே நின்று கொண்டு, "ஐயோ, ஐயோ! குழந்தை! குழந்தை!!" என்று கதறினர். உள்ளே செல்ல முயன்ற சிலர் இயலாமல் திரும்பிவிட்டனர். அச் சமயத்தில் 'விலகுங்கள், விலகுங்கள்' என்று ஓர் ஒலி கேட்டது. ஓர் ஆடவன் வீட்டினுள் பாய்ந்தான். ஒரு கணப்பொழுதில் கையில் குழந்தையுடன் புகைப்படலத்தினிடையே குதித்து வெளிப்பட்டான். குழந்தை சிரித்துக்கொண்டி-

ருந்தது. அவன் சிறிது நேரத்தில் அறிவிழந்து கீழே விழுந்துவிட்டான்.

ஒருநாள் கண்ணன் படுக்கையில் கிடந்தவாறே, "நான் எங்கு இருக்கிறேன்! இது யார் வீடு?" என்று கேட்டான். அப்பொழுது முருகன், "அண்ணு, இது உன் வீடுதான். உன் வீட்டில்தான் நீ இருக்கின்றுய்" என்று, அன்போடு மறுமொழி கூறினுன். அப்பொழுது தனக்கு வேண்டுபவற்றை முருகன்மனைவி செய்து காத்துவருதலைக் கண்ணன் அறிந்தான்; "அம்மா, நீங்கள் ஏன் எனக்குத் தொண்டு செய்யவேண்டும். என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டான்; ஆயினும், முருகன்மனைவியின் அன்புரைகளால் அங்கேயே தங்கியிருந்தான்.

கண்ணன் உடல்நலம் உற்றபின் ஒருநாள், முருகன் அவனிடஞ் சென்று வணங்கினுன். "அண்ணு, நான் குடிவெறியினுல் கெட்டேன். தாங்கள் வந்த அன்று நான் அதிகம் குடித்திருந்தேன்போலும். நான் என்ன சொன்னேன் என்பது எனக்கு நினைவில்லை. என் குற்றத்தைத் தாங்கள் பொறுத்தருளவேண்டும். தாங்கள் எம் குடும்பத்தை நிலைநிறுத்திய உதவியை நாங்கள் என்றும் மறவோம். நான் இன்றுமுதல் மதுபானம் செய்வதில்லை. இது உண்மை" என்று கூறி, அங்கிருந்த குப்பிகளையெல்லாம் உடைத்தெறிந்தான். அவன்செயல்கள் கண்ணனுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைத்தன.

ஒருநாள், முருகன் தன் செல்வம் முழுவதையும் கண்ணன்பேருக்கு எழுதிய பத்திரத்தை அவனிடம் கொடுத்தான். கண்ணன் அதை வாசித்தறிந்ததும், அவன்மனம் கலங்கிற்று. "அன்பனே, நான் இன்றி-யமையாத ஒரு நற்செயலுக்காகச் சில காலம் வெளியே போய்வரவேண்டும். போய்வந்தபின் நான் உன் கருத்-தின்படி இங்கேயே தங்கியிருப்பேன்" என்று கண்ணன் இன்சொல் கூறி, மகிழ்வித்தான்; அப் பத்திரத்தை முருகன்மகன் பெயருக்கு மாற்றி எழுதி, அதைக் கீழே நழுவவிட்டு, எழுந்து விரைந்து சென்றான். அவன் மீண்டு வரவில்லை.

முருகன் பலவிடங்களிலும் கண்ணனைத் தேடு-வித்தான். அவனிருப்பிடம் புலனாகவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின் காசிநகரில் கண்ணன் துறவி-யாய் இருக்குஞ்செய்தியை முருகன் அறிந்தான். உடனே அவன் தன் குடும்பத்தோடு காசிக்குச் சென்று, கண்ணன் இருந்த இடத்தை விசாரித்-தறிந்து அங்கு அடைந்தான். அந்தோ! அதற்கு ஒருவாரத்திற்குமுன் அத் துறவி இறைவனடியை அடைந்தார் என்ற செய்தியை முருகன் அறிந்-தான்; அவரைக் காணப் பெறாத தீவினையை எண்ணிக் கவன்றான். அவர் அமர்ந்திருந்த இடத்தில் சிறு கோயிலை அமைத்து வழிபட்டான்.

## அருஞ்சொற் பொருள்

செருக்கு-கர்வம்.
செய்யாக்கால்-செய்யா விட்டால்.
சால்பு-நிறைந்த குணம்.
கௌரவம்-பெருமை.
படலம்-தொகுதி.
கவன்றான்-கவலைபட்டான்.

## வினாக்கள்

1. கண்ணன்உள்ளம் எதனால் தூய்மை அடைந்தது ?

2. 'எப்போதும் இப்படித்தான் வந்து கெஞ்சுகிறாய்?' இது யார் சொல்லியது? இவ்வாறு அவன் சொன்னதற்குக் காரணம் என்ன ?

3. கண்ணன் ஊரைவிட்டு வெளியேபோனது ஏன் ?

## பயிற்சி 11

1. மகனுக்கு வந்த அவமானம் தாய்க்கு இல்லையா ?

2. அவனுக்கு முருகனுடைய நிலைமை தெரியுமா !

இவற்றைச் செய்திவாக்கியம் ஆக்குக.

# 13. சுப்பிரமணிய பாரதியார்

பாரதியார்பெயர் நம் நாட்டில் சிறுவர்களுக்கும் தெரியும். பாரதியார் சிறந்த தேசியக் கவி. அவர் நாட்டுப்பற்றும் தமிழ்ப்பற்றும் மிக்கவர். தாய்நாட்டு மக்களின் அடிமைநிலையும், வறுமையும், பிணியும் அவர்-மனத்தை வாட்டி வருத்தின. அடிமைத்தளையை அறுத்தெறிதற்கு வேண்டிய வீரவுணர்ச்சிகளை ஊட்டும் பாட்டுக்கள் பலவற்றை அவர் பாடினார். அவை எளிய சொற்கள், எளியநடை, செவிக்கினிய சந்தம் இவற்றை யுடையனவா யிருத்தலின், அவற்றைச் சாதாரணமான அறிவுள்ளவர்களும் படித்து இன்புறுகின்றனர்.

நம் புலவர் சுப்பிரமணிய பாரதியார் 1882-ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் மூலநாளில், திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரம் என்னும் ஊரில் சின்னசாமி ஐயர், இலட்சுமியம்மாள் என்னும் பெற்றோருக்கு மக-வாய்த் தோன்றினார். சின்னசாமிஐயர் எட்டையபுர ஸம்ஸ்தானப் புலவர். அவர் அவ்வூரில் ஒரு பெரிய நெச-வாலையையும் வைத்து நடத்திவந்தார்; அறிவும், ஆற்ற-லும், அருளும் வாய்க்கப்பெற்றிருந்தார். 'மகனறிவு தந்தையறிவு' என்பதற் கேற்ப, பாரதியாருக்கு இளமையிலேயே அக் குணநலன்கள் பொருந்தி-யிருந்தன.



பாரதியார், தம் ஐந்தாம் வயசின் முடிவில் அன்னையை இழந்தார். அதனால் அவர் தந்தையே தாய்நிலையிலும் இருந்து அவரை அன்புடன் பேணி வளர்த்துவந்தார். பின்னர் அவர் மணம் புரிந்த வள்ளியம்மை என்னும் அம்மையும் பாரதியாரைத் தாம் பெற்ற பிள்ளையைப்போலவே பேணி வளர்த்தார்.

பாரதியார் உரிய காலத்தில் அவ்வூரில் உள்ள ஆங்கிலப்பள்ளியை அடைந்து கற்றார். அவருக்குத் தமிழில் அதிக ஆர்வம் பிறந்தது. அதனை அறிந்த அவர் தந்தையார் தாமே அவருக்குத் திருவள்ளுவர், கம்பர் முதலியோர் இயற்றிய நூல்களைக் கற்பித்தார். தம் மகன் ஆங்கிலம், கணிதம் முதலியவற்றில் மிக்க அறிவைப் பெற்று, அரசாங்கத்தில் பெரிய பதவியில் அமரவேண்டும் என்பது அவரது பேரவா. ஆயின், பாரதியாருக்கு அவற்றில் நாட்டஞ் செல்லவில்லை.

நம்கவிஞர் ஏழாம் பிராயத்திலேயே கேட்டோர் வியக்குமாறு கவிகளை யியற்றினர். அவர்க்குப் பள்ளிப்படிப்பில் பற்று உண்டாகவில்லை. அவர் யாரிடமும் அதிகம் கலந்து மகிழ்ந்து உறவாடுவதில்லை. ஆறு, குளம், சோலை, கோயில் முதலிய இடங்களுக்குச் சென்று, இயற்கைக்காட்சிகளைக் கண்டு இன்புற்று, அங்கே தங்கியிருப்பார்; புலவர்கள் தரும் ஈற்றடிகளைக்கொண்டு பாட்டுக்களை விரைவில் இயற்றி அனைவரையும் மகிழ்விப்பார்.

புலவர்கள் அவர்பெருமையை உணர்ந்து, பதின் மூன்றாம் பிராயத்தில் பாரதி என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினர்.

பாரதியார் இளமையிலேயே இனிமையாகப் பேசும் இயல்பினர்; நகைச்சுவை ததும்பும் அவர்பேச்சுக்கள் கேட்டாரைப் பிணிக்கும். மாணுக்கர் பலர் எப்போதும் அவரைச் சூழ்ந்துநின்று தமிழ்ச்சுவை பெற்று இன்புறுவர்.

பாரதியாருக்குப் பதினன்காம் ஆண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள கீழைக்கடையம் செல்லப்பா ஐயரின் மகள் செல்லம்மாளை மணம்புரிவித்தனர். பாரதியார் தம் பதினைந்தாம் வயசில் தந்தையை இழந்தார்; ஆயினும், கல்வியை நிறுத்தாமல் திருநெல்வேலி ஹிந்து-கல்லூரியைச் சார்ந்த கலாசாலையில் 'மெட்ரிகுலேஷன்' வரை படித்தார்.

சில காலத்தின் பின்னர், பாரதியாரின் அத்தையார் அவரைத் தாம் வாழ்ந்திருந்த காசிக்கு அழைத்துச் சென்றார்; அங்கு மத்திய இந்துகல்லூரியைச் சார்ந்த கலாசாலையில் சேர்ப்பித்தார். பாரதியார் ஹிந்தி, வடமொழி இரண்டையும் நன்கு கற்று நுழைவுத் தேர்வில் (Entrance) முதல்வகுப்பில் தேர்ந்தார்.

“சுயராஜ்யம் என் பிறப்புரிமை” என்று கிளர்ச்சி செய்த பால கங்காதர திலகரின் விடுதலை-

யியக்கம் நம் பாரதியாரின் மனத்தில் நன்கு பதிந்தது. அவர் செய்தித்தாள்களைப் படித்து நம் நாட்டின் நிலையை உணர்ந்து, நாட்டுத்தொண்டே நல்ல பணி என்று கண்டார்.

எட்டையபுர மன்னர் டில்லிதர்பாருக்குச் சென்று திரும்பும்போது, காசிக்குச் சென்று நம் கவிஞரைக் கண்டு, " உம் குடும்பப்பொறுப்புமுழுவதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். நீர் விரும்பும் வண்ணம் சுதந்திரமாக வாழலாம். என்னோடு இப்பொழுதே எட்டயபுரம் வரவேண்டும்" என்று வேண்டினர். அடிமைவாழ்வை வெறுத்த பாரதியார் அரசர்அன்பினுல் பிணிக்கப்பட்டு, 1902-இல் எட்டையபுரம் வந்தார்; அவைக்களப் புலவருள் தலைவராய் விளங்கி, தமிழாராய்ச்சி செய்தும், புதுப்பாடல் பல புனைந்தும், அரசரோடு அளவளாவியும் பொழுதுபோக்கினர். அருங்கலை விநோதராகிய அரசரும் நம் புலவரை அன்புடன் ஆதரித்துவந்தார்.

பாரதியாருக்கு, காலம் செல்லச்செல்ல, அரண்மனை-அலுவலில் வெறுப்பு மிக்கது. சில காரியங்களில் மன்னருக்கும் அவருக்கும் மன வேறுபாடு தோன்றிற்று. அதனுல் பாரதியார் 1904-இல் மன்னரிடம் விடை பெற்று, மதுரைக்குச் சென்றுர்; அங்குச் சேதுபதி கலாசாலையில் தமிழாசிரியராய் அமர்ந்தார்; மூன்று மாதத்திற்குப்பின் சென்னைக்குச் சென்று, ‘ சுதேசமித்திரன் ’

உதவியாசிரியர்பதவியை ஏற்றார். தேசபக்தர் ஜி. சுப்ரமணிய ஐயர் பாரதியாரை மிக்க அன்புடன் பாராட்டி ஆதரித்தார்.

அக்காலத்தில் 'தேசீய இயக்கம்' மிகப் பரவிற்று. நாட்டுப்பற்றை ஊட்டி வளர்க்குஞ் சிறந்த செய்யுட்களைப் பாரதியார் பாடினார். சென்னைப் பிரபல வக்கீல், வி. கிருஷ்ணசாமி ஐயர் அப் பாட்டுக்களை அச்சிட்டு நாடெங்கும் பரப்பினார்.

பின்னர், பாரதியார் 1907-இல் இந்தியா என்னும் வாரப்பத்திரிகையின் ஆசிரியராய் அமர்ந்து, தமிழுக்கும் நாட்டுக்கும் அருந்தொண்டு ஆற்றிவந்தார். கவி இயற்றுதல், கட்டுரையெழுதுதல் ஒவ்வொன்றிலும் அவருக்கிருந்த ஆற்றலைத் தமிழ்மக்கள் அறிந்து பாராட்டினர்.

1908-இல் தேசத்தலைவர் பலர் கைதுசெய்யப்பட்டனர். அப்பொழுது அன்பர்பலரின் வேண்டுகோளுக்கிணங்கி நம் புலவர் புதுச்சேரியை அடைந்தார்.

புலவர் புதுவை அடைந்தும், அல்லல் அவரை விடவில்லை. அரசியல்ஒற்றர்கள் தொல்லை கொடுத்துவந்தனர். ஊரோ புதிது ; வீடு இல்லை ; கையில் காசும் இல்லை ; உதவுவார் ஒருவரும் இல்லை. அவருக்கு உதவ

முன்வருஞ் சிலரையும் ஒற்றர்கள் அச்சுறுத்தி விலக்கினர். ஆயினும், புலவர் சிறிதும் மனந் தளரவில்லை.

இங்கிலையில் 1910-இல், யோகியார் அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்தார். பின்னர் வ. வெ. சுப்பிரமணிய அய்யரும் அங்குப் போய்ச் சேர்ந்தார். அவர்களுதவியால் பாரதியார் துன்பம் சிறிது சிறிதாகக் குறைந்தது. அவர் 'கர்மயோகி' என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்தினுர்; பல வடமொழி நூல்களை மொழிபெயர்த்தார்; புதிய தமிழ்ப்பாட்டுக்களை இயற்றினுர். 1914-முதல் அங்கிருந்தே மித்திரனுக்குப் பல கட்டுரைகளும் மொழிபெயர்ப்புநூல்களும் சிறுகதைகளும் எழுதி யனுப்பினுர். அப்பொழுது அப்பத்திரிகையை நடத்திய அரங்கசாமி ஐயங்கார், அவருக்கு மாதம் முப்பது ரூபாய் அனுப்பி யுதவினுர். வேற்றுநாட்டில் நெடுநாள் மறைந்து வாழ மனமில்லாத பாரதியார் 1918-இல் புதுச்சேரியிலிருந்து வந்து கடையத்துக்குச் சென்று, அங்கு இரண்டாண்டு வாழ்ந்துவந்தார்.

1920-இல் பாரதியார் மீண்டும் சென்னைக்குச் சென்று மித்திரனில் துணையாசிரியர்பதவி ஏற்று, தமிழ்த்தொண்டும் நாட்டுத்தொண்டும் ஆற்றிவந்தார். அவர் திருவல்லிக்கேணியில் தெளிசிங்கப்பெருமாள் கோயில்தெருவில் வசித்துவந்தார்; நாள்தோறும் பார்த்தசாரதிகோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டு வருவார்.

இவ்வாறு நாட்டுப்பற்றும் கடவுட்பற்றும் மிக்க பாரதியார் 1921 ஸெப்டெம்பர் 11-ஆந் தேதி இரவில் பூதவுடல் நீத்துப் புகழுடம் பெய்தினர்.

நாடு, மொழி, சமூகம் முதலிய பலதுறைகளிலும் தொண்டாற்றிய புலவர் பாரதியாரின் நினைவிற்காகத் தமிழ்நாட்டார் எட்டையபுரத்தில் ஒரு மண்டபம் கட்டியுள்ளனர்.

## அருஞ்சொற் பொருள்

தளை - கட்டு ; விலங்கு.
வேட்கை - விருப்பம்.
பண்பு - குணம்.
நாள் - நட்சத்திரம்.
நாட்டம் - கருத்து.
பிணிக்கும் - கட்டுப்படுத்தும் ; வசப்படுத்தும்.
செய்தித்தாள் - பத்திரிகை.
அவைக்களம் - சபை.
புனைந்து - இயற்றி.
அல்லல் - துன்பம்.
ஒற்றர் - வேவுகாரர்.
கட்டுரை - வியாசம்.

## வினாக்கள்

1. நம் புலவர் எப்பொழுது 'பாரதி' என்னும் பட்டத்தைப் பெற்றார் ?
2. புலவர் புதுவையில் பட்ட துன்பங்கள் யாவை ?
3. பாரதியாரை யார் யார் ஆதரித்து உதவினர் ?

## பயிற்சி 12

கீழ்க் காணுஞ் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

தளை, மகவு, பேணி, உரிமை, செய்தித்தாள், அளவளாவு, வழிபடு, தொண்டு.

## 14. நட்பாளுந் திறன்

கண்டகிநதிதீரத்தில் இரணியகன் என்னும் ஓர் எலிஅரசன் தங்கியிருந்தது. அது தன் நண்பர்களுக்கு உரிய காலத்தில் வேண்டும் உதவி செய்யும் நல்லியல்பு வாய்ந்தது; ஒருகால் அது, சித்திரக்கிரீவன் என்னும் நண்பன்முதலியோருக்கு நேர்ந்த தளையை அறுத்து விடுவித்த செயலைக் கண்ட காகம், அவ்வெலியினது நட்பின் திறனை யறிந்து அதனோடு நட்புக்கொள்ள விரும்பி, அதனை அணுகி, "உத்தமனே, நான் உன் நட்பினை விரும்புகின்றேன். என்னை நண்பனுகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று வேண்டிற்று. அப்பொழுது எலி அக் காகத்தை நோக்கி, "நமக்குள் நட்பு உண்டாதலில்லை. நீ எனக்குப் பகைவன். நான் உனக்கு இரை. ஆதலின் நான் உன்னோடு நட்புக் கொண்டால் அது எனக்குப் பெருந் தீங்கை விளைக்கும்" என்று கூறி, நட்புக்கொள்ள மறுத்தது.

அதைக் கேட்ட காகம், "உன்னைத் தின்றால் என் வயிற்றுக்குப் போதுமா? நீ வாழ்ந்திருந்தால் சித்திரக்கிரீவனைப்போல நான் நலனடைவேன்" என்று கூற, எலி, 'நான் உன்னோடு நட்புக்கோட லில்லை. பகைவன் அனுகூலனாயிருப்பினும் அவனோடு நட்புச்செய்யலாகாது; தண்ணீர் வெந்நீராயினும் நெருப்பை அவிக்கு-

மன்றோ ? ஆதலின், பகைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளலாகாது" என்று மீண்டும் பல நியாயங்களைக் கூறி மறுத்தது.

பின்னும் காகம் எலியை நோக்கி, "என்னை நண்பனுகக் கொள்ளாவிடின், நான் ஈண்டே பட்டினிகிடந்து உயிர்விடுவேன். நல்லோர்களுக்கு, கண்ட அளவிலே நட்பு உண்டாகிறது. பின்னர், அந் நட்பு ஒருநாளும் மாருது. விலங்குகட்கும் பறவைகட்கும் ஏதேனும் ஒரு காரணத்தால் நட்பு உண்டாகின்றது. ஆகலின், என்னை நண்பனுகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று அன்போடு வேண்டிக்கொண்டது.

காகத்தின் அன்புரையை அறிந்த எலி, "நாம் இருவரும் ஒத்த மனம் உடையவராய் இருப்போமாக" என்று கூறி நட்புக்கொண்டு, அதற்குச் சிறிது உணவு நல்கி, தன் வளைக்குள் போயிற்று.

அதுமுதல் அவை யிரண்டும் மிக்க உறவுகொண்டு ஒன்றுக்கொன்று உணவு கொடுத்து உரையாடிக்கொண்டிருந்தன. ஒருநாள் காகம் எலியை நோக்கி, நண்ப, இங்கு இரை கிடைத்தல் அரிதாய் இருத்தலின், தண்டகவனத்தில் உள்ள கர்ப்பூரகௌரம் என்னுங் குளத்தில் இருக்கின்ற என்நண்பன் ஆமையினிடம் செல்லுகின்றேன். அங்குச் சென்ருல், அவன் எனக்குப் பலவகைப்பட்ட மீன்களைத் தந்து உண்பிப்பான்" என்று உரைத்தது. அவ்வுரையைக் கேட்ட எலி, "என்னை-

யும் அவ்விடத்திற்கு உடன் கொண்டுசெல்ல வேண்டும்" என்று வேண்டிக்கொண்டது. அதன் விருப்பத்தின்படியே காகம் அதனைக் கொண்டு, தன் நண்பன் ஆமையிடம் சேர்ந்தது. அவைகளைக் கண்ட ஆமை உளம் மகிழ்ந்து அவற்றை உபசரித்து உணவு நல்கிற்று.

பின்னர், காகம் ஆமையை நோக்கி, "மந்தர, இவ் வெலி மிக்க உபகாரி. இதனுடைய நட்பின் திறனை யறிந்து நான் இதனோடு நட்புக்கொண்டேன்" என்று எலியின் குணநலனைப் புகழ்ந்துகூறிற்று. அதனைக் கேட்ட மந்தரன் எலியை நோக்கி, " அன்பனே, நீ உறைவிடத்தைத் துறந்தோமென்று கவலைப்படவேண்டா. நல்லோர்கள் எங்குச் சென்றாலும் பெருமையடைகின்றார்கள். நீ இவ்விடத்தில் சுகமாய் இருக்கலாம்" என்று அன்புரை கூறிற்று.

அப்பொழுது காகம் ஆமையை நோக்கி, "நீ நற்குணக் கடல். பிறர்க்கு வருந் துன்பங்களை நல்லோர்களே தீர்ப்பர் என்பதனால் நாங்கள் உன்னை நாடி வந்தோம்" என்றது. இவ்வாறு அம்மூன்றும் உரையாடிக்கொண் டிருக்கையில் அங்குச் சித்திராங்கன் என்னும் மான் வந்து, " நான் வேடர்களுக்கு அஞ்சி உங்களிடம் வந்தேன்" என்று நடுக்கத்தோடு கூறிற்று. அதைக் கேட்ட மந்தரன், அதற்கு முகமன் கூறி, " இது உன்வீடு. நான் உன் சேவகன். நீ இங்கே நலமுற்று இருக்கலாம்" என்று முகம் மலர்ந்து

இன்சொல் கூற, மானும் அவற்றோடு நட்புக் கொண்டு அங்கே வசித்திருந்தது.

ஒருநாள், வேறிடத்தில் மேயப்போன மான் மாலையில் வாராததனால் அதைக்குறித்து ஆமை முதலியன வருத்தம் அடைந்தன. மறுநாள் காலையில் காகம் பறந்து சென்று நாற்புறமும் பார்த்து, இறுதியில், மான் வலைப்பட்டிருந்த விடம் அடைந்து அதனருகு சென்று "எவ்வாறு இதில் அகப்பட்டுக் கொண்டாய் ?" என்று வினவிற்று. மான், "இவ்வாறு வினவுதலிற் பயன் யாது ? நீ போய் விரைவில் இரணியகனை அழைத்துவா. வேடன் வருவதற்குள் என்னை விடுவிக்க வேண்டும்" என்றது. உடனே காகம் மீண்டு போய், அச்செய்தியை இரணியகன் முதலியவற்றிற்கு அறிவித்து, இரணியகனைக் கொண்டு சென்றது.

இரணியகன் மானை நோக்கி, "சமர்த்தனாகிய நீ எவ்வாறு வலையில் அகப்பட்டாய்?" என, மான், "வல்லமையிருந்தாலும் வருவது வந்தே தீரும். வேடன் வருமுன் தளையை அறுத்து விடுவி" என்றது.

அவ்வளவில் மந்தரனும் அங்கு வந்து சேர்ந்தது. அது எலியை நோக்கி, "நண்ப, தாமதம் செய்யலாகாது; விரைவில் வலையை அறு" என்று வேண்டிற்று. அப்போது காகம் வேடன் வருதலைக் கண்டு தெரிவிக்க, எலி விரைவில் வலையை அறுத்து, மானை விடுவித்தது. அச்

சமயத்தில் வேடன் அருகில் வரவே, அவையெல்லாம் அஞ்சி விரைந்தோடின.

அவையெல்லாம் ஓடிப்போதலைக் கண்ட வேடன் முனிவுற்று நாற்புறமும் நோக்கி, மந்தரன் தன் இயல்பின்படி நகர்ந்து செல்லுதலைக் கண்டான்; உடனே அதைத் தன் வில்லிற் சேர்த்துக் கட்டிக்கொண்டு சிறிது மகிழ்வோடு சென்றான்.

அச் செயலைக் கண்ட மான் முதலியன, "என்ன இது! ஒரு துன்பந் தீர்வதற்குள் மற்றொரு துன்பம் வந்ததே! என்செய்வோம்" என்று, வேடன்பின்னே செல்லலாயின. அப்பொழுது இரணியகன், "உண்மைநண்பன்பால் வைத்துள்ள அன்பு ஒருவனுக்குத் தாய்தந்தையர், உடன்பிறந்தவர், மக்கள் முதலியோரிடத்தும் இருக்காது. வேடன் தொலைவிற் செல்லுதற்குமுன் மந்தரனை விடுவித்தற்கு உபாயம் நாடவேண்டும்" என, மற்றவைகள் "நீயே உபாயஞ்சொல்" என்று வேண்டின. உடனே எலி, "அங்கே உள்ள ஏரியின் கரையில் சித்திராங்கன் இறந்தவனைப்போல் கிடக்கவேண்டும். காகம் அதன்மேலிருந்து பொய்யாகக் குத்தவேண்டும். அவ்வாறு செய்யின், வேடன் மந்தரனைக் கீழே வைத்துவிட்டு, மானண்டை செல்வான். உடனே நான் ஆமையின் கட்டினை அறுப்பேன். அது தண்ணீர்க்குட் போய்விடும்" என்று கூறிற்று. அதுவே சரியான உபாயம் என்று மற்றவைஎல்லாம் அதற்கு உடன்பட்டு அவ்வாறு செய்யலாயின.



வேடன், மான் இறந்துகிடக்கின்றது என்று கருதி ஆமையைக் கீழே வைத்துவிட்டு மானண்டை சென்முன். அவ்வளவில் எலி தளையை அறுக்கவே, ஆமை நீர்க்குட் சென்று மறைந்துகொண்டது. மான், தன் அருகில் வேடன் வருவதற்குள் எழுந்து விரைந்து ஓடிவிட்டது.

கையிலிருந்த ஆமையும் இழந்த வேடன், " அதிக ஆசை அதிக நஷ்டம் " என்பதை நினைத்து, தன்னை நொந்துகொண்டு வீட்டிற்குச் சென்முன். மான் முதலியவை தங்கள் இருப்பிடஞ் சேர்ந்து மகிழ்வோடு வாழ்ந்திருந்தன.

## அருஞ்சொற் பொருள்

| | |
|---|---|
| ஈண்டு - இங்கு. | முகமன் - உபசாரம். |
| விலங்கு - மிருகம். | தளை - கட்டு. |
| உறைவிடம் - இருந்த இடம். | கோடல் - கொள்ளுதல். |

## வினாக்கள்

1. ' ஒரு துன்பம் தீர்வதற்குள் மற்றொரு துன்பம் வந்ததே '—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

2. மந்தரனை விடுவிக்க இரணியகன் கூறிய உபாயம் யாது ?

## பயிற்சி

பஞ்சதந்திரக்கதைகளுள் ஒன்றனைப் படித்து ஒரு கட்டுரை எழுதுக.

# 15. ஜேம்ஸ் குக்

உரிமை பெற்ற நம் இந்திய நாடு இனிக் கருங்கடலில் கப்பல் செலுத்துந் திறமையிலும், வானத்தில் விமானம் ஓட்டும் வீரத்திலும், தரைப்படையில் பல புதுவகைப்



படைக்கலங்களைக் கையாளும் வண்மையிலும் சிறந்து விளங்கவேண்டும்; அன்றியும் கப்பல்வாணிகத்திலும் தலைசிறந்து விளங்கவேண்டும். கடலில் கப்பலோட்டிச்

செல்லத் துணிவும் வீரமும் வேண்டும். அவற்றைப் பெற, ஜேம்ஸ் குக் என்னும் மாலுமியின் வாழ்க்கை-வரலாறு நமக்கு உதவி புரியும்.

ஜேம்ஸ் குக் இங்கிலாந்தில் உள்ள 'யார்க்ஷைய'ரில் 1728 - ஆம் ஆண்டில் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தார். அவர் தந்தையார் எளிய உழவர்; வறுமையினால் வருந்திய ஜேம்ஸ் இளமையிலேயே வேலை செய்து பிழைக்க வேண்டியதாயிற்று; அதனால், அவர் ஒரு மளிகைக் கடையில் வேலைக்கு அமர்ந்தார். ஆனால், அவர்மனம் கப்பலில் வேலைசெய்ய விரும்பிற்று. அதனால், அவர் துறைமுகத்தில் கப்பலைக் காணும்போதெல்லாம்,கப்பலில் வேலைசெய்யும் பேறு நான் பெறவில்லையே!" என்றும், மாலுமிகள்பலப்பல நாடுகளைப்பற்றிப் புதுப்புதுச்செய்தி-களைக் கூறுங் காலத்தில், "நானும் அவ்வாறு கடற் பயணஞ்செய்து பல புதிய நாடுகளைக் காணவேண்டும்" என்றும் எண்ணுவார். ஒருவன் எண்ணும் எண்ணம் திண்ணமாயிருந்து, அவன் முயற்சியும் செய்வானாயின், அது கைகூடாமல் போகுமா ?

ஒருநாள் ஜேம்ஸ் குக் கடைவேலையிலிருந்து விலகி, ஒரு வணிகக்குழுவினருக்கு உரிய கப்பலில் ஆளாய் அமர்ந்-தார்; பின்னர், பிழையறப் படிக்கவும் எழுதவும் கற்றார்; வானசாஸ்திரம், தேசப்படம் வரைதல் முதலியவற்-றிலும் தேர்ந்தார்; ஆகலின், கப்பல்அலுவலில் படிப் படியாய் உயர்ந்தார்.

1754-ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் பெரும்போர் தொடங்கிற்று. அப்பொழுது கப்பற்படைக்கு ஆட்களைச் சேர்த்தனர் ; நல்லறிவும், நாட்டுப்பற்றும், முயற்சியும், ஆற்றலும் மிக்க நம் ஜேம்ஸ் அப்படையில் சேர்ந்தார் ; விரைவில் மாலுமிகளுக்குத் தலைவரானார். கப்பற்றலைவர் அவர்திறமையைக் கண்டு வியந்தார்.

'கானடா' தேசத்தில் 'ஸெயின்ட் லாரென்ஸ்' நதிக் கரையில் உள்ள க்யுபெக் நகரம் பிரஞ்சுக்காரருக்கு உரிய-தாயிருந்தது. ஆங்கிலேயர் அதைக் கைப்பற்ற எண்ணினர். அதற்கு, அவ்வாற்றின் ஆழத்தை அறியவேண்டும். 'ஜேம்ஸ்' பகைவர்களின் குண்டுகளுக்கிடையே அஞ்சாது சென்று, அவ்வேலையைத் திறம்பட ஆற்றினார். அதன் பின் ஆங்கிலேயர் பகைவரை எதிர்த்து அந் நகரைப் பிடித்தனர் ; நம் வீர இளைஞரைப் பாராட்டினர்.

அறிஞர் சிலர் தென்துருவத்தின் அருகில் நிலப்பகுதி உளதா என்று கண்டறிய விரும்பினர் ; விஞ்ஞானிகளுட் சிலர் நூற்றாண்டிற்கு ஒருமுறை நிகழுஞ் சுக்கிரன்-பெயர்ச்சியை அறிய விழைந்தனர் ; அவ்வுண்மைகளை அறியத்தக்கவர் ஜேம்ஸ் குக்கே என்று அறிந்து, அவற்றை ஆராய அவரை வேண்டினர். அதனால், அவர் எண்டவர் என்னும் மரக்கலத்தில் பதினெட்டு மாதங்களுக்கு வேண்டிய உணவுப்பொருளைச் சேகரித்துக்கொண்டு, பாங்க்ஸ் என்னும் விஞ்ஞானி, டாக்டர் ஸோலாண்டர் என்னுந் தாவரநூலறிஞர் முதலியோருடன் 1768 ஆகஸ்டு 26-ல் புறப்பட்டு, இரண்டு மாதத்துக்குப்பின்

133234. ... 600 008.

தென் அமெரிக்காவின் கிழக்குக்கரை அடைந்தார்; பின்பு அக் கண்டத்தின் தென்கோடியில் உள்ள டியோரா டேல் பியூகோ என்னும் தீவில் தங்கினர்.

பின்னர், அக் குழுவினர் பசிபிக் பெருங்கடலில் உள்ள டாடிஹித் தீவை அடைந்தனர். ஜேம்ஸ் முதலியோர் அங்குத் தம் ஆராய்ச்சியை நடத்தினர். சுக்கிரன்பெயர்ச்சி 1769 ஜூன் 3-ல் நிகழ்ந்தது.

குக் முதலியோர் அத் தீவை விட்டு புறப்பட்டு, அக்டோபரில் நியூஸீலாண்டை அடைந்தனர். அது முன்னமே டச்சுக்காரர்களால் கண்டு பிடிக்கப்பட்டதாயினும், அது வடக்குத்தீவு தெற்குத்தீவு ஆகிய இரு தீவுகளைக் கொண்டது என்பதை ஜேம்ஸ் குழுவினரே முதன்முதல் அறிந்தனர்; அவற்றின் இடையிலிருந்த ஜலசந்திக்குக் குக் ஜலசந்தி என்று பெயரிட்டனர்.

வடக்குத்தீவில் வாழ்ந்தவர் அநாகரிக மாக்கள். அவர்கள் தம்மோடு பொருது இறந்தோரின் உடலை உண்டார். ஜேம்ஸ் முதலியோர் அத்தீவில் ஆறுமாதம் தங்கி, பின் - 1770 மார்ச்சு 31-ஆந் தேதி அங்கிருந்து புறப்பட்டு, ஏப்ரல் 28-இல் ஆஸ்திரேலியாவை அடைந்தனர். அதன் கிழக்குக்கரையின் வடபகுதியில் அவர்கள்கப்பல் பவளப்பாறையில் தாக்கிச் சிறிது சேதமுற்றது. மாலுமிகள் தம் அறிவாற்றல்களால் கலம் கவிழாமல் காத்தனர். பின்னர் ஜேம்ஸ் குக் அந்நாட்டை, அப்பொழுது இங்கிலாந்தை ஆண்ட அரசர்பெயரால் உரிமைப்-

படுத்தினர். அதற்கு இருபதாண்டுகளுக்குப் பின்னரே ஆங்கிலேயர் அக் கண்டத்தில் குடியேறினர். குக் குழுவினர் தாம் புறப்பட்ட முப்பத்துமூன்று மாதங்களுக்குப்பின் தம் நாட்டை யடைந்தனர்.

அக்காலத்தில் மேல்நாட்டு மக்கள் 'அண்டார்டிக்' கடலில் பெருநிலப்பகுதி ஒன்று இருப்பதாகவும், ஆங்குப் பொன்னும் மணியும் மிகுந்து கிடப்பதாகவும் கருதினர். அவற்றை ஆராயவேண்டி, குக் 1772-இல் 'ரிஸொல்யூஷன்' என்னுங் கலத்தில் பலருடன் புறப்பட்டு, அப் பெருங்கடலில் உள்ள உறைபனிப் பிரதேசத்தில் மூன்று ஆண்டுகள் திரிந்தார்; பொறுக்க முடியாத குளிரினல் வருந்தினர்; பின் மீண்டுவந்து, தம் நாட்டு மக்கள் கொண்ட கருத்துத் தவறு என்பதை அறிவித்தார். இவ் விரண்டாம் பிரயாணத்தில் அவர் கண்டுபிடித்தவை நியூ கலெடோனியா, நார்போக் தீவு முதலியன.

1776-இல் குக் முதலியோர் மூன்றும் முறை பிரயாணமாகி, நன்னம்பிக்கைமுனைவழியாய் இந்துமஹாசமுத்திரத்தை அடைந்து, டாஸ்மானியாவுக்குச் சென்று, நியூஸிலாண்டின் வழியாக டாஹிடித் தீவை அடைந்தனர்; பின்பு வடஅமெரிக்காவின் மேற்குக் கரையின் வடகோடிக்குப் போயினர்; இக் கடற் பயணத்தில் ஸாண்ட்விச் தீவு முதலிய பல தீவுகளைக் கண்டுபிடித்தனர்.

பின்பு, அக் குழுவினர் ஹவாய்த் தீவினை அடைந்தனர். அத் தீவில் வாழ்ந்திருந்தவர், திரும்பி

வருவதாகக் கூறியிருந்த தம் தெய்வமே திரும்பி வந்தது என்று எண்ணி, அவர்களுக்கு அபிஷேகஞ் செய்து பெருமைப்படுத்தினர்! அங்கிருந்து புறப்பட்ட குக் முதலியோர் புயலால் துன்புற்று, மீண்டும் அத்தீவினை அடைந்தனர். அதனை அறிந்து, அம் மக்கள் அவர் கடவுளல்லர் என்று அறிந்து மிக வெகுண்டு அவர்கள்பொருளைக் கொள்ளையடித்துத் துன்புறுத்தினர்.

அங்கு நிகழ்ந்த போரில் தோற்ற ஆங்கிலேயர் அஞ்சித் தம் கப்பலுக்கு ஓடினர். ஆனால், அந்தோ! பகைவன் எறிந்த ஈட்டியொன்று குக்கின் உடலில் பாய்ந்தது. மாவீரர் மண்மீது வீழ்ந்து மாண்டார். குக் அடைந்த வீரமரணம் அவருக்குப் பெரும்புகழை அளித்தது. அவர் தமக்கென வாழாதவர் என்பதை உலகம் ஒருபொழுதும் மறவாது.

## அருஞ்சொற் பொருள்

படைக்கலம்-ஆயுதங்கள்.
குழு-கூட்டம்.
கலம், மரக்கலம்-கப்பல்.
பேறு-நன்மை.
விழைந்தனர்-விரும்பினர்.
மணி-இரத்தினம்.

## வினாக்கள்

1. ஜேம்ஸ் குக்கின்வீரம் முதன்முதல் விளங்கியது எப்பொழுது?
2. குக் மூன்று முறை செய்த கடற்பிரயாணத்தில் கண்டறிந்தவை யாவை?
3. அவரது வீரமரணத்தைப்பற்றி எழுதுக.

# 16. சொற்பொழிவு ஆற்றும் முறை

பலகாலம் வருந்திக் கற்றவர், தாம் கற்றறிந்த பொருள்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுந்திறமை உடையவரா யிருத்தல் வேண்டும். அத்திறமை இல்லாதவர் மணமில்லாத மலருக்கு ஒப்பாவர். அவர் கற்ற கல்வி சிறப்படைதல் இல்லை. ஆதலின், கற்பவர், அவையில் நயம்பட பேசத் தக்க திறமையை அடையப் பயில வேண்டும்.

அறிஞர் பலர் கூடியிருக்குஞ் சபையில் ஒரு பொருளைக்குறித்து விரித்துப்பேசுதல் எளிதன்று. அதனுனே, "வார்த்தை பதினு யிரத்தொருவர்" என்று பெரியோர் கூறினர். 'சாதலை அஞ்சாது போருக்குச் செல்வோர் பலர் உளர்; அவையை அஞ்சாது பேச வருவோர் மிகச் சிலரே உளர்' என்னுங் கருத்தினைத் திருவள்ளுவரும் கூறியுள்ளார்.

அவையில் பேச விரும்புபவர், நன்ருகச் சொற்பொழிவாற்றுவோருடைய சொற்பொழிவு பலவற்றைக் கேட்கவேண்டும்; அவர்கள் பேசும் முறையை உளங்கொள்ளவேண்டும். சொற்பொழிவாற்ற விரும்புவோர் சிறந்தநூல்கள் பலவற்றைப் படிக்க வேண்டும். நல்ல கருத்துக்களையுடைய செய்யுட்களையும் அறிஞர்கள் உரைத்திருக்குஞ் சிறந்த வாக்கியங்களையும் மனப்பாடஞ்செய்தல் நல்லது.

சொற்பொழிவாளர் முதலில் தாம் பேசப்போகும் அவையை நடத்துவோருடைய கொள்-

கையை அறிதல் வேண்டும். தங் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கையுடையோர்சபையில் பேசுதல் பயன்படாது; சில சமயத்தில் அவமானத்தையும் விளைக்கும். மாறான கொள்கையினரையும் தம்வயப்படுத்துதல் மிகச்சிறந்த சொற்பொழிவாளருக்கே கூடும். பிரசங்கிகள் தாம் நன்கு அறிந்துள்ள பொருளையே பேசுதற்கு மேற்கொள்ளல் வேண்டும். அவையில் கேட்க வந்திருப்பவர்களின் தன்மையை அறிந்துகொள்ளுதல் நன்று. சொற்பொழிவாளர் தாம் பேசும்பொருளை மனத்தில் வகைப்படுத்திக் கொண்டு அம் முறைப்படி பேசுதல் சிறக்கும். தாம் பேசும் பொருளுக்குத் தொடர்பில்லாத பொருளைப்பற்றிப் பேசுதல் தவறு. பேசும் பொருள் பரந்ததாயின் முக்கியமானவற்றைமட்டும் தேர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டும். குறித்த நேரத்தில் தமது சொற்பொழிவினை முடித்துவிடல் வேண்டும்.

சொற்பொழிவு ஆற்றும்போது சந்தர்ப்பத்துக்கேற்ப, குரலை எடுத்தும் படுத்தும் பேசவேண்டும்: முழுவதும் ஒரே நடையில் பேசுதல் சிறக்காது. சொற்கள் கருத்தினை விளக்கத் தக்கனவா யிருத்தல் வேண்டும். கைகளையும் தலையையும் அதிகமாக அசைத்து அபிநயஞ்செய்தல் கூடாது. வேண்டுமிடங்களில் செய்யுளை மேற்கோளாகக் கூறுதல் தக்கது. அதன் பொருளை வேண்டுமளவு விளக்குதல் நன்று. சொற்பொழிவாளர் தமது புலமை வெளி-

யாக வேண்டுமென்று கருதி, தமக்குத் தெரிந்த செய்யுட்களையெல்லாம் கூறுதல் தகாது.

சிலர் அவையடக்கங் கூறுதலிலும், முன்னுரை கூறுதலிலும் நெடுநேரத்தைப் போக்கிவிடுகின்றனர். ஆதலின், குறித்த காலங் கடந்தும் விஷயத்தை முடிக்காமல், இடையே நிறுத்த நேர்கின்றது. இது வெறுக்கத்தக்கது.

பேசும்போது சபையோரை நோக்கிப் பேசுதல் வேண்டும். தமது சொற்பொழிவை அவையோர் கவனித்துக் கேட்கின்றனரா என்று நோக்கவேண்டும். அவையோர் உற்றுக் கேட்காத சமயத்தில் நகைச்சுவையினாலும் சிறிய கதையினாலும் அவர்கள் கவனத்தைத் திருப்பவேண்டும்.

கேட்டாரைப் பிணிக்குமாறு பேசவல்ல சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்பதற்குப் பலரும் விழைந்து வருவர்; அவர்கருத்துக்களை ஏற்றுக் கொள்வர்.

இக்காலத்தில் நம் நாட்டில் மக்கள்ஆட்சி ஏற்பட்டுளது. தங் கொள்கையைப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து அவர்களைத் தம்வயப்படுத்துந் திறனுடைய சொற்பொழிவாளரே அரசாங்கத்தில் பெரிய பதவியை அடைதல் கூடும். ஆகலின், மாணாக்கர் இளமையிலேயே சொற்பொழிவாற்றப் பழகுதல் நன்று.

# 17. ஜான்ஸி ராணி லக்ஷ்மீபாய்

நம் பாரதநாடு வீரர் நிறைந்த பழம்பெருநாடு. இங்குத் தமிழர், மகாராஷ்டிரர், இராஜபுத்திரர், சீக்கியர் முதலியோர் ஒப்பற்ற வீரராய் வாழ்ந்து வீரச்-செயல் பல ஆற்றியுள்ளனர். ஆண்களேயன்றிப் பெண்களும் அறிவும் ஆற்றலும் அஞ்சாமையும் வீர-மும் படைத்து விளங்கினர். நம் தமிழ்நாட்டில் வாழ்ந்த வீரமகளிர் பலர். ஜான்ஸி ராணி லக்ஷ்மீபா-யும் அத்தகைய வீரமகளிருள் ஒருவரே.

லக்ஷ்மீபாய் காசிநகரில் மகாராஷ்டிர வம்சத்தில் மௌரீபந்தனுக்கும் பாகீரதிபாய்க்கும் மகளாய் 1832-இல் தோன்றினள். மநுபாய் என்பது அவளுடைய பிள்ளைப்பெயர். வறுமையால் வாடிய அவர்கள் பிரமவர்த்தம் என்னும் நகரத்தில் தங்கியிருந்த மகாராஷ்டிர மந்திரி பாஜிராவ் பீஷ்வாவின் உதவியைப் பெற்று, அவரிடம் வாழ்ந்துவந்தனர். பீஷ்வாவின சுவீகாரமகனும் இளவரசனுமான நாஞசாகிப்பும் மநுபாயும் உடன்பிறந்தோரைப் போலப் பிரியாதிருந்து, அரசினுக்கு உரிய கல்வி யனைத்தும் கற்றனர்; படைக்கலப் பயிற்சி பயின்றனர். மாலை வேளைகளில் யானைமீதும் குதிரைமீதும் இவர்ந்து சுற்றிவருவர்; சிவாஜிமுதலிய வீரர்-களின் வரலாற்றைக் கேட்டு, தாமும் அவர்களைப்-போல விளங்கவேண்டும் என்று விரும்புவர். இவர்க-

ளோடு தாந்தியா தோபி என்னும் இளைஞனும் விளையாடிவருவான்.

மநுபாய் கல்வி, படைக்கலப்பயிற்சி, இசை, ஓவியம் இவற்றில் தேர்ந்து விளங்கினாள்; அவள் உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும் விளையாடும்பொழுதும் வீரஎண்ணங்களே அவளுள்ளத்தில் உதித்தன. மநுபாயை ஜான்ஸி நாட்டின் காவலன் கங்காதரராவ் மணம்புரிந்தான்.

ஜான்ஸி நாட்டுக் குடிகள் அவளைத் தம் அன்னையாகக் கருதி வாழ்த்தினர். காதலர் இருவரும் தம்நாட்டைக் காத்துவந்தனர். ஆயின், சிறிது காலத்தில் (1852-இல்) கங்காதரன் மண்ணுலகினின்று மறைந்தான். அரசி உடனே உயிர் துறக்க எண்ணினாள். ஆயினும், அரசன் இறக்கும்போது தன்னைநோக்கி "லக்ஷ்மீ, மைந்தனில்லாக் குறையோடு மறைகின்றேன். நீயும் என்னுடன் இறக்கலாகாது. தாமோதரன் என்னும் பாலனை மைந்தனுகக்கொண்டு அவன் அரசாளும்பருவம் அடையும் வரை நீ அரசியலை நடத்தவேண்டும்" என்ற சொல்லை மேற்கொண்டு அவள் அவ்வாறே செய்துவந்தாள்.

இந்தியாவுக்கு வாணிகஞ் செய்ய வந்த ஆங்கிலேயர் சிறிது சிறிதாக நாட்டையும் சேர்த்துவந்தனர். அப்பொழுது ஆங்கிலேயரின் கவர்னர்-



ஜெனரலாய் இருந்த டல்ஹௌஸி ஜான்ஸிமன்னன் மகனின்றி இறந்ததனால் அந்நாடு ஆங்கிலேயருக்கு உரியது என்று கூறி, அதைக் கைப்பற்றத் தன் படையை ஏவினான். அதை யறிந்து வெகுண்ட வீரமங்கை குடிகளின் கோரிக்கைக் கிணங்கிக் கோபந் தணிந்து, காலங் கருதி இருந்தாள். குடிகளின் கருத்தை அறிந்து படைகள் அரசுரிமையை அபகரிக்கவில்லை. இராணியே அரசாண்டுவந்தாள்.

அரசி நாள்தோறும் ஒவ்வொன்றையும் குறித்த காலந் தவறாது செய்வாள்; மாலையில் 'தர்பார்' நடத்தும்போது ஆணுடை தரிப்பது உண்டு; உடலில் நீலநிற அங்கியும், தலையில் குல்லாவும், அதன்மீது பாகையும், அரையில் பட்டுக்கச்சையும், மணியிழைத்த உடைவாளும் கொண்டு ஒளிர்வாள். அவள் அரசியற் கருமங்களைத் தன் நுண்ணறிவினால் எளிதின் அறிவாள்; நடுவுநிலைமை தவறாது நீதி வழங்குவாள்; வெள்ளிக் கிழமைதோறும் மகாலட்சுமியின் கோயிலுக்குச் சென்று தரிசித்து வழிபடுவாள்; ஏழைகட்கு இரங்குவாள்; ஒருமுறை தன் நகரிலுள்ள ஏழைகள் ஒவ்வொருவருக்கும் ஓர் அங்கியும் போர்வையும் வழங்கினாள்.

அரசி, போரில் புண்பட்ட வீரர் படுத்திருக்கும் மருத்துவச்சாலையை அடைந்து, இன்சொல் கூறி ஆறுதல் கூறுவாள்; பரிசும் பட்டாடையும் வழங்குவாள். அரசியின் அருங்குணங்கள் மக்கள்மனத்தைக் கவர்ந்தன.

1858-இல் நாட்டில் எங்கும் சுதந்திர வுணர்ச்சி பெருகிற்று. ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற விழைந்த மக்கள் ஆங்காங்குக் கிளர்ச்சி செய்தனர். கலகத்துக்குப் பிறப்பிடம் ஜான்ஸிநாடே என்று எண்ணிய ஆங்கிலேயர் அதன்மேல் படையெடுத்தனர். பெரும்போர் மூண்டது. அரசி குதிரைமீது இவர்ந்து சென்று படைவீரர்க்கு ஊக்கமூட்டினாள். ஒன்பது நாள் ஓயாமல் போர் புரிந்தும் பகைவர்களால் கோட்டைக்குள் புக முடியவில்லை.

அரசி தனக்கு நேரவிருக்கும் ஆபத்தை யுணர்ந்து, தன் இளமைக்காலத்து நண்பர் இருவருக்கும் ஓலை விடுத்தாள். தாந்தியா தோபி ஒரு படையுடன் வந்தான். ஆங்கிலப்படை இருபடைகளுக்கு மிடையே அகப்பட்டுத் தத்தளித்தது.

ஆயின், கடைநாளில் தோபியின் படைகள் புறங் காட்டி ஓடலாயின. அதுகண்ட அரசி தன்கையே தனக்கு உதவி என்று உணர்ந்து, மனந்தளராமல் போர் புரிந்தாள். பகைவர் பலர் மடிந்தனர். இரத்தவெள்ளம் பெருக்கெடுத் தோடிற்று.

அதற்கிடையே ஆங்கிலப்படைகள் கீழைக்கோட்டைவாயிலை அடைந்து, நூலேணி கொண்டு மேலே ஏற முயன்றனர். லக்ஷ்மீபாய் காளிபோல் களத்தில் தோன்றி வேலை வீசியும், ஈட்டியை எறிந்தும், வாளை ஓச்சியும் அவரைக் கொன்று குவித்தாள். ஆங்கில வீரர் அஞ்சிப் பின்வாங்கினர்.

அப்பொழுது தெற்குவாயிலில் நின்ற ஜான்ஸிவீரர் துரோகஞ் செய்தமையால், பகைவர் நகருக்குள் புகுந்தனர் ; இறுதியில் கோட்டையையும் கைப்பற்றி-னர்.

அரசி பன்னீராயிரம் வீரருள் பலரை இழந்தாள் ; பழம்பதியையும் உயிர்த்துணைவரையும் இழந்தாள் ; தன்னந்தனியே நின்ருள். அவள்மனத்தில் பகைவரைப் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணமே எழுந்தது. இராணி நகரைத் துறந்துபோய்த் துணைவலியை நாடக் கருதி, ஆணுடை தரித்து அரையில் வாளைச் செருகி, இருப்புக்கவசம் பூண்ட பரியின்மீது இவர்ந்தாள். பாலன் தாமோதரன் முதுகில் பட்டாடைக்குள் துயின்ருன். வீரமங்கை வடக்குவாயிலின் வழியே குதிரைவீரர் பன்னிருவருடன் வெளியேறினுள் ; குதிரை காற்றினும் கடுகிச் சென்றது.

அரசி நகரினின்று தப்பி அகன்ருள் என்பதனை அறிந்த ஆங்கிலப்படைத்தலைவன் அவளைப் பின்-தொடர்ந்து அருகில் செல்லவே அவள் அவனை வெட்டி வீழ்த்தினுள். இவ்வாறு இடையில் ஓயாமல் ஒன்னு-ருடன் போர்புரிந்துகொண்டே 150 மைல் தூரம் கடந்து கல்பி நகரத்தை அடைந்தாள். அங்கு அக் குதிரை கீழே விழுந் திறந்தது.

கல்பிநகரையும் தாக்கிய ஆங்கிலேயருடன் ராணி கடும்போர் தொடங்கினுள். அவள்பெருவீரத்தைக்

கண்டு பகைவர்படைத்தலைவரும் வியந்தனர். இருபத்தொரு வயசுடைய இளம்பெண்ணின் போர்வீரத்தைக் கண்டு வியந்த கல்பிவீரர் பெரும்போர் புரிந்தனர். அப்பொழுது பகைவருக்குத் துணைப்படைகள் வந்து குவிந்தன. அதனால் அரசி குவாலியர்நகரை யடைந்தாள்.

குவாலியர்கோட்டையை ஆங்கிலேயர் சூழ்ந்து-கொண்டனர். வீரமங்கையாகிய அரசி பகைவீரரோடு பொருதுகொண்டே கடந்துசெல்ல முயன்றாள். அவர்-களும் பின்தொடர்ந்தனர். அரசி இவர்ந்த பரிமா வழியில் குறுக்கிட்ட கால்வாயைத் தாண்டாமல் சுற்றிச்சுற்றி நின்றது. அப்பொழுதும் அரசி மனந் திகைக்காமல் வாட்போர் ஆற்றினாள். போரில் தலையிலும் புயத்திலும் புண்பட்டதனால் அரசி குதிரையின்மீது சாய்ந்தாள். விழுப்புண் பட்ட வீரமங்கை வீரசொர்க்க மடைந்தாள்.

ராணி லக்ஷ்மீபாயைப் பகைவரும் வியந்தனர்; நாட்டினர் புகழ்ந்தனர். அவளுடைய அஞ்சாமையும் வீரமும் நம் நாட்டுக்கு மிக்க புகழை விளைத்தன.

வீரமங்கையின் புகழ் என்றும் நிலவுக.

# I. கடவுள் வாழ்த்து

கண்ணார் அமுதே கரும்பே என் கண்ணே என்
அண்ணா உன் பொன்னருள்தான் ஆர்ந்திடுமோ அல்ல
நண்ணாதோ யாது நணுகுமோ என்றுருகி [தென்றும்
எண்ணாதும் எண்ணுமிந்த ஏழைமுகம் பாராயோ !

—திருவருட்பா

## 1. தேவாரம்

பொன்னார் மேனியனே புலித் தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 1

கண்ணா யேழுலகுங் கருத் தாய அருத்தமுமாய்ப்
பண்ணா ரின்தமிழாய்ப் பர மாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 2

## 2. பெரிய திருமொழி

குலந்தான் எத்தனையும் பிறந் தேயிறந் தெய்த்தொழிந்தேன்
நலந்தான் ஒன்றுமிலேன் நல்ல தோரறஞ் செய்துமிலேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறி யார்திரு வேங்கடவா [ளே.
அலந்தேன் வந்தடைந்தேன் அடி யேனையாட் கொண்டரு

தெரியேன் பாலகனாய்ச் சில தீமைகள் செய்துமிட்டேன்
பெரியே னாயினபின் பிறர்க் கேயுழைத் தேழையானேன்
கரிசேர் பூம்பொழில் சூழ் கன மாமலை வேங்கடவா
அரியே வந்தடைந்தேன் அடி யேனையாட் கொண்டருளே.

## 3. திருப்புகழ்

பாதி மதிநதி போது மணிசடை
  நாத ரருளிய குமரேசா
 பாகு கனிமொழி மாது குறமகள்
  பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
  மாய னரிதிரு மருகோனே
 கால னெனையணு காம லுனதிரு
  காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
  காளும் வகையுறு சிறைமீளா
 ஆடு மயிலினி லேறி யமரர்கள்
  சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலைமருவுசு
  வாமி மலைதனி லுறைவோனே
 சூர னுடலற வாரி சுவறிட
  வேலை விடவல பெருமாளே.

## 4. இரக்ஷணிய யாத்திரிகம்

ஆதி மெய்த்திரு வாக்கொளி யாய்வருங்
காதன் மைந்தனைத் தந்து கருணையால்
பூத லத்துக் கிரட்சை புதுக்கிய
தாதை பாதந் தலைக்கணி யாக்குவாம். 1

# II. நீதிப்பகுதி

## 1. ஆசாரக் கோவை

வைகறை யாமம் துயிலெழுந்து தாஞ்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

உடுத்தல்லால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை. 2

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர். 3

கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்
சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்
இறந்தொன்றும் தின்னற்க நின்று. 4

உண்ணுங்கால் நோக்குந் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாதும் நோக்கான் உரையான் தொழுதுகொண்
டுண்க உகாஅமை நன்கு. 5

கைப்பன எல்லாம் கடை தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண். 6

காலின்நீர் நீங்காமை உண்டிடுக பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
பேரறி வாளர் துணிபு. 7

கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி. 8

## 2. நன்னெறி

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவின்—பலியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறைய புள்ளரசைப் பார்த்து. 1

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பர் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 2

தொலையாப் பெருஞ் செல்வத் தோற்றத்தோம் என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலைபால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 3

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 4

தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். 5

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 6

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
ததிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 7

நல்லோர் வரவான் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர. 8

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 9

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 10

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. 11

கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செயவார் பேசு. 12

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவர்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது. 13

எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்
விள்ளா அறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுளம் அன்றிக்
கரைகாப் புளதோ கடல். 14

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்

நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 15

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண். 16

## 3. திரிகடுகம்

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணுந்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 1

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல்இம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 2

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 3

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றில் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார். 4

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லைஇம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. 5

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை. 6

## 4. நான்மணிக் கடிகை

நிலத்துக் கணிஎன்ப நெல்லும் கரும்பும்
குளத்துக் கணிஎன்ப தாமரை பெண்மை
நலத்துக் கணிஎன்ப நாணம் தனக்கணி
தான்செல் லுலகத் தறம். 1

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. 2

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளின்
எண்ணக் கடவுளும் இல். 3

நல்லார்க்கும் தம்மூர்என் றூர்இல்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூர்என் றூர்இல்லை அல்லாக்
கடைகட்கும் தம்மூர்என் றூர்இல்லை தம்கைத்
துடையார்க்கும் எவ்வூரும் ஊர். 4

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞர்இல் போழ்தில் சினம்குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 5

திரியழற் காணின் தொழுப விறகின்
எரியழற் காணின் இகழ்ப—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. 6

## ௫. திருக்குறள்

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 1

அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல. 2

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 3

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற. 4

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 5

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 6

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 7

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 8

அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 9

இலனென்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 10

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின். 11

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதிய மில்லை உயிர்க்கு. 12

உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 13

எல்லா விளக்கும் விளக்கல்ல ; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 14

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய
பிறத்தல் அதனான் வரும். 15

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 16

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 17

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 18

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 19

கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 20

நெடும்புன லுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 21

உள்ள முடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 22

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும். 23

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 24

எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 25

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 26

மருவுக மாசற்றார் கேண்மை ; ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 27

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 28

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 29

இரவார் இரப்பார்க்கொன் றீவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 30

---

# III. வரலாற்றுப் பகுதி

## காந்தி அம்மானை

தென்னாப் பிரிக்காவில் வாழ்வு மிகக்கொடிது
இந்தியர் என்றால் கூலியா யிருக்கவேண்டும்
ஊணகத்தில் வேலைஆளாய் உழைத்து வரவேண்டும்
இல்லையேல் நாட்டைவிட்டு வெளியேதான் ஏகவேண்டும்
தலைக்கட்டு வரியாக மூன்றுபவுன் கொடுக்கவேண்டும்
தனிப்பட்ட இடத்தில் ஒதுங்கியே வாழவேண்டும்
சொந்தநிலம் வாங்கிச் சுகித்திருக்க லாகாது
நாட்டுநடப்பினிலே வாக்குரிமை கிடையாது
பொதுப்பாதை களிலே போகவுங் கூடாது
ஒன்பது மணிக்குமேல் உத்தரவு பெற்றவரே
இரவில் வெளிவரலாம் இன்ன கொடுமைபல
ஒருநாள் மோஹனதாஸ் உலாவி வரும்போது
ஒன்பது மணிக்கு மேலான காரணத்தால்
காவலன் காந்தியைக் காலினா லேஉதைத்துத்
தெருவினில் தள்ளிவிட்டான் சேர்ந்திதனைப் பார்த்துநின்ற
பெருமகன் ஒருவர் பிராதுசெய்யச் சொன்னார்காண்

அப்போது காந்தி அதற்கேற்ற பதிலாக
என்குறைக் காக யானும் பிராதுசெய்யேன்
எல்லாக் கறுப்பரும் உறுவதே யான்பெற்றேன்
என்றுபதில் உரைத்து அவ்வழிப் போக்கைவிட்டார்.

* * *

பால சுந்தரந்தான் பழந்தமிழ்ப் பெருநாட்டான்
கையில் தலைப்பாகை கந்தை அரைக்கசைத்து
முன்பல் உடைந்து குருதி மிகச்சொரிந்து
தனது அழிநிலையைக் காந்திக்குத் தெரிவித்தான்
அவன்பட்ட துன்ப நிலையை அவர்உணர்ந்து
வெள்ளை முதலாளி வம்புச் செயல்தெரிந்து
வைத்தியர் சான்று கையினில் வாங்கிவைத்து
நீதி மன்றத்தினில் காந்தி வழக்கிட்டார்
கூலிஒப் பந்தக் கொடுமை அதைநீக்கி
வேறே ஒருவரிடம் வேலைக் கவனைவைத்தார்.

—

# IV. கதைப் பகுதி

## 1. மைனாவும் முயலும் மோசம்போன கதை

### காகம் சொல்வது

பாவிகள் மோனர் போலும்
    பலவிர தியர்கள் போலும்
ஓவறு சகாயர் போலும்
    உறமுறைச் சுற்றம் போலும்
மேவுவர் அவரைச் சேரின்
    மேன்மைய ரேனும் உய்யார்
பூவையும் முயலும் முன்னேர்
    பூனையைச் சேர்ந்த வாறே. 1

என்ன அக் கதையே தென்றே
இனப்பற வைகள் வினவ
முன்னமோர் மரத்தின் மேலே
முயங்கிநான் இருக்கும் போது
தன்னிக ரின்றி வாழுந்
தனிமுயல் ஒன்று வந்தே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தங்
குட்புகுந் திருந்த தனறே. 2

பூவையொன் றங்கு வந்திப்
பொந்துநான் இருக்கும் வீடு
நீவரு வானேன் என்ன
நிழலொடு தருக்கள் சாலை
வாவிநற் கூபம் செல்லும்
வழியினில் தண்ணீர்ப் பந்தல்
சாவடி இவைக ளெல்லாம்
சகலர்க்கும் பொதுவே என்ன, 3

அங்கவை இரண்டும் சண்டை
ஆகிப்பின் மத்தி யஸ்தர்
தங்களைக் கேட்போம் என்று
தனிமுயல் அழைத்துப் போக
இங்குநாம் வழக்கா வந்தோம்
இருதலை வழக்குந் தீர்க்குந்
துங்கர்ஆர் என்று பூவை
சொல்லவே முயலும் சொல்லும். 4

கருதிய யமுனை யாற்றங்
கரையினில் தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும்
பூனையார் சொல்வார் என்ன
வெருவியே பூனை பக்கல்
மேவிநாம் செல்வ தெவ்வா
றுரைஎனத் தூர நின்றே
உரைப்பம்என் றழைத்துப் போக, 5

இருவரும் போனார் அந்த
    இருடியார் தவத்தைக் கண்டார்
பெரியவர் இவர்தாம் நம்மைப்
    பிடிப்பதும் செய்யார் என்று
கருதினர் பணிந்தெ ழுந்தார்
    கைகளுங் கட்டி நின்று
பாவினார் யோகம் நீங்கிப்
    பார்த்தனர் பூனை யாரும். 6

ஆரெவர் நீங்கள் நம்மை
    அறிந்தனிர் இங்கு வந்த
காரியம் சொல்லும் என்று
    கபடனார் உரைக்கத் தங்கள்
பேரொடு வழக்குஞ் சொல்லப்
    பெருகிய மூப்பி னாலே
நீருரைப் பதுகே ளாது
    நெருங்கிவந் துரைக்க என்ன, 7

சற்றிடங் கிட்டி வந்து
    சாற்ற, இம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி
    உறுதது போலுங் கேட்டோம்
மற்றினிப் பட்ச பாத
    வழக்குநாம் உரைப்ப தில்லை
குற்றமிங் கொருவர் மீதிற்
    கூறிடிற் கோப மாமே. 8

தருமமே விரும்பு வாரைத்
    தருமமே விரும்பிக் காக்கும்
தருமமே இகழு வாரைத்
    தருமமே இகழ்ந்து நிற்கும்
தருமமே மெய்யாய் நின்று
    சகலமும் செய்த லாலே
தருமமே சொல்வ தல்லாற்
    சற்றுநாம் பொய்சொல் லோமே. 9

எண்ணிய விரத மெல்லாம்
இயற்றினம் இவைக்கு மேலாம்
புண்ணிய விரத மென்னும்
பொய்சொலா விரதம் ஒன்றும்
நண்ணிய வுயிரைக் கொல்லா
நலந்தரு விரதம் ஒன்றும்
மண்ணினில் அனுஷ்டிப் போம்நாம்
வழக்கிலோ ரஞ்சொ லோமே. 10

கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்கும்நம் காது நம்மை
விட்டுநீர் தூர நின்று
விளம்பினால் கேளா தென்று
துட்டனார் மாரீ சத்தால்
துலங்குகூர்ம் பல்லன் என்னும்
இட்டமார்ச் சாலன் சொல்ல
இவைதம துளத்தில் எண்ணி, 11

மெய்கள்போற் சொன்ன எல்லாம்
விசுவசித் திரண்டும் செல்லக்
கைகளாற் பிடித்துக் கண்டம்
கடித்திரத் தங்கு டித்த
செய்கப டான பூனை
செருக்கியங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே
முயலும்அங் கிறந்த அன்றே. 12

# 4. இயற்கை வருணனை

## 1. கிளி

பச்சிலையும் கனியும்—நிறைந்து
படர்ந்து வளர்ஆலின்
உச்சியிற் சென்றிருந்தால்—எப்படியான்
உன்னையும் கண்டிடுவேன்? 1

வட்டமா யுன்கழுத்தில்—ஒருநாளும்
வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியோ—எனக்கும்
இயம்புவையோ கிளியே. 2

மாணிக்க மூக்கழகும்—மரகத
வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான்—இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ. 3

கத்திரி போலவெட்டிக்—கனியினைக்
கௌவி யெடுத்தோடச்
சித்திர வாயளித்த—கடவுள்
திருவருள் சற்றோ அம்மா! 4

ஒற்றை யொருகாலில்—நின்றுகனி
உண்ணும் அரியவித்தை
கற்றதும் யாவரிடம்—அவரைநீ
காட்டுவை யோ கிளியே. 5

## 2. ஆறு

கல்லும் மலையுங் குதித்துவந்தேன்—பெருங்
காடுஞ் செடியுங் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்
திட்டுத் திடர்களுஞ் சுற்றிவந்தேன்—மடைச்
சிப்புக்கள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதன்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசைதீர விளை யாடி வந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரங் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனை யுஞ்சுற்றிப் பார்த்துவந்தேன்
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன். 5

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராக வுஞ்சென்று பாய்ந்துவந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 7

முனியதட்டும் முள்தூக்கும் முன்னீர் அளக்கும்
கனியுதிர்க்கும் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

வாரணங்கள் எட்டும் மகமேரு வுங்கடலுந்
தாரணியும் எல்லாம் சலித்தனவால்—நாரணனைப்
பண்பா யிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது.

## 7. பாரதியார் பாட்டு

மன்னும் இமய மலைஎங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.

## 8. முக்கூடற் பள்ளு

ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே
நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே
சேற்றில் நண்டு சேற்றைக்குடைந் தேற்றடைக்குதே—நிதம்
தேடிஒரு கோடி வானம் பாடி யாடுதே
போற்றுதிரு மாலழக ரேற்ற மாம்பண்ணைச்—சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே.

## 9. அழகர் குறவஞ்சி

அங்குலிய மிட்டகரங் காட்டுவாயம்மே—கணை
யாழிமோ திரமிட்டகை காட்டுவாயம்மே.
செங்காந்தள் மலர்க்கரங் காட்டுவாயம்மே—வர்ணச்
சித்திரச்சூ டகக்கரங் காட்டுவாயம்மே.
தங்க நெளியிட்ட கரங் காட்டுவாயம்மே—ரத்னச்
சரிகடக மிட்டகரங் காட்டுவாயம்மே.
சங்க ரேகை கண்டேனடி மோகினியம்மே—கையில்
தான்ய ரேகை கண்டேனடி மோகினியம்மே.

### குறி சொல்லுதல்

முக்கியமா யிக்குறியைக் கேளடி யம்மே—ராஜ
மோகினி உனக்குநல்ல நாளடி யம்மே—இன்று
தொக்கிலுனக் கதிட்டமுண் டாகு தென்னம்மே—உனைச்
சூழ்ந்தவர் கலிகளெல்லாம் போகு தென்னம்மே.

# குறிப்புரை

## கடவுள் வாழ்த்து

### திருவருட்பா

இது இராமலிங்க சுவாமிகள் இயற்றியது.

ஆர்தல் - நிறைதல். நணுகுதல் - கிட்டுதல்.

### தேவாரம்

இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது.

1. மிளிர் - விளங்குகின்ற, அசைகின்ற.
2. பரம் - மேலானது. பொழில் - சோலை.

### பெரிய திருமொழி

இது திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது.

1. எய்த்து - இளைத்து. அலந்தேன் - வருந்தினேன்.
2. கரி - யானை. கனம் - திண்மை. அரி - சிங்கம்.

### திருப்புகழ்

இது அருணகிரிநாதர் அருளியது.

பாதிமதி - பிறைச்சந்திரன். நதி - கங்கை. குறமகள் - வள்ளி. காதும் - தாக்கிய. சுரருலகு - சொர்க்கலோகம். சூதம் - மாமரம். வாரி-கடல். சுவறிட - வற்ற. வல-வல்ல.

### இரக்ஷணிய யாத்திரிகம்

இது கிருஷ்ணபிள்ளை இயற்றியது.

காதல் மைந்தன், கிறிஸ்துநாதர். தாதை, கடவுள். இரக்ஷை புதுக்கியது, கிறிஸ்துநாதரால் மோக்ஷம் அடைய வேண்டும் என்று ஏற்படுத்தியது.

## ஆசாரக்கோவை

1. வைகறை யாமம் - (இரவின்) கடைசியாமம். வாய்வதில் - பொருந்தும் முறைமையில். முந்தையோர் - முன்னோர்.

2. விழுத்தக்கார் - சிறந்த தகுதியுடைய பெரியோர். அவை - சபை.

3. நெறிப்பட்டார் - நல்ல வழியில் நடப்போர். எஞ்ஞான்றும் - எப்போதும். திளையார் - (நீரைக்) குடைய மாட்டார். காய்ந்தது - (உடம்பு) காய்ச்சல் கண்டிருந்தது. தலை ஒழிந்து ஆடார் - தலை நீங்க (உடம்பு மட்டும்) குளிக்க மாட்டார். ஆய்ந்த - ஆராய்ந்த.

4. கிடந்து - படுத்து. வெள்ளிடையும் - வெளியான இடத்திலும். இறந்து - (அளவு) கடந்து.

5. கண் அமர்ந்து - கண் மூடி. துளங்காமை - அசையாமல். இரீஇ - இருந்து. யாண்டும் - எவ்விடத்தும். உகாஅமை - சிந்தாமல். உகாமை நன்கு உண்க என்க.

6. உணவு உண்ணும்போது தித்திப்புப் பொருள்களை முதலிலும், கசப்பனவற்றைக் கடைசியிலும், மற்றையவற்றை நடுவிலும் முறையாக உண்ணவேண்டும் என்பதாம். கைப்பன - கசக்கும் உணவுப்பொருள். துய்க்க - உண்க.

7. 'காலின்......உண்டிடுக' என்பதற்குக் கால் கழுவியவுடனே சாப்பிடவேண்டு மென்பது கருத்து. புலராமை - உலராமல். ஏறற்க - ஏறலாகாது. துணிபு - கொள்கை.

8. கிடக்குங்கால் - படுக்கும்பொழுது. கோணம் - மூலைத்திசைகள்; வடமேற்கு முதலியன. தலைசெய்யார் - தலைவைக்கமாட்டார். மீக்கோள் - மேற்போர்வை.

## 2. நன்னெறி

1. விரவலரை - பகைவரை. மருவின் - சேர்ந்திருப்பாரேயானால். பலி - (அடியார் செய்யும்) பூசையை. ஏல் - ஏற்றுக்கொள்ளும். கடவுள் - சிவபெருமானுடைய. அவிர் - விளங்குகின்ற. கட்செவி - பாம்பு. புள்ளரசை - கருடனை.

2. தீர்வு - தீர்ப்பதை. உள்ளார் - எண்ணுதவராய். உறும் - நேருகிற. வெம் குறை - கொடிய துன்பங்களை. தீர்க்கிற்பார் - நீக்குவர். விழுமியோர் - பெரியோர். திங்கள் - சந்திரன். கறை - களங்கம்.

3. தொலையா - அழியாத. தோற்றத்தோம் - பிறந்திருக்கிறோம். செருக்குச் சார்தல் - செருக்கு அடைதல். இலை - இல்லை. ஆல், அசை. இரைக்கும் - ஒலிக்கும். ஏர்ங்கோதாய் - குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்த பெண்ணே. மேருவரைக்கும் - மேருமலைக்கும். வளைவு - (வில்லாக) வளையுந்தன்மை. வந்தன்று - வந்தது.

4. இங்கு அன்பு இல்லானுக்கு எனக் கூட்டுக. எல்லாம் - வாகன முதலிய எல்லாம். அவற்கு - அன்பில்லாதவனுக்கு. என் செய்யும் - என்ன பயனைத் தரும். நல்லாய் - நற்குணமுடைய பெண்ணே. மொழி இல்லார்க்கு - ஊமைகளுக்கு. முது நூல் - பழமையான நூல். ஏது - என்னபயன் தரும். தெரியும் - (பொருள்களை) அறிதற்குரிய.

5, தலைமையும் - (செல்வம் முதலியவற்றாலாகின்ற) உயர்வையும். தம்மை மதியார் - தம் உயர்நிலையையும் கருதாமல். தம்மின் - தம்மைக்காட்டிலும். இழியினும் - தாழ்ந்தவராயினும். செல்வர் - சென்று. இடர் - துன்பத்தை. அல்கு கழியினும் - சிறிய உப்பங்கழியிலும்.

6. நல்கூர்ந்தான் - வறுமை யடைந்தான். ஈந்து - கொடுத்து. பைந்தொடீஇ - பசும்பொன்னாற் செய்த

வளையலை அணிந்த பெண்ணே. பயன் - (கனியாகிய) பயனை. நில்லா - நிலைக்காத; அழிந்த. அரம்பை - வாழை மரம்.

7. இருநீர் - கடல் (சூழ்ந்த). வியன் - பரந்துள்ள. பொன் செய்து - பொன்னாற் செய்யப்பட்டு. அதிர் - ஒலிக்கின்ற. வளையாய் - வளையலை அணிந்த பெண்ணே. அழற் கதிர், சூரியன். தண்என் கதிர், சந்திரன்.

8. தேமா தென்றல் வரத் தளிர் காட்டித் திருந்தும்; சுழல்கால் வர வருந்தும்; (அதுபோல) வல்லோர் நல்லோர் வரவான் நகைமுகங் கொண்டு இன்புறீஇ, அல்லோர் வரவான் அழுங்குவார் என முடிக்க.

தேமா - இனிய கனி தரும் மாமரம். திருந்தும் - அழகுடன் விளங்கும். சுழல்கால் - சூறுவளி. அல்லோர் - நல்லவர் அல்லாதவர்; தீயோர். அழுங்குவார் - வருந்துவர்.

9. எரியின் இழுதாவர் - நெருப்பிலிட்ட நெய் போல் உருகுவர். தெரி இழாய் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்ணே. மண்டு - மிக்க. கலுழும் - (துன்புற்று) அழும்.

10. ஆக்கும் - எல்லா நன்மைகளையும் உண்டாக்குகிற. மீக்கொள் - மேலாகக்கொள்ளும். அரவின் - பாம்பினிடத்தில் உண்டான. பருமணி - பருத்த ரத்னத்தை. கடு - நஞ்சை. கவரார் - கைக்கொள்ளமாட்டார்.

11. முனிவினும் - கோபங்கொண்ட காலத்தும். மூதறிஞர் - சிறந்த அறிவுடையோர். உள்ளக் கனிவினும் - மனமகிழ்ச்சியோடு இருக்குங்காலத்தும். கயவர் - கீழ் மக்கள். கதலி - வாழை. அறை - சொல்லும். ஆகும் - பயன்படும். நனி விளைவு இல் - மிக முற்றிய நிலைமை இல்லாத.

12. கொள்ளும் - (உயிரைக்) கொள்ளுகிற. கொடுங் கூற்றம் - கொடிய யமன். குறுகுதல்முன் - அணுகு

தற்கு முன்னே. கனிந்து - இளகி, உய்க - பிழைப்பாயாக. அணை கோலி - அணையைக் கட்டி.

13. பிறர் தாக்கும் துயரம் - அயலாரை வருத்து கின்ற துன்பத்தை. நேர்இழாய் - தக்க ஆபரணங்களை அணிந்த பெண்ணே. மெய் - உடம்பில். தாக்கும் - மோதுகின்ற. வியன் - நீண்ட. கடிது - விரைந்து.

14. எள்ளாது - இகழாது. இழிஞர் - கீழோர். விள்ளா - நீங்காத. அது - அந்தப் போற்றுதலை. வேண் டார் - விரும்பார்.

15. தகார்க்கு - தகுதி இல்லாதவர்க்கு. மிக்கார்க்கு - எல்லை மீறி நடப்பவர்க்கு (கெட்டவர்க்கு). காட்டு முளி புல்லுக்கு - காட்டில் உலர்ந்த புல்லுக்கு.

16. பொன் - பொன்னுபரணங்களை. புனையா - அணி யப்படாத. மன்னும் - நிலைபெற்ற. ஒவ்வார் - ஒப்பாக மாட்டார். பொன்னே - இலக்குமி போன்றவளே. மின் னும் - ஒளி வீசுகின்ற. பூணும் - அணியும். பிறவுறுப்பு - காது கை கால் முதலிய அவயவங்கள். ஒக்குமோ - ஒப் பாகுமோ ; ஒப்பாகா.

## 3. திரிகடுகம்

1. கணக்காயர் - ஆசிரியர். பிணக்கு அறுக்கும் - மாறுபாட்டைத் தீர்க்கும். அவைக்களன் - நீதிமன்றம்; சபை. பாத்து - பகுத்து. அயல் இருப்பும் - அருகில் வசிப்பதும்.

2. வருவாயுள் - வருமானத்தில். கால் - காற்பங்கு. வழங்கி - தருமத்திற்குச் செலவிட்டு. தாம் உண்ணு வதற்கு இரண்டுபங்கும், சேர்த்து வைப்பதற்கு ஒரு பங்கும் எடுக்கவேண்டுமாதலால், அறத்தின்பொருட்டு ஒரு பங்கைச் செலவிடவேண்டுமென்று கூறப்பட்டது. செரு - போர். வாய்ப்ப - பயன்படும்படி. செய்தவை -

செய்தவற்றிற்காக. நாடா - (அரச சம்மானத்தை) நோக்காத. நாடி - ஆராய்ந்து. நல்லவை - நல்ல நூற்பொருளை. நலம் மாட்சி - நல்லறிவின் பெருமை. கோள் - கொள்கை.

3. வைததனை - ஒருவன் வைத (திட்டிய) நிந்தை மொழிகளை. கட்டி - வெல்லம். ஊறிய - தோய்ந்த. மெய்ப்பொருள் - உண்மையாகிய பரம்பொருளை.

4. நன்றிப் பயன் - (ஒருவன் தனக்குச்செய்த) உதவியினது பயனை. தூக்கா - அளந்து அறியாத. நாண் இலியும் - நாணமில்லாதவனும். மன்றில் - நியாய சபையில். கொடும்பாடு - தீங்கைத் தருஞ் சொல்லை. எச்சம்- மக்களை, புகழை.

5. 'ஈதற்குப் பொருளைச் செய்க' என்க. செய்க- சம்பாதிக்க. அறநெறி - தருமவழி. பெருநூலைச் செய்க எனக் கூட்டுக. புரிந்து - விரும்பி. இருள் உலகம் - நரகம். ஆறு - வழி.

6. கொண்டான் - கொண்ட கணவனுடைய. குறிப்பு அறிவாள் - குறிப்பு அறிந்து நடப்பவள். கொண்டன - மேற்கொண்ட விரதங்களை. செய்வகை - செய்யும் முறைப்படி. கொடிது - தீங்கினை. ஒரீஇ - நீக்கி. இம் மூவரும் தருமத்தின்வழி நிற்பவராகையால், உயிரில்லாத பொருளும் இவர்சொற்படி நடக்கும் என்பதாம்.

## 4. நான்மணிக் கடிகை

2. மனைக்கு - வீட்டிற்கு. வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியுடைய பெண். நட்டோரை - நண்பர்களை. அவைக்கு - சபைக்கு. மூத்தோரை - (கல்வி கேள்விகளால்) முதிர்ந்த பெரியோரை. 'மூத்தோரை இல்லா அவைக்களனும்' (திரிகடுகம் 1) என்பதோடு ஒப்பிடுக.

3. கொண்டானின்-கொண்ட கணவனைக்காட்டிலும். துன்னிய கேளிர் - நெருங்கிய சுற்றத்தார். மக்களின் - மக்

களைக்காட்டிலும். ஒண்மைய ஆய் - பிரகாசமுடையனவாகி. சான்ற - மிகுந்த. ஈன்றாளின் - பெற்ற தாயைக்காட்டிலும்.

3. அல்லாக் கடைகட்டும் - (நல்லாரும் நன்னெறிச் செல்வாரும்) அல்லாத கடைப்பட்ட மக்களுக்கும். தம் கைத்து உடையார்க்கும் - தம்முடைய கையில் பொருள் உடையவர்க்கும்.

5. கல்லாமை - படிக்காமை. வளம் - செல்வம். வள்ளன்மை - கொடுக்குந்தன்மை. கிளைஞர் - சுற்றத்தார். தமர் அல்லார் - உறவினர் அல்லாதவர். கையகத்து - கையில். ஊண் - உணவு.

6. திரியழல் - தீபம். தொழுப - தொழுவார்கள். இகழ்ப - இகழ்வார்கள். கல்லாது - படிக்காமல். வயதில் பெரியோனாயினும் கல்லாதவனாயின் அவனைக் கைவிட்டு, வயதிற் சிறியவனாயினும் கற்றவனாயிருப்பவனை உலகத்தார் பாராட்டுவர்.

## 5. திருக்குறள்

1. அறம் ஆழி - தருமசமுத்திரம் ஆகிய. பிறஆழி - மற்றைக்கடல்கள் ; பொருளும் இன்பமும்.

2. அறத்தான் - அறத்தோடு. புறத்த - இன்பத்திற்குப் புறம்பானவை ; துன்பத்தன.

3. ஈன்ற பொழுதின் - பெற்றபோது உண்டாகிய மகிழ்ச்சியினும். உவக்கும் - உவப்பாள். சான்றோன் - (கல்விகேள்விகளால்) நிறைந்தவன்.

4. பணிவு - தாழ்ச்சி, வணக்கம். பிற அல்ல-மற்ற அணிகள் அணியாகா.

5. ஞாலத்தின் - பூமியினும். மாண - மிக.

6. தகைத்து - சிறப்பினை உடையது.

7. இழுக்கம் - தவறுதல்.

8. ஒறுத்தார்க்கு - தண்டித்தவர்க்கு. பொன்றுந் துணையும் - (உலகம்) அழியும் அளவும்.

9. அழுக்காறு - பொறாமை. திரு - செல்வத்தை. செற்று - கெடுத்து. தீயுழி - நரகத்தில். உய்த்துவிடும்- செலுத்திவிடும்.

10. பெயர்த்தும் - மீண்டும், திரும்பவும்.

11. பயன் - பயன்படுகின்ற.

12. இசை பட - புகழ் உண்டாக. ஊதியம் - பயன்.

13. உள்ளலும் - நினைத்தலும். கள்ளத்தால் - அறியாதபடி. கள்வேம் - வஞ்சித்துக்கொள்வேம்.

15. மறத்தல் - மறந்துவிடுக. யார்மாட்டும்-எவரிடத்தும். தீய - தீயவை.

16. இன்னா - துன்பந்தருபவற்றை.

18. எனைத்தானும்-எவ்வளவாயினும், சிறிதாயினும். ஆன்ற - நிறைந்த.

19. பீலி - மயிற்பீலி. பெய் - ஏற்றிய. சாகாடு - வண்டி. சால - அதிகமாக.

20. கூம்பும் பருவத்து - தொழில் செய்யாது சும்மா இருக்குங்காலத்தில். சீர்த்த இடத்து - (காலம்) வாய்த்த போது.

21. அடும் - கொல்லும்.

22. உள்ளம் - ஊக்கம்.

23. மடிமை - சோம்பல். ஒன்னார் - பகைவர்.

24. விழையான் - விரும்பாதவனாய். இடும்பை-துன்பம். உறுதல் - அடைதல்.

25. எண்ணிய - நினைத்தவற்றை. எண்ணியாங்கு - நினைத்தபடியே. எய்துப - அடைவர். திண்ணியர் - உறுதியுடையவர்.

27. மருவுக - பழகுக. ஈத்தும் - கொடுத்தாயினும். ஒருவுக - விடுக. ஒப்பு இல்லார் - உலகநடையோடு ஒத்தல் இல்லாதவர்.

28. மானம் வரின் - (உயிர் நீக்கத்தால்) மானம் அடையும் நிலைமை வந்தால்.

39. இரவார் - யாசிக்கமாட்டார். கரவாது - ஒளிக்காமல். கை - தம் கையால். செய்து - (இழிதொழில்) செய்து. ஊண் - உண்ணுதலை. மாலையவர் - இயல்பாக உடையவர்.

## 6. காந்தி அம்மானை

இதனை இயற்றியவர் வித்வான் குமாரகுரு ஆதித்தரவர்கள். இப்பகுதி இரண்டாவதாகிய "ஆப்பிரிக்காக் காண்ட"த்தில் உளது.

ஊணகம் - சாப்பாட்டு விடுதி. இன்ன - இவை போன்றன. காவலன் - போலீஸ்காரன். அசைத்து-கட்டி. சான்று - சாட்சி. வைத்தியர் சான்று - டாக்டர் ஸர்டிபிகேட்.

## மைனுவும் முயலும் மோசம்போன கதை

இது பஞ்சதந்திரத்தில் உளது. இதன் ஆசிரியர் வீரமார்த்தாண்டதேவர்.

1. மோனர் - மௌனிகள். ஒ ஆறு - ஒழிதல் இல்லாத. மேவுவர் - சேருவர். பூவை - மைனு.

2. நிகர் - சமானம். இன்றி - இல்லாமல். உன்னும்- நினைத்தற்குரிய.

3. தரு - மரம். வாவி - இறங்குகிணறு, தடாகம். கூபம் - கிணறு.

4. இருதலை - இரண்டு பக்கம். துங்கர் - உயர்ந்தோர்.

5. பொருவுஇல் - ஒப்பு இல்லாத. வெருவி - அஞ்சி. மேவி - விரும்பி. உரைப்பம் - சொல்வோம்.

6. இருடி - ரிஷி. பரவினர் - வாழ்த்தினர்.

7. அறிந்தனிர் - அறிந்து.

8. சாற்ற - சொல்ல. மாற்றம் - சொல். பட்சபாத வழக்கு - ஓரவழக்கு.

10. நண்ணிய - சேர்ந்த.

11. மாரீசம் - வஞ்சனை. துலங்கு - விளங்குகின்ற. மார்ச்சாலன் - பூனை.

12. கண்டம் - கழுத்து. செருக்கி - கர்வங்கொண்டு. மொய் - நெருங்கிய.

## இயற்கை வருணனை

இப்பகுதி, திரு. தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள் இயற்றியது.

### 1. கிளி

2. ஆரம் - ஆரம்போன்ற கோடு. இயம்பு - சொல்.

3. மாணிக்கம், சிவப்புநிற ரத்தினம். மாகதம், பச்சை நிற முடையது.

5. சித்திரம் - அழகு.

### 2. ஆறு

2. கண் அறை - கண்வாயாகிய அறை. திட்டு - நீர் சூழ்ந்த மேட்டுநிலம். திடர் - மேடு. சீப்பு- சீப்புப்பலகை.

3. அழல் - வெப்பம்.

5. கால் - கால்வாய் என்பது ஒரு பொருள்.

6. நெஞ்சம் - உள்ளிடம்.

## அழகர் குறவஞ்சி

இதன் ஆசிரியர் கவிகுஞ்சர பாரதியார்.

133234
சென்னை 600 008